# பொன்விழா மலர்

1946—1996

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 FEB 2001
PERIODICALS DIVISION

# GOLDEN JUBILEE NUMBER

VAYAVILAN
MADHYA MAHA
VIDYALAYAM

வயாவிளான்
மத்திய மகா
வித்தியாலயம்

University of Jaffna
373
VAY
250137(AR; Main)

27-07-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்

பொன் விழாவை எடுத்து நிற்கும்
யாழ்/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்
தமது கல்விச் சேவையில் என்றென்றும்
மேலோங்கி நிற்க வாழ்த்துகிறோம் இந்நாளில்.

தரமான கற்பக உற்பத்திப் பொருட்களுக்கு
நாடவேண்டிய இடம்

"கற்பகம்"

பஸ் நிலையம், — அச்சுவேலி.

அச்சுவேலி
பனை தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கம் (ம.து.)
பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.

---

★ பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம் ★

தரமான அரிசி வகை, பலசரக்குப் பொருள்கள், எவர் சில்வர் பாத்திரங்கள்
சிறுவர் அன்பளிப்புப் பொருள்கள் யாவற்றையும்
நிதான விலையிற் பெற்றுக் கொள்ள
எம்மை நாடுங்கள்

மங்கை வர்த்தக நிலையம்

பலாலி வீதி. — உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா மலர்

## 1946 - 1996

373
YAY
AR
UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 FEB 2001
PERIODICALS DIVISION
UNIVERSITY OF JAFFNA
LIBRARY

*மலர்க் குழு:*

செல்வி சத்தியா சிவபாதம்
செல்வி லோசனா கந்தசாமி ஐயர்
திரு. ச. இராசலிங்கம்

ARCHIVES

250137

250137

University of Jaffna
250137
Library

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
உரும்பிராய்
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக் கீதம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின்
மாண்பினை உயர்த்தும் கொடி பறக்குதுபார்.
பறக்குதுபார் கொடி பறக்குதுபார் கொடி
பறக்குதுபார் கொடி பறக்குதுபார்.

மாணவர் எமக் குயர்ந்த மேன்மைகளைத் தருகின்ற
மன்னு பேராலயத்தின் கொடியிது
மாநிலத்தின் மகிமைகளில் மலர்ந்து நாம் எழுந்திட நன்
மார்க்கங்களைத் தருங் கொடிதான் பறக்குதுபார்.
(வயாவிளான்)

ஆண்மை தரும் கல்வி கேள்வி அறிவியற்கலைகளோடு
ஆற்றல் பல தருகின்ற கொடியிது.
அனுதினமும் அக மகிழ்ந்து அறிவூட்டும் கல்லூரி
அன்னையவள் கொடியுயர்ந்து பறக்குதுபார்.
(வயாவிளான்)

சாதி மத பேதமின்றிச் சன்மார்க்க நெறி நிற்கும்
சால்பினை உணர்த்துகின்ற கொடியிது
சாந்தி சக்தி ஜோதி கீர்த்தி எங்கள் வாழ்வில் எய்திடவே
சாலவும் உழைக்கும் கொடி பறக்குதுபார்.
(வயாவிளான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வாழ்க
இயைவுறும் ஆசிரியரும் மாணவர்களும் வாழ்க (வயா)

செம்மை நெறிநில் என்னும் எங்கள்
சீரிய வாய் மொழியின்
உண்மை உணர்த்தும் எண்ணும் எழுத்தும்
ஊக்கமுடன் பயில்வோம்

துணிவும் பணிவும் தொழில்கள் பலவும்
இணையும் கல்வியுடன்
இணையிற் கலைகள் பிறவும் நிறைவாய்
இயைவுடன் கற்றுயர்வோம். (வயா)

மாணவர் நலனை மாண்புடன் நாளும்
பேணிவரும் அதிபர்
ஆள்நலப் பணியும் ஆற்றலும் வாய்ந்த
ஆசிரியர்களுடன்.

செல்வச் சிறுவர் அன்புடன் ஒன்றாய்ச்
சேர்ந்துநன் னெறிபயிலும்
கல்விக் கோயில் என்னத் திகழும்
கற்றவர் தினம் புகழும். (வயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

'இப்பாடசாலையின் சிற்பி' எனப் போற்றப்படும்
எமது ஆரம்பகால அதிபர்,
**அமரர் க. காராளசிங்கம்**
அவர்களின் பொன்னடிகளில்
இம் மலரினைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்

— **மலர்க் குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நுழை வாயில்"



கல்லூரிகளின் வரலாற்றுப் பாதையில் வெள்ளிவிழா, பொன் விழா, வைர விழா, பவள விழா, நூற்றாண்டு விழா முதலானவை முக்கிய மைற்கற்களாக அமைகின்றன. இந்நிகழ்வுகளை பெரு விழாக்களாக, திருவிழாக்களாகக் கொண்டாடி அக்கல்லூரிச் சமூகம், மன நிறைவு காண்பதுண்டு. அத்தகைய வேளைகளிற் தமது கடந்தகாலச் செயற்பாடுகளையும், சாதனைகளையும் புலப்படுத்தும் வகையில் விசேட மலர்களை வெளிவிடுவதுமுண்டு. அவை வரலாற்று ஏடுகளாகி எதிர்காலத்தில் அக்கல்லூரிக்கும் அதனைச் சார்ந்த சமூகத்துக்கும் பல வழிகளிற் பயன் தருகின்றன.

இன்றைய துன்பச் சூழலிலும் இவ் வரலாற்றுக் கடமைகளிலிருந்து நாம் தவறக் கூடாது எனக் கருதிப் பொன்விழா இறுதி நிகழ்வினை இரு நாட்களாகக் கொண்டாடுவதோடு இம் மலரினையும் வெளியிடுகின்றோம். 16-01-96 எமது பொன்விழா ஆரம்ப நாள். அவ்வேளையில் நாம் அனைவருமே ஏதிலி ளாகத் தென்மராட்சிக்குப் புலம்பெயர்ந்திருந்தோம். அங்கு எமது பாடசாலையின் கட்டமைப்பைப் பேணுவதற்கு இவ் விழாவினை ஒரு கருவியாக்கிப் பாடசாலைச் சமூகத்தை ஒன்று திரட்ட முற்பட்டோம். அக்கால கட்டச் சூழலுக்கு ஏற்றவாறு மாதாந்த நிகழ்வுகளை நடத்த முற்பட்டு முதல் மூன்று மாதங்களிலும் முறையே அல்லாரை, பருத்தித்துறை, மட்டுவில் ஆகிய இடங்களில் சிறு விழாக்களை நடாத்தினோம்.

ஏப்பிரல் 96 இல் வலிகாமத்துக்கு மீள்புலப் பெயர்வு ஏற்பட்டது. அழிந்திருந்த எமது பாடசாலையை மறுசீரமைக்க ஓர் ஆண்டு சென்றது. எனவே இதன் பின்பு எமது பொன்விழாச் செயற்பாடுகளை நிறைவு செய்ய முனைந்தோம்.

இத் தொடரில் கடந்த ஏப்பிரலில் கல்விக்கண்காட்சி, மேயில் பரிசளிப்பு விழா, யூனில் விளையாட்டு விழா என்பவற்றை நடாத்தியதோடு 15 ற்கு மேற்பட்ட பல்வேறு போட்டிகளும் நடாத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூன் 15 இல் சுவிற்லாந்து, சூறிச் நகரில் எமது பழைய மாணவர்கள் ''கரோலின் இன்னிசை இரவு'' நிகழ்வாகப் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியமை பாராட்டுதற்குரியது.

1972 இல் வெள்ளிவிழா மலர் ஒன்று வெளியிடப் பெற்றமையால் அதற்குப் பிந்திய செய்திகளைக் கொண்டு இம் மலர் வெளிவருகின்றது. 1986 முதல் நிகழ்ந்து வரும் போர்ப்பிரளயம் எமதுபாடசாலையை, பாடசாலை ஆவணங்களைச் சுட்டெரித்து விட்டது. எனவே கைக் கெட்டிய தகவல்களையே இங்கு எம்மாற் தரமுடிகின்றது.

பதினொரு ஆண்டுகளாக எமது பாடசாலை எதிர்கொண்ட வேதனைகளும், சோதனைகளுமே விதந்து பேசப்பட வேண்டிய வரலாறாக உள்ளன. அவற்றை எதிர்கொண்டு எமது கலாலயத்தை அழியாது, சிதையாது பாதுகாக்க உதவிய உத்தம கரங்களை வாழ்த்தும் மலராக இம் மலர் அமையட்டும்.

சொந்த வளாகத்தில் 1989 இல் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது நாம் தயாரித்துச் செயற்படுத்திய புனரமைப்புத்திட்ட வரைபையும் இங்கு வெளியிடுகின்றோம். இத்திட்டத்தை அங்கீகரித்துக் கல்வித் திணைக்களம் பல கட்டிடங்களை நிர்மாணித்து வந்தது. எமது சொந்த வளாகத்தைக் கைவிட்டு ஏழு ஆண்டுகளாகின்றன. மீண்டும் அங்கு அண்மைக்காலத்தில் செல்வதற்கான நம்பிக்கை ஒளி எமக்குத் தெரியவில்லை. எனவே, எதிர்காலத்தவர்களுக்கு எமது சிந்தனையைக் கையளிக்கும் வகையில் அப்புனரமைப்புத் திட்ட வரைபடத்தை இங்கு இணைத்துள்ளோம். அப்படத்தினை உரிய முறையில் வரைந்து தந்த ஊரெழு திரு. S. கனகசபாபதி (நிலஅளவையாளர்) அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இம்மலருக்குக் ஆசிச்செய்திகள் கட்டுரைகள் தந்துதவிய, பெரியார்கள் நிதிவளம்சேர விளம்பரம் தந்துதவிய வர்த்தகர்கள், கூட்டுறவுச் சங்கத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

ஈழகேசரி நா. பொன்னையாவின் பங்களிப்புடன் அவரது சொந்தக்காணியில் உருவாகியது எமது பாடசாலை. அவர் உருவாக்கிய - அவரை உருவாக்கிய - திருமகள் அழுத்தகத்தில் இம்மலரை அச்சிட விரும்பினோம். அதன் இன்றைய உரிமையாளர் எமது விருப்பை நிறைவேற்றிச் சிறந்த முறையில் இம்மலரை அச்சேற்றித் தந்தனர். அவர்களுக்கும் எமது பாடசாலை சார்பில் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. இம் மலருக்கான அட்டையை அச்சிட்டுத்தந்த ஏழாலை மகாத்மா அச்சகத்தினர்க்கும் எமது உளமார்ந்த நன்றி.

— **மலர்க்குழுவினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகிழக்கு மாகாணசபை

கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சு செயளரின்

# ஆசி உரை

வரலாற்றுப்புகழ் மிக்க வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பெருமைமிக்க கல்விச் சேவையின் அரைநூற்றாண்டு நிறைவு மனநிறைவைத் தருகின்றது. அதே வேளை, அவர்களால் வெளியிடப்படும் பொன்விழா மலர் வெளியீட்டுக்கு ஆசி உரை வழங்குவதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

சிந்தாதேவி உறைகின்ற செழுங்கலை நியமனங்களான பாடசாலைகள் தம்மைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தின் கட்டமைப்புக்களுடன் இடைவினைத் தொடர்பு உடையனவாக விளக்குகின்றன. எனவே அப்பிரதேசத்தின் சகலதுறை வளர்ச்சிக்கும் மையச்சக்கரமாக விளங்கும் கலாசாலைகளை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

சமூக அமைப்பாக விளங்கும் பாடசாலைகள் மாணவர்களின் உடல், உள, மனப்பாங்கு சார்ந்த துறைகளின் விருத்தியையே முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளன. இவற்றினை மையமாக வைத்தே கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு தனது செற்பாடுகளை ஆற்றுகின்றது.

சமுதாயத்தின் ஒளிவிளக்குகளாய், வழி காட்டிகளாய் விளங்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் மாணவர்களை மையமாக வைத்தே கற்பித்தல் நுட்பங்களை பிரயோகிக்க வேண்டும். இற்றைய மாணவர்களே நாளைய சமுதாயம், கல்வி சமுதாயத்தின் கண் போன்றது; கல்வி அளிப்போர் சமுதாயத்திற்குக் கண் அளிப்போராவர். அந்த வகையில் ஆசிரியத் தொழில் போற்றப்பட வேண்டியது.

ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்தில் சமுதாய வளர்ச்சியில் தனக்குப் பெரும் பங்கு உண்டு என்ற நோக்கினைக் கொண்டு கல்வியை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது திறமையைத் தானே உணர வழி வகுக்க வேண்டும். அத்தகைய நிலையங்களாக கல்விக் கூடங்கள் அமைய வேண்டுமெனவும் கூறி, மேன்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

வடகிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வலயம் II கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச்செய்தி

பொருளாதார நிலையில் பிற்பட்டு வாழும் கிராமப்புற மக்கள் இடை நிலைக் கல்வியை ஆங்கில மொழிமூலம் பெற்றுச் சமூகப் பெயர்ச்சி பெறவேண்டும் என்னும் நோக்கோடு 1937 முதல் இந்நாட்டில் மத்திய கல்லூரிகள் நிறுவப்பட்டன. விவேகமான ஏழை மாணவர்கள் புலமைப் பரிசில் பெற்று விடுதி வசதிகளுடன் உயர்கல்வி வரை பெறும் வாய்ப் பினை அளிக்கும் நிறுவனங்களாக இவை வளர்ந்தன.

1946 இல் 16 ஏக்கர் பெருநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் வளர்ச்சிகண்டு 1500 க்கு மேற்பட்ட மாண வர்களுடன் யாழ்மாவட்டத்தின் முதன்மையான பாடசாலைகளில் ஒன் றாகச் சிறப்புடன் விளங்கியது. கண்ணூறுபட்டாற்போல், நாட்டு நிலைமையால் 1986 முதல் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்துத் தற்போது உரும்பிராயில் இயங்குகின்றது.

இடர்சூழ்ந்த இக்காலகட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளில் 70 வீதத்திற்கு மேற்பட்ட பெறுபேறுகளை பெற்றுவருவதுடன் 1994 இல் கணிதத்துறையிலும் 1995இற் கலைத்துறையிலும் நான்கு பாடங்களி லும் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களை உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் எப்பாடுபட்டாயினும் கல்வி கற்பது நல்லது என்னுங் கருத்துப்பட

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
................................ .. ..... ..... '' எனக்கூறுகின்றான்.

மேற்கூறிய செய்யுளில், காணப்பட்ட கல்வியின் முக்கியத்துவத்தை யும் கல்விச் சிறப்பையும் பெற, கல்வியை வழங்குவது பாடசாலை களின் தலையாய கடமையாகும்.

இடர்களுக்கு மத்தியிலும் சிறப்புடன் கல்விச் சேவையை வழங்கும் இவ்வித்தியாலயம் மேலும் பல சிறப்புக்களையும் பெற்று வயாவிளான் மண்ணின் தாயாக வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

கல்வித்திணைக்களம்,
இருபாலை, கோப்பாய்.

சி. சிவராசா
கல்விப்பணிப்பாளர்.
யாழ். வலயம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழைப் பிரதேசச் செயலரின்

# ஆசிச்செய்தி

வயாவிளான் மத்திய கல்லூரி தனது பொன்விழாவைக் கொண்டாடுவதோடு விழாமலர் ஒன்றையும் வெளியிடுவது குறித்து பெருமகிழ்வெய்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கலைக்கூடங்கள் அனைத்தும் ஒவ்வோர் விதத்திற் பாதிக்கப்பட்டனவே. ஆனால் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புப்போல வேறு எக்கலைக் கழகத்திற்கும் ஏற்பட்டிருக்க முடியாது என்பது புனைந்துரையாகாது. வித்தியாலயம் தனது சொந்தக் கட்டிடத்தை விட்டு, சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறி ஆண்டுகள் பலவாயின. இன்னும் தன் கிராமத்தை எட்டிப்பார்க்கவே முடியாத நிலையில் அக்கல்லூரி இருக்கிறதென்பதை நாம் மறந்துவிடமுடியாது.

இக்கலைக்கழகம் வேறு கிராமங்களில் இடவசதியற்ற நெருக்கடி நிலையில் கூனிக்குறுகி நின்றாலும் தனது நாளாந்தப் பணிகளை நிறைவேற்றுவதோடு விசேட நிகழ்வுகளையும் காலந்தவறாமற் செய்யமுற்படுவது அதனோடு சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் பெருமை தருவதொன்றாகும்.

பொன்விழா மலர் நறுமணங்கமழ்வதாக வெளிவருமென்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. அதிபர், ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரதும் ஊக்கத்தையும் சேவை மனப்பான்மையையும் நன்கு தெரிந்து வைத்தே நான் இம்முடிவுக்கு வந்துள்ளேன்.

வலிகாமம் வடக்கில் உள்ள மிகச்சிறந்த கல்விக் கூடங்களின் தரத்தை எட்டிப்பிடிக்க வீறுநடை போட்ட காலத்தில் அசம்பாவிதங்கள் சம்பவித்தது எங்கள் தவக்குறைவே போலும். இக்கல்லூரி தன்னூருக்குச் சென்று தனது சொந்தக்காலில் நிற்பதைக் குறிக்கும் விடிவெள்ளியாக பொன்விழாமலர் அமையட்டும்.

**நா வேதநாயகன்**
பிரதேசச் செயலர்

தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்

அவர்களின்

# ஆசிச்செய்தி

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயக் கல்வித்தாய் தனது ஐம்பது ஆண்டுகால வரலாற்றில் பல சோதனைகளையும் வேதனைகளையும் எதிர் கொண்டபோதும் இந்நாட்டின் கல்வி வரலாற்றில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப் படக்கூடிய பல சாதனைகளை நிலை நாட்டி வருவதை நானறிவேன். வெற்றிப் பெருமிதத்துடன் பொன்விழாக் கொண்டாடும் இவ்வேளையில் 'மென்மேலும் வளர்ந்து செழிப்புறுக' என வாழ்த்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இரு கீற்றுக் கொட்டில்களில் தோன்றி, 250 பரப்புடைய பெரு நிலப்பரப்பில் மாடிகள் நிரம்பிய மாட்சிமை கண்டு, மீண்டும் கீற்றுக் கொட்டில்களில் வேற்றூரில் இயங்கும் அவல நிலையை இப்பாடசாலை எய்திய போதிலும் தனது இலட்சியப் பயணத்தில் வீறுநடைபோடுகின்றமையைக் காண்கின்றேன்.

மிக நெருக்கடியான இக் கால கட்டத்திற்கூட போதிய வளங்கள் இல்லாத நிலையிலும் ஏழை மாணவச் செல்வங்களின் கல்வித் தாகத்தினைத் தீர்க்கும் அரும்பணியில் அர்ப்பணிப்பு உணர்வோடு உழைக்கின்ற அதிபர் ஆசிரியர்களை உளப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன்.

கல்வித் திணைக்களத்தின் கரங்களைக் காத்திராது, காலமறிந்து பேருதவிகள் செய்யும் இப்பாடசாலைச சமூகம் சார் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகளையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

வாழ்க ! வளர்க ! வயாவிளான் ம. ம. வி.

தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்,
உடுவில்.

**ஆ. கமலநாதன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கொடிக்கீதம் ... ... ... ... | II |
| கல்லூரிக் கீதம் ... ... .. ... | III |
| சமர்ப்பணம் ... ... ... ... | IV |
| நுழைவாயில் ... ... .. ... | V |
| ஆசிச்செய்தி ... ... ... ... | VII |
| அதிபர் அறிக்கை ... ... ... ... | 1 |
| இடர்சூழ்ந்த வேளையில் எமது கல்விச் சாதனை | 7 |
| எமது பொன்விழா நிகழ்வுகள் ... ... ... | 10 |
| வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் வரலாறு ... | 13 |
| நமது கல்லூரியின் பொற்காலம் . ... ... | 16 |
| காலத்தை வென்றுநிற்கும் கலாலயம் ... ... | 19 |
| இடரினும் தளரினும் எம்பணி தொடரும் .. . | 23 |
| வயவையின் அன்னை நீயே நிலைபெற்று வாழி அம்மா | 26 |
| உதயன் பத்திரிகையிலிருந்து ... ... ... | 27 |
| மண்ணிலோர் வெண்ணிலா ... ... ... | 28 |
| பாடசாலையின் பார்த்தசாரதி ... ... ... | 29 |
| பாடசாலைக்கோர் அன்னை ... ... ... | 30 |
| மாணவர் பகுதி ... ... ... | 31 |
| வழிசொல்ல மாட்டீரோ? ... ... ... | 42 |
| எமது சமூகத்தின் இன்றைய அழுத்தங்கள் ... .. | 44 |
| கனவுகளிலிருந்து வாழ்வுக்கு - தொலைக்காட்சி, தொடர்பான சமூக உளவியற்தரிசனம் ... ... | 48 |
| புதிய கற்பித்தல் நுட்பவியல்கள் ... ... ... | 51 |
| மண்ணில் நல்ல வண்ணம் வாழவழி வகுக்கும் சங்கற்பம் - ... ... | 54 |
| இறைவன் மனிதன் ஓவியம் ... ... ... | 58 |
| ஈழத்து இலக்கிய வரலாறும் மாணவர்களும் ... | 60 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

*காப்பாளர் :*

திரு நா. திருநாவுக்கரசு அவர்கள்

*தலைவர் :*

திரு ஆ. சி. நடராஜா *( அதிபர் )*

*உப-தலைவர்கள் :*

திரு த. சற்குணசர்மா *( பிரதி அதிபர் )*

திரு சி. மணியம் *( கனிஷ்ட பிரிவு அதிபர் )*

*செயலாளர் :*

திரு செ. செல்வரத்தினம்

*உப-செயலாளர் :*

திரு ச. தனபாலசிங்கம்

*பொருளாளர் :*

திரு ந. நாதன்

***செயற்குழு உறுப்பினர்கள் :***

திரு க. கதிரவேலு
திரு க. பரிபூரணானந்தன்
திரு ம. பத்திநாதன்
திரு யோ. நவரத்தினசிங்கம்
திரு சி. இரத்தினம்
திரு வே. புவநேந்திரன்
திரு த. இராமச்சந்திரன்
திரு க. தங்கராசா
திரு ச. மகாலிங்கம்

## பழைய மாணவர் சங்கம்

*தலைவர் :*

திரு ஆ. சி. நடராஜா *( அதிபர் )*

*உப-தலைவர்கள் :*

திரு வ. கிருஷ்ணசாமி
திரு அ. துரைராசா
திரு த. சற்குணசர்மா
திரு சி. மணியம்

*செயலாளர் :*

திரு ந. ஜெயகுமாரன்

*உப-செயலாளர் :*

செல்வி ந. நிரஞ்சினி

*பொருளாளர் :*


திரு க. ஆனந்தராசா

***செயற்குழு உறுப்பினர்கள் :***

திரு ச. இராமலிங்கம்
செல்வி சி. சத்தியா
திரு பொ. பாலசுப்பிரமணியம்
திரு த. சிவஞானகுரு
திரு நா. ஸ்ரீகணேஸ்
திருமதி கமலா பொன்னுத்துரை
செல்வி வே. ஜெயவதனி
திரு அ. ச. பொன்னம்பலம்
திரு ந. கந்தையா
திரு எஸ். நகுலேந்திரன்
திரு அ. அரியரத்தினம்
திரு ச. இராசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திரு ஆ. சி. நடராஜா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அறிக்கை

"செம்மை நெறி நில்" என்னும் எங்கள் சீரிய
வாய்மொழியை என் சிந்தையில் இருத்தி,

*யாழ். பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி*
*பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களே!*
*திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களே!*
*எமது கல்விப்பணிப்பாளர் திரு. சிவராஜா அவர்களே!*
*பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!*
*பழைய மாணவர்களே! சிற்றூழியர்களே!*
*ஆசிரியர்களே! மாணவச் செல்வங்களே!*
*தங்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கம்.*
*பொன் விழாப் பொலிவுறும் இந்நன்னாளில்*
*உங்கள் அனைவரையும் வரவேற்பதிற்*
*பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.*

எமது தேசத்தில் புலமைசார்ந்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். கல்வியறிவு படைத்தவர்கள் கடல் கடந்த வாழ்க்கையை விரும்புகின்றனர். எனினும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் சமூகப்பற்றுடனும் தேசப் பற்றுடனும் எமது மண்ணில் நின்று உழைக்கின்ற உலகம் போற்றும் தமிழ் அறிஞர். பல தசாப்தங்களாக யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறையை அலங்கரிப்பவர். வித்துவச் செருக்கற்றவர். 'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்பதே அவரது தாரகமந்திரம். எமது அழைப்பை மனமுவந்து ஏற்று அன்னார் இன்றைய நன்னாளில் பிரதம விருந்தினராகப் பாரியாருடன் வருகை தந்துள்ளமை எமக்கு ஒரு நற்பேறாக அமைகின்றது.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களையும் எமது கல்விச் சமூகம் நன்கறியும். தமிழைத் துறைபோகக் கற்றவர். அன்னார் எமது பொன் விழா மலர் வெளியீட்டுரையை நிகழ்த்த விருக்கின்றார்.

எமது கல்விப் பணிப்பாளர் திரு. சிவராசா அவர்கள் எமது பாடசாலையிற் பங்குபற்றும் முதல் விழா இப் பொன் விழா ஆகும். பொறுமை, சாந்தம், ஆளுமை அவற்றை விட அதிக ஆர்ப்பாட்டமின்றிய ஆழமான செயற்பாடுகள் என்பன இவரது சீரிய குணங்கள். தங்கள் மூவரையும் இன்றைய நன்னாளில் வருக வருக என வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது வித்தியாலயம் வரலாற்றில் பல சாதனைகளை நிலை நாட்டி உள்ளது. அவற்றில் ஒன்று ஆறு தரம் இடம் பெயர்ந்தமையாகும். அல்லற்பட்டோம்; துயரப்பட்டோம்; வேதனைகளைச் சுமந்தோம்; உயிருக்கு ஊசலாடினோம்; குந்தியிருக்க நிலம் கேட்டுக் கெஞ்சினோம்; எல்லாமே சுவரசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அனுபவங்கள் தான். ஆசிரியர் கள் அயராது உழைத்தனர். பழைய மாணவர்கள் ஓடோடி வந்தனர். நலன் விரும்பிகள் கரங்களைத் தந்தனர். இவற்றால் இன்று நாம் உயிர்ப்புடன் மிளிர்கின்றோம். நிமிர்ந்து நடக்கின்றோம். ஒளி பொருந்திய கண்களை உருவாக்க முயன்றுழைக்கின்றோம். வலுவான கால் கொண்டு நடக்கத் துடிக்கின்றோம். தொலை தூர ஒளி நாடி எம் பயணம் தொடர்கின்றது. எம் பாடசாலையை வழி நடத்தும் ஆசிரியர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! தங்கள் அனைவரையும் நன்றியுடன் இந் நாளில் நினைவு கூர்கின்றேன்.

எல்லோருக்கும் கல்வி. கல்வியிற் சம வாய்ப்பு. அனைத்துப் பாடசாலைகளையும் வளம்படுத்தல், கிராமப்புறப் பாடசாலைகளை விருத்தி செய்தல் என்றகூச்சல்எல்லாம் அறிக்கைகளாக அலுமாரிகளில் உறங்குகின்றன. நடைமுறையில் வசதி படைத்த மாணவர்களே வளர்ச்சியடைகின்றனர். நகரப்புறப் பாடசாலையை நோக்கியே வளங்கள் குவிகின்றன. எம்பாடசாலை போன்றவற்கு இது ஒருசவால். மேலும் போர் அனர்த்தங்களும், சமூக எண்ண அழுத்தங்களும் எம் மனோ பலத்தைப்பரிசோதித்து வருகின்றன. எனினும்சிந்தனைத்தெளிவோடுஇத்தகைய சவாலை நாம் ஏற்றுக் கொண்டு வருகிறோம் பாமர, ஏழை, விவசாயதொழிலாளிகளின் பிள்ளைகள் எம்மை நாடுகின்றனர். இச் செல்வங்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். வரலாற்றின் பதிவுகள் இவற்றை எடுத்துக் காட்டும்.

1993இல் இருந்து பொன்விழாவை முன்னிட்டு மூன்றாண்டுத் திட்டம் ஒன்றினைச்வகுத்துச்செயற்பட்டோம்.'க. பொ. த உயர்தரப் பரீட்சையில் பொன் விழா ஆண்டில் 100 வீத அடைவு' என்பது இத் திட்டத்தின் இலக்கு. ஆசிரியர்களின் உறுதியும், மாணவர்களின் ஊக்கமும் இங்கு இணைந்தன.

இவ் இலட்சியப் பயணத்தின் விளைவு 1994ஆம் ஆண்டு 79 வீதம் எனக் காட்டியது. இந்துசமயம், இந்து நாகரிகம், விலங்கியல்புவியியல் தமிழ் பாடங்கள் நூறு வீத அடைவைக் காட்டின. பாடசாலை வரலாற்றில் ஏழு ஆண்டுககளுக்குப் பின்பு பொறியியல் துறைக்கு மூன்று மாணவர்கள் தெரிவானார்கள், இவர்களுள் ஐயாத்துரை சதானந்தன் 359 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் நான்காவது இடத்தையும், யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றார். கலைத் துறையைச் சேர்ந்த செல்வன் திருச்செல்வம் ஜேசுதாஸ் 300 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் ஏழாம் இடத்தைப் பெற்றார். இத்தகைய செயற்பாடுகள் பாடசாலையைப் பெருமைப்படுத்தின. ''மீண்டும் தொடங்கும் மிடுக்கு'' என வீறுநடை போட்டோம்.

இரண்டாவது ஆண்டான 1995 ஆம் ஆண்டு 5 வீதமான மாணவர்கள் பல்கலைக் கழகத் தகுதி பெற்றனர். கலைத்துறையைச் சேர்ந்த செல்வி சிவதர்சினி இராசா 321 புள்ளிகள் (4A) பெற்றும், வர்த்தகத்துறையைச் சேர்ந்த செல்வி நித்தியா நவரத்தினம் 301 புள்ளிகள் (3A,B) பெற்றும் முன்னைய சாதனைகளை முறியடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இரண்டு ஆண்டுகளில் 27 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். இவர்கள் அனைவரும் ஏழை விவசாயி தொழிலாளிகளின் பிள்ளைகளே ஆவர்.

மூன்றாம் ஆண்டான 1996 ஆம் ஆண்டு இலக்கின் சாத்தியம் பற்றி மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தோம். எனினும் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு எம்மையும் எம் நம்பிக்கைகளையும் சிதறடித்தது. விஞ்ஞான கணிதத் துறையில் ஆறு ஆசிரியர்களில் நால்வரும், வர்த்தகத் துறையில் நான்கு ஆசிரியர்களில் மூவரும், கலைத்துறையில் ஆறு ஆசிரியர்களில் ஐவரும் இடம்பெயர்ந்து சென்று இன்று வரை இங்கு திரும்பவில்லை. அதே போல் மிகப் பெரும்பான்மையான மாணவர்களும் திரும்பவில்லை. இந்நிலையிலும் 60 வீதமான அடைவினைப் பெற்றதில் மன நிறைவு அடைகின்றோம். இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்குப் பதிலாக இன்று தகுதி வாய்ந்த தொண்டர் ஆசிரியர்களை நியமித்து உயர்தர வகுப்புகளை நடத்தி வருகின்றோம்.

மாணவர்களும் ஆசிரியர்களும்:

எமது வித்தியாலயத்தில் இன்று 605 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் 22 நிரந்தர ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இடம்பெயர்வு என்னும் சூறாவளி முன்னைய ஆசிரியர்களில் 16 பேரை அள்ளிச் சென்றது. இவர்களில் திருமதி ம. மகாதேவா, திருமதி உ. தெய்வேந்திரன், திருமதி ஜெ. நடராஜா, திருமதி சி. சிவபாதம் ஆகியோர் ஓய்வு பெற்றனர். எம் ஆசிரியர் பற்றாக் குறையை அறிந்த கல்வித் திணைக்களம் திருமதி கௌ. ஸ்ரீதரன், திருமதி வி. விக்னேஸ்வரன், திருமதி ஜெ. வரதராஜன் செல்வி செ. கலாவல்லி, செல்வி க. லோசனா ஆகிய ஆசிரியர்களைத் தந்துதவியது. இன்றைய மாணவர் தொகைக்கு இன்னும் 7 ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர்.

பொன்விழா ஆண்டில் எமது ஆரம்பகால அதிபரும், இப் பாடசாலையின் சிற்பி எனப் போற்றப்படுபவருமான திரு. க. காராளசிங்கம் அவர்களும் நீண்டகாலம் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்த திரு. சி. நடராஜா அவர்களும் அமரத்துவம் எய்தி உள்ளனர். அவர்களின் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவர்தம் குடும்பங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

விளையாட்டுத்துறை :

எமது மூன்றாண்டுத் திட்டச் செயற்பாடுகளின் போது இணைப் பாடவிதானத்திலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இரவல் மைதானங்களில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளைத் திறம்பட நடத்தினோம். மாணவர்கள் கோட்ட மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பல பரிசில்களை வென்றெடுத்தனர். வலைப் பந்தாட்டத்திலும் கோட்ட மட்டத்தில் பங்குபற்றி வெற்றிகள் ஈட்டினர். மாணவர் ஆசிரியர்களுக்கெனப் பூப் பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கல்வித்துணைக் கழகங்கள் :

உயர்தர வகுப்பு மாணவர் மன்றம், இந்துமாணவர் மன்றம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு சாரணர் இயக்கம் என்பன துடிப்புடன் சிறப்பாக இயங்கி வருகின்றன. மாணவரின் தன்னாற்றல் விருத்தியையும், ஆளுமையையும் வளர்ப்பதற்கு இவை பெரிதும் உதவி புரிகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம் :

கடந்த 10 ஆண்டுகளில் எமது வித்தியாலயம் 6 இடப் பெயர்வுகளை சந்தித்தது. ஒவ்வொரு பெயர்வின் போதும் சொத்துக்கள் அனைத்தும் இழக்கப்பட்டன. அந்நிலைமைகளை எல்லாம் எதிர்கொண்டு இப் பாடசாலையைச் செயற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தவை இவ்விரு சங்கங்களுமே ஆகும். கல்வித்திணைக்களம் உடனுதவிக்கு வர முடியாத சூழ்நிலைகளிலெல்லாம் பல லட்சக்கணக்கான ரூபாய்களைத் திரட்டி தற்காலிக கொட்டில்கள் தளபாடங்கள் முதலான அனைத்தையும் வழங்கியதுடன் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் தகுதி வாய்ந்த தொண்டராசிரியர்களை நியமிக்கவும் இச் சங்கங்கள் பேருதவி புரிந்து வருகின்றன. தற்போதும் பழைய மாணவர் சங்கச் சார்பில் 6 தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கட்டிட தளபாட ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்று சிறப்பாக அவற்றைச் செய்து முடித்து வருகின்றது. பழைய மாணவர் சங்கம் ஆசிரியர்களுக்கான இடர்க் கடனுதவித் திட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுப் பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்து வருகின்றது. போரின் கொடுமையால் மக்கள் திடீர் திடீரென அகதிகளாகிய போதெல்லாம் உணவு, உடைகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்துப் பாராட்டுதல்களைப் பெற்றது.

எமது தேவைகள் :

"பத்து ஆண்டுகளாகப் பட்டது போதும்" என்ற மன நிலையே இன்று எமது பாடசாலைக் கல்விச் சமூகத்தில் காணப்படுகின்றது. "எமது பழைய இடத்துக்கு எப்போது திரும்புவோம்" என்ற பெருமூச்சும் அங்கலாய்ப்புமே அவர்கள் தம் பேச்சிலும் மூச்சிலும் காணப்படுகின்றன. இந்தத்தேவையை நிறைவு செய்ய இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில் நாம் சமாதானம் அடைய முடியாது.

இடம் பெயர்ந்த வேளை முதல் இற்றை வரை எமது மாணவர்கள் பெற்ற மனநிறைவு, அடைந்த திருப்தி ஒன்றே ஒன்றுதான். கல்வித் திணைக்களம் வழங்கிய புலமை பெற்ற ஆசிரியர்களைப் பெற்றிருந்தமையே ஆகும். ஆனால் இன்று எமது உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் 17 பேரில் 12 பேரை நாம் இழந்து நிற்கின்றோம். கூடிய விரைவில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இடம் பெயர்ந்த நிலையிலும் சிறந்ததோர் நூலகம் உருவாக்கப்பட்டிருந்தது. தற்போது அது முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டது. திணைக்களமும் பெற்றோரும் நலன் விரும்பிகளும் இதனை மீண்டும் ஆரம்பிக்க உதவ வேண்டும் என மிகவும் பேராசையுடன் வேண்டுகின்றேன். விஞ்ஞான உபகரணங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதி அதிபர்



திரு. த. சற்குணசர்மா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் முற்றாக இழந்துள்ளோம். அவற்றைப் பெறுவதற்கும் திணைக்களம் உதவும் என எதிர்பார்க்கின்றோம்.

நன்றியுரை :

'நன்றி' என்னும் சொல் சம்பிரதாயமானது. எனினும் இங்கு நான் என் உள்ள நெகிழ்வை மையப்படுத்தியே அச் சொல்லைக் கையாள்கின்றேன். இதய பூர்வமாகவே பேச விழைகின்றேன்.

பாடசாலை இடம்பெயர்ந்த போதெல்லாம் சளைக்காது உதவி செய்தவர்கள் பழைய மாணவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் ஆவார்கள். குறிப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயளாளர் திரு. செ. செல்வரத்தினம் அவர்கள் தொண்டரடிப் பொடியாகித் தன்னை உருவாக்கிய இப் பாடசாலைக்கு நன்றியுணர்வோடு செய்து வரும் பணிக்கு நிகர் இருக்க முடியாது. நாள் தவறாது எம்மோடு இருந்து எங்களில் ஒருவராய் செயற்பட்டு வருகிறார். இப் பொன்னாளில் அவரை நன்றியுடன் வாழ்த்துகின்றேன். அதே போல பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. ந ஜெயக்குமாரன் செய்யும் சேவையையும் சொற்களுக்குள் அடக்க முடியாது. பாடசாலைச் சமூகத்தின் சார்பில் இவர்கள் இருவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கடல்கடந்த நாடுகளில் இருக்கும் எமது பழைய மாணவர்கள் செய்து வரும் பங்களிப்பு மிகப் பெரிது. அவர்களுள் குப்பிளான் தர்மலிங்கம் பிரபாகரன் வயாவிளான் செல்வி வதனி வேலுப்பிள்ளை ஆகியோர் இங்கு விதந்து பேசப்பட வேண்டியவர்கள் ஆவர்.

அல்லற்பட்டு அலைந்துதிரியும் வேளையில் எல்லாம் பாடசாலை நிர்வாகத்தை சிறந்த முறையில் செயற்படுத்த அடித்தளமாக அமைந்தவர்கள் எனது முகாமைத்துவக் குழுவினரும் ஆசிரியர்களுமாவார்கள். 1995 வரை 10 ஆண்டுகள் உப அதிபராக இருந்து இளைப்பாறிய எமது உப அதிபர் திரு. மு. கணேசன் வழங்கிய ஒத்துழைப்பு என்றும் மறக்கற்பாலதன்று.

மூத்த சகோதரராக, பொறுமையின் இமயமாக விளங்கி ஆசிரியர்களை ஒரு குடும்பமாக வழி நடத்தி எமக்கெல்லாம் பெருமை சேர்த்த திரு. மு. கணேசன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அவரைத் தொடர்ந்து உப-அதிபரான திரு. த சற்குணசர்மா அவர்கள் ஒரு சிறந்த செயல் வீரர். ஆறாவது இடப் பெயர்வின் போது நான் இங்கு இல்லாதவிடத்தும் பாடசாலையை மீள அமைக்கும் பணியை உரியமுறையில் நிறைவேற்றி வைத்தார். தனது குடும்பக் கடமையைவிடப் பாடசாலைக்குப் பணி செய்வதை மேலாக மதித்துச் செயற்பட்டு வருகின்றார். அதே போல நான் அதிபராகப் பணியாற்றிய ஆரம்ப காலத்தில் 6 ஆண்டுகள் கொத்தணி உதவியாளராக இருந்த திரு. சி. மணியம் அவர்கள் எனது பணிகளை முழுமையாக ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினார். அதன் பின் பகுதித் தலைவராகி அலுவலகப் பணிகள் அனைத்தையும் கண்ணியமாகவும் கடமையுணர்வோடும் செய்து வருகின்றார். இவர்களுக்கு இன்றைய சந்தர்ப்பத்தில் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபரின் பலவீனங்களைத் தங்களது பலமாகக் கருதிக் கொள்ளாது உற்ற சகோதரர்களாகச் செயற்பட்டு வரும் எனது ஆசிரியர்கள் வணக்கத்துக் குரியவர்கள். வசதியீனங்களே வரலாறாகிவிட்ட எமது பாடசாலையில் மனநிறைவோடு மகிழ்ச்சியாகக் கடமை புரியும் எனது ஆசிரியர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். 'சொல்லாமற் செய்வர் பெரியர்' எனும் வாக்குக்கமைய செயலாற்றிவரும் சிற்றூழியர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள். 15 ஆண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலையைத்தான் வணங்கும் கோவிலாகக் கொண்டு அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. க. கமலேந்திரன் அவர்களையும் உளமார வாழ்த்துகின்றேன்.

செம்மை நெறி நின்று மாணவர் மத்தியில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்த்து வரும் மாணவத் தலைவர்களுக்கு என் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

பாடசாலையின் மையம் மாணவச் செல்வங்களே. அவர்களின் ஒத்துழைப்புடனேயே எமது செயற்பாடுகள் வெற்றியடைகின்றன. பாடசாலைக்குப் பல்வேறு துறை சார்ந்தும் பெருமை சேர்ப்பவர்கள் எமது மாணவர்களே. குறைந்த வளங்களுடன் கூடிய சாதனைகளை நிலை நாட்டும் எம் சிறார்களையும் இப் பொன் விழா நன்னாளில் மனப் பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

இறுதியாக, பன் நெடுங்காலம் போரின் கொடுமையால் நைந்து போகும் எமது பாடசாலை மீது விசேட கவனம் செலுத்திப் பரிவோடு பங்களிப்புச் செய்து வரும்கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கனிஷ்ட பிரிவு அதிபர்



திரு. சி. மணியம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் சூழ்ந்த வேளையில் எமது கல்விச் சாதனை

திரு. சி. மணியம் (பகுதித் தலைவர்)

1986 முதற் கடந்த 10 ஆண்டுகளாக எமது பாடசாலை 6 இடப்பெயர்வுகளை எதிர்கொண்டது. பலபோதும் உயிர்வாழ்வதற்குப் போராடியது. தற்காலிக கொட்டில்களை அமைத்தல், தளபாடங்களைத் தேடுதல் என்பவற்றிலே எமது பெருமளவு காலம் செலவாகியது நிலையான பாடசாலைகளுக்கு நிகராக எமது பாடசாலையை நடத்துவதென்பது கேள்விக் குறியாகவே இருந்து வந்தது.

ஆனால் ஆளுமைமிக்க அதிபர், ஆற்றலும் அர்ப்பணிப்புமுடைய ஆசிரிய நண்பர்கள் ஆகியோரின் புரிந்துணர்வுமிக்க செயற்பாடுகள் முன்னெப்போதையும் விடக் கல்வியிற் பெரும் சாதனைகளை நிகழ்த்தக் காரணமாயின.

ஏழை பங்காளராகத் தனது வாழ்வை அமைத்துக் கொண்டவர் எமது அதிபர். எனவே ஒன்றன் பின் ஒன்றாகப் பல துன்பங்கள் சூழ்ந்த போதும் வசதியான ஒரு பாடசாலையை நாடிச் செல்ல அவர் முற்படவில்லை. ஏழை விவசாயிகள் தொழிலாளிகளின் குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகளே எமது பெரும்பாலான மாணவர்கள். அவர்களுக்குச் சேவை செய்வதே சிவத் தொண்டு என்று அதிபர் அடிக்கடி கூறுவார். தனது பதவிக்காலத்தில் 100 பட்டதாரிகளையாவது உருவாக்கி 100 ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வளித்தால் அது தனக்கு ஆன்மதிருப்தியைத்தரும் என்பார்.

அதிபரின் இக் கனவை எமது ஆசிரியர்கள் நனவாக்கி வந்துள்ளமையைக் காணலாம். தானாக உணர்ந்து கல்வி போதிக்க முற்படாத ஒரு ஆசிரியனை எதைச் சொல்லியும் செயற்படுத்த முடியாது என்பது அதிபரின் தத்துவம் எனவே ஆசிரியர்களுக்கான வளங்களை வழங்கி அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் அவர்களிடம் கடமையுணர்வை ஊக்குவிக்கலாம் என்ற கொள்கையை அவர் என்றும் கடைப்பிடித்து வருகிறார்.

பொன்விழா ஆண்டில், தனது அதிபர்பதவியின் பத்தாவது ஆண்டில் க. பொ. த. உயர்தர வகுப்பில் 100வீத அடைவினை ஈட்டுதல் வேண்டுமெனத் தீர்மானித்து 1993 முதல் மூன்றாண்டுத் திட்டம் ஒன்றினை வகுத்துக் கொண்டார். அது எய்தப்படக்கூடிய ஒன்றே என்ற நம்பிக்கை முதல் ஆண்டுப் பெறுபேறுகளில் ஏற்படலாயிற்று. எதிர்பாராத விதமாகப் போர்ச் சூழல் எம்மைப் பின் தள்ளிவிட்டது.

எனினும் இடர்சூழ்ந்த இன்றைய காலத்தில் நாம் பெற்ற பரீட்சை அடைவுகளை முன்னைய காலங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல் பயனுடையதாகும். மூன்றாண்டுத் திட்டக் காலத்தில் பாடரீதியாகப் பெற்ற அடைவுகளை நோக்குவதும் ஆசிரியர்களின் சாதனை வேணவாவைப் புலப்படுத்துவதாக அமையுமென்று நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1988இல் எமது அதிபர் பதவியேற்கு முன்பும் பின்பும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு — சித்தி | வீதம் | ஆண்டு — சித்தி | வீதம் |
|---|---|---|---|
| *1981* | *16* | *1989* | *33* |
| *1982* | *14* | *1990* | *71* |
| *1983* | *21* | *1991* | *70* |
| *1984* | *14* | *1992* | *63* |
| *1985* | *10* | *1993* | *75* |
| *1986* | *19* | *1994* | *79* |
| *1987* | *20* | *1995* | *75* |
| *1988* | *19* | *1996* | *60* |

## மூன்றாண்டுத் திட்டப் பாட அடைவுகள்

| பாடம் | ஆண்டு 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|
| தமிழ் | 100 | 95 | 96 |
| இந்துநாகரிகம் | 100 | 96 | 89 |
| இந்துசமயம் | 100 | 91 | 92 |
| அளவையியல் | 93 | 96 | 92 |
| புவியியல் | 100 | 100 | 94 |
| பொருளியல் | 88 | 86 | 94 |
| கணக்கியல் | 95 | 80 | 85 |
| வர்த்தகம் | 95 | 80 | 88 |
| தூயகணிதம் | 64 | 62 | 50 |
| பிரயோககணிதம் | 91 | 50 | 67 |
| இரசாயனம் | 82 | 40 | 56 |
| பௌதிகவியல் | 82 | 33 | 56 |
| விலங்கியல் | 100 | 62 | 67 |
| தாவரவியல் | 83 | 87 | 67 |

## எமது மூன்றாண்டுக் கல்வித் திட்டத்தின் பயனாகப் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் விபரம்

### 1994

| தொடர் இலக்கம் | முழுப் பெயர் | பெறுபேறு | மொத்தப் புள்ளிகள் | துறை |
|---|---|---|---|---|
| 1 | ஐயாத்துரை சதானந்தன் | 4 A | 359 | பொறியியல் I |
| 2 | யோகநாதன் திலீபன் | A 2 B C | 280 | பொறியியல் I |
| 3 | தர்மராஜா சுதாகரன் | A 2 B C | 274 | பொறியியல் I |
| 4 | குமாரசாமி சுதர்சன் | B 2 C S | 235 | பௌதிகவிஞ்ஞானம் |
| 5 | சரவணமுத்துலோகேஸ்வரன் | B 2 C S | 232 | பௌதிகவிஞ்ஞானம் |
| 6 | திருச்செல்வம் யேசுதாஸ் | 3 A B | 300 | கலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வடிவேலு கயல்விழி | 3 A C | 294 | கலை |
| 8 | செல்லத்துரை லங்காராணி | A 3 B | 286 | கலை |
| 9 | கந்தையா காந்தரூபன் | 4B | 281 | கலை |
| 10 | சுந்தரமூர்த்தி சுபாசினி | 2 A 2 C | 277 | கலை |
| 11 | மகேஸ்வரன் துஸ்யந்தன் | A B 2 C | 274 | கலை |
| 12 | பேரம்பலம் சுகந்தினி | 2 A 2C | 253 | கலை |
| 13 | வேலாயுதம் திருச்செல்வம் | 2 A B C | 282 | வர்த்தகம் |

**பல்கலைக்கழகக் தகுதி பெற்றோர் பெறுபேற்று வீதம் 79**

## 1995

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அழகானந்தசிவம் விக்கினேஸ்வரன் | B C 2S | 211 | பௌதிக விஞ்ஞானம் |
| 2 | சிவதர்சினி இராசா | 4 A | 321 | கலை |
| 3 | ஜெயவதனி வேலாயுதபிள்ளை | 3 A B | 304 | கலை |
| 4 | அனுதா பாலசிங்கம் | 3 A B | 300 | கலை |
| 5 | செல்வராசா ஜெகன் | A 3 B | 283 | கலை |
| 6 | இரத்தினா சபாரத்தினம் | 2ABC | 281 | கலை |
| 7 | உசாந்தி தவராசா | 4 B | 278 | கலை |
| 8 | வசந்தி பரராஜசிங்கம் | 2 A 2 C | 271 | கலை |
| 9 | சின்னவன் வரதராஜா | A B 2 C | 263 | கலை |
| 10 | நித்தியா நவரத்தினம் | 3 A B | 301 | முகாமைத்துவம் |
| 11 | கிருஷ்ணமூர்த்தி ரமணகுமார் | 3 A B | 304 | முகாமைத்துவம் |
| 12 | வேலாயுதம் திருச்செல்வம் | A 3 B | 288 | முகாமைத்துவம் |
| 13 | விஜயரத்தினம் கேசவன் | A B 2 C | 262 | முகாமைத்துவம் |
| 14 | தம்பையா தவக்குமார் | A 2 B C | 275 | வர்த்தகம் |

**பல்கலைக்கழகத் தகுதி பெற்றோர் பெறுபேற்று வீதம் 75**

## 1996இல் சிறந்த பெறுபேறுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | மதியரசி பொன்னம்பலம் | A B 2 C | வர்த்தகம் |
| 2 | ச. சுகந்தன் | A 3 C | வர்த்தகம் |
| 3 | செ. சற்குணகுமார் | A 3 C | வர்த்தகம் |
| 4 | தனலக்குமி தம்பிஐயா | A B 2 C | கலை |
| 5 | சுகந்தினி சுபேந்திரன் | A B 2 C | கலை |
| 6 | கலாரூபி பரமேஸ்வரன் | 4 B | கலை |
| 7 | தம்பிராசா ரூபாகரன் | B 3 C | பௌதிக விஞ்ஞானம் |
| 8 | ஆனந்தராசா துஸ்யந்தி | B C 2 S | உயிரியல் விஞ்ஞானம் |

**பல்கலைக்கழத் தகுதி பெற்றோர் 60**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பொன்விழா நிகழ்வுகள்

திரு. த. சற்குணசர்மா
பிரதி அதிபர்

1995 ஒக்ரோபர் 30 இல் வலிகாமம் மக்கள் வன்னிக்கும் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் என முழுமையாக இடம் பெயர்ந்தனர். எமது பாடசாலைச் சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்நிலையிலும் பாடசாலையின் கட்டமைப்பைப் பேணும் நோக்கோடு அல்லாரையில் இரு புளியமரங்களின் நிழலில் க. பொ. த. வகுப்புகளை ஆரம்பித்து நடத்தினோம்.

1996 ஜெனவரி 16 எமது பாடசாலைப் பொன்விழா ஆரம்பநாள். மூன்று ஆண்டுகளாகப் பல அபிலாசைகளோடு இத்தினத்தை எதிர்பார்த்திருந்த எமக்குப் போர்ப் பிரளயம் பெருஞ் சவாலாக அமைந்து விட்டது. எனினும் காலத்திற் கடமை செய்யாதுவிடின் அது ஒரு வரலாற்றுத் தவறாகிவிடும்என ஆதங்கப்பட்டோம். எனவே சிதறிக்கிடந்த எமது பாடசாலைச் சமூகத்தை ஆங்காங்கு சென்று சந்திக்க ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கும் வகையிற் பொன்விழா நிகழ்வுகளை மாதாந்தம் வெவ்வேறு இடங்களிற் கொண்டாடத் தீர்மானித்தோம்.

1996 ஜெனவரி 16இல் அல்லாரை அறுகம்புலப் பிள்ளையார் ஆலயத்தில் முதலாவது நிகழ்வு நடைபெற்றது. யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ஜி. கோபாலகிருஷ்ணன் அவர்களும் எமது தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட அன்றைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே. மகேந்திரன் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்புரைகள் நிகழ்த்தினர். மகேஸ்வர பூசையுடன் அவ்விழா நிறைவெய்தியது.

பெப்ரவரி 18ஆந் திகதி இரண்டாவது நிகழ்வு வல்லிபுர ஆழ்வார் தரிசனத்துடன் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்றது. நிலையச் சுவாமிஜி சித்ரூபானந்தா அவர்கள் ஆசியுரை வழங்கி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. சிவமகாலிங்கம் அவர்கள் சிறப்புரை வழங்கினார். பழைய மாணவி இ. கல்யாணியின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

மார்ச்21-ம் நாள் மூன்றாவதுமாதாந்த நிகழ்வு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பொங்கல் விழாவாக நடத்தப்பட்டது. இம்மாதாந்த நிகழ்வுகள் ஆசிரியர் மாணவர் சந்திப்புக்களை ஏற்படுத்தியமையினால் மனநிறைவும் உற்சாகமும் ஏற்படலாயின.

1996 ஏப்பிரல்மாதம் மக்கள் வலிகாமம் மீள முடிந்தது. இங்கு பாடசாலை பாரிய சேதத்துக்கு உட்பட்டிருந்தமையால் அதனைப் புனரமைப்பது ஒரு நீண்ட நெடும் பயணமாகியது, அப்புனரமைப்புப் பணிகள் தற்போது நிறைவெய்தியமையால் பொன்விழா இறுதி நிகழ்வை மனநிறைவோடு கொண்டாட முடிவு செய்தோம். பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் வேண்டிய பங்களிப்பைச் செய்ய முன்வந்தன.


ஆரம்ப நிகழ்வாக சிறந்ததோரு கல்விக் கண்காட்சி ஏப்பிரல் 24, 25ஆந் திகதிகளில் சிறப்பாக நடத்தப்பட்டது. 3000-த்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் பொது மக்களும் அதனைத் தரிசித்தனர். பொன்விழாவை ஒட்டி மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளும் நடத்தப்பெற்றன.

தமிழ், ஆங்கிலப் பேச்சு, கட்டுரை, போட்டிகள், சங்கீதம், நடனம்தனிநடிப்புப் போட்டிகள் திருக்குறள் மனனம், சித்திரம், பொதறிவுப் போட்டிகள் மாலைகட்டுதல், கோலம் போடுதற் போட்டிகள் மெய்வல்லுநர், தாச்சி, பூப்பந்துப்போட்டிகள், சதுரங்கம், கரம் முதலான பல்வேறு போட்டிகள் இடம் பெற்றன. இந்தவகையில் எமது மாணவச் செல்வங்கள் அனைவரும் தன்னாற்றலும் ஆளுமையும் மிக்கவர்களாக உருவாக்குவதில் எம்மாலியன்ற பங்களிப்பைச் செய்ததில் மன நிறைவு காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலைக் கல்வி வரலாற்றிற்
சாதனை படைத்த மாணவச் செல்வங்கள்

**1980**



அருளானந்தம் ரவீந்திரன்
உயிரியல் விஞ்ஞானம்
மருத்துவம்
*3* **B C** *( 278 புள்ளிகள் )*

**1994**



ஐயாத்துரை சதானந்தன்
பௌதிக விஞ்ஞானம்
பொறியியல்
**4 A** *( 359 புள்ளிகள் )*

**1995**



சிவதர்சினி ராசா
கலை
4 A *( 321 புள்ளிகள்)*

**1995**



நித்தியா நவரத்தினம்
வர்த்தகம் – முகாமைத்துவம்
*3* **A B** *( 301 புள்ளிகள் )*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடப் புனர்நிர்மாணப் படத்தின் விளக்கம்


1. உள்ளக விளையாட்டரங்கு
2. மாடி 12 வகுப்பாறைகள், விசேட பாட அறைகள்
3. மாடி விஞ்ஞான ஆய்வகம், நூலகம், கூட்ட மண்டபம்
4. மாடி 12 வகுப்பறைகள்
5. மாடி 3 வகுப்பறைகள், தொலைக் காட்சி, கணணி அறைகள்
6. மாடி நிர்வாக மண்டபம்
7. மாடி 12 வகுப்பறைகள்
8. மாடி 3 வகுப்பறைகள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை பல் சிகிச்சை நிலையம்.
9. மாடி 12 வகுப்பறைகள்
10. தொழிற் கூடங்கள்
11. திறந்தவெளி அரங்கு
12. விசேட தேவை அறை (5)
13. விவசாய அலகு
14. தண்ணீர்த் தொட்டி
15. ஸ்ரேடியம்
16. மாணவர் விடுதி
17. மாணவர் விடுதி உணவகம்
18. ஆசிரியர் விடுதி
19. அதிபர் விடுதி
20. கால்நடைப் பண்ணை
21. ஆசிரியைகள் விடுதி
22. மாணவியர் விடுதி உணவகம்
23. மாணவியர் விடுதி
24. வழிபாட்டறை (சைவம்)
25. கூட்டு மண்டபம்
26. வழிபாட்டறை (கிறீஸ்தவம்)
27. கூட்டுறவுச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
# உத்தேச கட்டிட, புனரமைப்புத் திட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழாம்



1995 - 96 இல்



1996 - 97இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் வரலாறு

திரு. செ. செல்வப்பிரகாசம் அவர்கள்
(முதன்மை ஆசிரியர், சமூகக்கல்வி.)

கிராமப் புறங்களில் ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்யும் நோக்கோடு 1945ஆம் ஆண்டு முதல் இந்நாட்டின் பல பாகங்களி லும் 68 மத்திய மகாவித்தியாலயங்களை அரசு நிறுவியது. இவற்றுள் எமது வயா விளான் மத்திய மகாவித்தியாலயமும் ஒன் றாகும்.

குரும்பசிட்டி 'ஈழகேசரி' நா. பொன்னையா, வயாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் வழித்தோன் றல், சட்டத்தரணி வ. இராசநாயகம் போன்ற பெரியார்களின் அயராத உழைப்பி னால் இப்பாடசாலை உருப் பெற்றது என லாம். பாடசாலையை ஆரம்பிக்க வசதி யான இடம் கிடைக்காமையால் ஈழகேசரி பொன்னையா அவர்கள் தனது இலட்சிய விவசாயப் பண்ணையாகப் 16 ஏக்கர் நிலப் பரப்பில் உருவாக்கிய 'மீனாட்சி தோட் டத்தை' இதற்காக வழங்கினார்.

1946 ஜெனவரி 16 ஆந் திகதி பாடசாலை ஆரம்பமாகியது. அன்றைய கல்வி அமைச் சரும் இலவசக் கல்வியின் தந்தையுமான C. W. W. கன்னங்கரா அவர்களால் இது திறந்து வைக்கப்பட்டது. 50 ஆண்டுகள் நிறைவெய்திய இப்பாடசாலையின் வரலாற் றினை நோக்கும் போது அதனை 3 தெளி வான கால கட்டாங்களாக நாம் வகுத்து நோக்கமுடிகின்றது.

முதல் 30 ஆண்டுகளையும் **வளர்ச்சிக் காலம்** என்றும் அடுத்த 10 ஆண்டுகளைப் **பொற் காலம்** என்றும் பின்னுள்ள 10 ஆண்டு களை **இடர் சூழ்ந்த காலம்** என்றும் கொள் வோம்.

வளர்ச்சிக் காலம் பற்றிய தெளிவான வரலாற்றுச் செய்திகள் வெள்ளி விழா மலரில் இடம் பெற்றுள்ளன. பொற் காலம் பற்றியும் இடர் சூழ்ந்த காலம் பற்றியும் தனித்தனி கட்டுரைகள் இம்மலரில் இடம் பெறுகின்றன. இந்நிலையில் இவ்வரலாற் றுத் தொடர்ச்சிகளைத் தொட்டுக்காட்டும், சுருக்கமாக இணைத்துக் காட்டும் ஒரு முகமையைச் செய்யும் பணியே என்னைச் சார்ந்துள்ளது.

**வளர்ச்சிக் காலம் (1946 — 1976):**

இம் 30 ஆண்டுகளிலும் ஐந்து அதிபர்கள் கடமையாற்றினர். முதலாவது அதிபரான திரு. க. காராளசிங்கம் 'இப்பாடசாலை யிற் சிற்பி' எனப் போற்றப் படுபவர். குடி நெருக்கமற்றிருந்த ஒரு பரந்த பிரதே சத்தில் இரண்டு கிற்றுக் கொட்டில்களில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது 150 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் காணப் பட்டனர். கொட்டிலின் ஒரு பகுதியை அலுவலகமாகவும் தனது வதிவிடமாகவும் கொண்டு தன்னை முழுமையாக அர்ப் பணித்து இப்பாடசாலையை உறுதியாக உருப்பெறச் செய்து, வளர்த்தெடுத்த பெருமை அன்னாரையே சாரும்.

அவர் வழியில் பின்பு அதிபர்களாக விளங்கிய திரு. K. நவரத்தினராசா, திரு. E. J. V. ஹென்ஸ்மன், திரு. S. ஆறுமுகம், திரு. பொ. சபாரத்தினம் ஆகியோர் சிறந்த சேவை யாற்றிப் பாடசாலையை நன்முறை யில் மென்மேலும் வளரச் செய்தனர்.

இதன் பேறாகப் பாடசாலை இம் முப்பது ஆண்டுக்குள்ளே சகல துறைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் வளர்ச்சி கண்டது. மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்தது. 1976 இல் 852 மாணவர்களும் 36 ஆசிரியர்களும் இருந்தனர். 1958 இல் க. பொ. த. உயர்தரம் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்திலிருந்தே தொழில் முன்னிலைப் பாடங்களுக்குப் பெயர் பெற்ற கல்லூரியாக எமது பாடசாலை விளங்கியது. ஆரம்பகாலத்திலிருந்தே விவசாயம், மரவேலை, மனையியற் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. பின்பு உலோகவேலை, வர்த்தகம், தட்டச்சு சுருக்கெழுத்து, நெசவு, தையல் போன்றனவும் ஆரம்பிக்கப்பட்டன. 1958இல் கொழும்புத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகச் சிறந்த மரவேலை, நெசவுத் தொழிற்கூடங்களை இங்கு நிறுவியுதவியமை குறிப்பிடத்தக்கது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற்றன. வட்டார மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் போட்டிகளில் வெற்றிகள் பலவற்றை எமது பாடசாலை ஈட்டியது.

ஆரம்ப காலங்களில் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு விடுதி வசதிகளுடனான கல்வி மத்திய மகாவித்தியாலயங்களில் மட்டுமே வழங்கப்பட்டது. எமது பாடசாலையிலும் மாணவ, மாணவியர்களுக்கான சிறந்த விடுதிகள் அமைக்கப்பட்டன. குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்த மாணவர்கள் இங்கு தங்கிக் கல்விகற்றனர்.

1960களிற் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. அதனால் அப்பாடசாலைகளின் விடுதிகளிலும் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் தங்கிக் கல்விகற்க அனுமதிக் கப்பட்டனர். எனினும் எமது பாடசாலையில் அனேகமான மாணவர்கள் தொடர்ந்தும் விடுதிகளிலிருந்து கல்விகற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

**பொற்காலம் (1976 — 1986):**

1976 இல் புதிய அதிபராகத் திரு. ஆ. இராமசாமி அவர்கள் பொறுப்பேற்றார். சிறந்த அறிவும் ஆற்றலும், ஆளுமையும் உடையவர் இவ்வதிபர்; முன்னவர்களின் அடியொற்றிப் பாடசாலையைப் பூரணத்துவமான ஒரு கல்லூரியாக்கினார்.

க. பொ. த உயர்தரக் கலை, வர்த்தக வகுப்புகளைச் சிறப்புற நடத்தியதுடன் விஞ்ஞான கணிதத் துறைகளையும் ஆரம்பித்தார். அவற்றுக்கான ஆசிரியர் வளம், பௌதிக வளங்களை உருவாக்கினார் இதனால் மாணவர் தொகை அதிகரித்து இரட்டிமடங்காயிற்து.

**இடர் சூழ்ந்த காலம் (1986 — 1996):**

1985 ஆம் ஆண்டு நடுபகுதியில் திரு. நா. கணேசபிள்ளை அதிபரானார். அவரைத் தொடர்ந்து 1988 முதல் இன்றைய அதிபர் திரு. ஆ. சி. நடராஜா அதிபராக விளங்குகிறார். இவர்களது காலமான கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 2½ ஆண்டுகளே பாடசாலை சொந்த இடத்தில் இயங்க முடிந்தது.

1983 இல் இந்நாட்டில் உள்நாட்டு யுத்தம் வெடித்தது. ஆரம்ப கட்டத்தில் பலாலி இராணுவ, விமானத்தளத்தைச் சார்ந்த பகுதி, முனைப்பான யுத்த கேந்திரத் தளங்களில் ஒன்றாக விளங்கியது. விமானத் தளத்திலிருந்து சுமார் அரைக் கிலோ மீற்றர் தூரத்துள் எமது பாடசாலை வளாகம் உள்ளது. இதனால் 1986 யூனில் எமது பாடசாலை, யுத்தத்தில் முதற் களப்பலியாகி தரைமட்டமாக்கப்பட்டது; அதன் பின் எவரும் அணுக முடியாத சூனியப் பிரதேசமாக அது மாறியது.

அன்றிலிருந்து இன்றுவரை பத்து ஆண்டுகளில் ஆறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த எமது பாடசாலை தற்காலிக கீற்றுக் கொட்டில்களிலேயே செயற்பட்டு வந்தது; இன்றும் செயற்பட்டு வருகிறது.

**எதிர்காலம்:**

250 பரப்புக்காணியில் இணையற்ற பல வளங்களுடன் 40 ஆண்டுகளாகச் செயற்பட்டு வந்த எமது பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 10 ஆண்டுகளாகப் பல நலிவுகளை யும் கண்டு வந்துள்ளதுடன் இன்றும் 12 பரப்புக்காணியில் கூனிக்குறுகி இயங்கிவரு கின்றது.

அதிபர் ஆசிரியர்களது அயராத உழைப் பினால் கல்வியைப் பொறுத்தவரை முன்னைய காலங்களைவிடப் பல சாதனை களை இவ்விடர் சூழ்ந்த காலத்தில் எமது பாடசாலை ஈட்டிவருவது பாராட்டுக்குரி யதே. ஆனால் மாணவச் செல்வங்களைப் பூரணத்துவமான மனிதர்களாக ஆக்கக் கூடிய இணைப்பாட விதான செயற்பாடு கள், பாடப்புறவேலைகள் பெருமளவுக்குச் ஸ்தம்பிதமடைந்துள்ளமையைக் காண்கின் றோம். இத்துயர் தோய்ந்த சூழலிருந்து விடுபட ஒரே வழி எமது சொந்த மண்ணுக் குப் பாடசாலையை கொண்டு செல்வதே யாகும்.

எமது பாடசாலை போல் ஏனைய பாட சாலைகள் பலவும் இடம் பெயர்ந்து இயங் குகின்றன. அவை தமது பழைய இடங்களுக் குத் திரும்பக்கூடிய வாய்ப்புகளைப் பெறும் சூழல்கள் ஏற்பட்டாலும் எமக்கான விடிவு கேள்விக்குறியாகவே உள்ளது. ''யுத்தம் ஓயுமா? எனப் பார்ப்பதில் பயனில்லை. எனவே வேறு ஒரு நிலையான இடத்தைத் தேடுங்கள்'' எனச் சில அதிகாரிகள் ஆலோசனை கூறுகின்றனர். எமது பாடசாலைச் சமூகம் அமைந்துள்ள சூழ லில் அதற்கான சாத்தியம் மிக அருகியே காணப்படுகின்றது.

மாணவர் தொகை மீண்டும் அதிகரித்து வரும் இவ்வேளையில் தற்போதைய இடத் தில் எப்படிப் பாடசாலையை நடத்துவது? பௌதீக வளங்களை ஏற்படுத்தாது செயற் படுவது ஒருவரலாற்றுத் தவறாகாதா? மாற்று இடம் ஒன்றை எங்கே தேடுவது? பழைய இடத்துக்குப் போவதற்கான மாற் றங்கள் ஏற்படுமா? என்ற மும்முனைக் கேள்விக் குறிகளுடன் எமது பாடசாலை இன்று செயற்படுகின்றது.

---


வளரும் குழந்தைகளின் போஷாக்கை

உறுதிசெய்கிறது ஜீவாகாரம்

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட

ஒரு உப உணவாகும்

நாடுங்கள்

★ அண்ணா தொழிலகம் ★

இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கல்லூரியின் பொற்காலம்

திரு. சி. இரத்தினம் அவர்கள்
( ஓய்வு பெற்ற எமது ஆசிரியர்

பொன் விழாக் காணும் எமது கல்லூரியின் கடந்த கால வரலாற்றுப் பாதையை நாம் திரும்பிப்பார்ப்போமானால் 1976 முதல் 1985 ஆம் ஆண்டுவரையான பத் தாண்டுக்காலம் மிக உன்னத காலமாக மிளிர்ந்திருந்தமையைக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் ஒப்பற்ற கல்விப் புலமையும் நிர்வாக ஆற்றலும் செயற்திறனும் மிக்க உயர்திரு. ஆ. இராமசாமி அவர்கள் அதிபராக விளங்கியமையே ஆகும்.

நாட்டின் மிகச்சிறந்த ஒரு கல்லூரியாக எமது பாடசாலையை மாற்றியமைக்க வேண்டுமென்ற இலட்சிய வேட்கையோடு பதவியேற்ற இராமசாமி அவர்கள் ஒவ்வொரு துறையிலும் ஒப்பற்ற சாதனைகளை ஈட்டித் தந்துள்ளார்.

கல்லூரியின் தரமுயர வேண்டுமென்றால் க. பொ. த உயர்தர விஞ்ஞானகணித வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தார். இதற்குத் தீராத ஊக்கமும் சோராத உழைப்பும் கொண்டு உயரதிகாரிகளுடன் முட்டிமோதி வெற்றி கண்டார்: ஆக்கமும் ஊக்கமும் மிக்க ஆசிரியர் வளத்தைத் தேடிப் பெற்றார்.

பல்கலைக்கழகத் தரத்திலான ஒரு விஞ்ஞான ஆய்வகத்தை நிறுவுவது அவரது கனவாகியது 210 அடி நீளம் 40 அடி அகலமுமுடைய பிரமாண்டமான ஒரு மாடிக்கட்டிடத்தை நிறுவத் தீர்மானித்தார். காங்கேசன்துறை, கோப்பாய், உடுவில் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதியுதவி பெற்று அதனை முழுமைப்படுத்தினார்.

உறுதியின் உறைவிடமாக அமைந்து பாடசாலையின் முன்புறத்தை அலங்கரித்த இக் கட்டிடம் வடமாநிலத்தில் வேறு எந்தப் பாடசாலையிலும் காணமுடியாத ஒரு எழில் நிறைந்த விஞ்ஞான ஆய்வகமாக அமைந்தது. தகுதிவாய்ந்த ஒரு ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்து தனது மேற்பார்வையில் இதனைக்கட்டி முடித்தார்.

தள அறைகளில் பௌதீக, இரசாயன தாவரவியல் விலங்கியல் ஆய்வுகூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுக்கு வேண்டிய தளபாடங்கள், உபகரணங்கள் அனைத்தும் பெறப்பட்டன. நான்கு ஆய்வுகூட அலுவலரும் நியமிக்கப்பட்டனர். மேல்மாடியில் சகல வசதிகளும் கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த மாடிக்குமேல் கிரகக்காட்சிக்கருவியகம்' (Planetoreum) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

விவசாய விஞ்ஞானத்தையும் உயர்தர வகுப்பில் ஏற்படுத்தி, அத்துறையின் விருத்திக்காக உறுதியான பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். செயல்முறைக்கு முக்கியத்துவமளித்து காடுதிருத்திக் களனி பெருக்கி சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தை நன்செய் நிலமாக்கினார், 'கல்வி என்பது தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு போதல்' (Knowu to the unknown) என்பதற்கிணங்க, விவசாயச் சூழலிலிருந்துவரும் எமது மாணவர்கள் விவசாய பாட நேர மணி ஒலித்ததும் விவசாயப் பாடத்துக்கு முண்டியடித்துக் கொண்டு ஓடுவதைக் கண்டோம்.

எமது கல்லூரித் தோட்டத்தில் உருளைக்கிழங்கு, மரவள்ளி, மிளகாய், வெங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம், காய்கறிகள், கீரைவகைகள், வாழை திராட்சை முதலான பயிர்கள் எல்லாம் நிறைந்து விளைந்தன. தேர்ச்சி பெற்ற விசேட விவசாய ஆசிரியர்கள் நவீன விஞ்ஞான முறைகளை அறிமுகம் செய்து மாணவர்களைப் பயிற்றுவித்தனர்.

பாற்பண்ணை ஒன்றை ஆரம்பிக்கும்படி தனது கறவைப்பசு ஒன்றினை அதிபர் அன்பளிப்புச் செய்து உற்சாகமூட்டினார். 1984 ஆம் 1985 ஆம் ஆண்டுகளில் ஆறு கறவைப் பசுக்கள் கல்லூரியின் பாற்பண்ணையை அலங்கரித்தன. கல்லூரி வளவில் நிறைந்திருந்த பச்சைத் தீவனம் பசுக்களுக்குப் போதுமானதாகக் காணப்பட்டது. பசுக்களின் தொழுவுரம் விவசாயத்துக்கு வளஞ் சேர்த்தது. விடுதிமாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏன் அயலவர்களுக்கும் கூட நியாயமான விலையில் பால் வழங்கப்பட்டது. அதேபோல் ஏனைய விவசாய உற்பத்திப் பொருள்களும் விநியோகப்பட்டன.

பாடசாலையின் பின்புறத்தில் அமைந்திருந்த பசுமை நிறைந்த எமது பயன்தரு தோட்டத்தைக் கல்லூரிக்கு வரும் மேலதிகாரிகள் என்றும் தரிசிக்கத் தவறுவதில்லை. அதற்கும் மேலாக இப்பாடசாலையை ஒரு விவசாயப் பல்கலைக் கழகமாக மாற்றியமைக்கும் சிந்தனையும் ஆட்சியாளரிடம் ஏற்பட்டமை அனைவரும் அறிந்ததே.

விவசாயம் மட்டுமல்ல மரவேலை, உலோகவேலை, நெசவு, தையல், மனையியல் முதலான சகல தொழில் முன்னிலைப் பாடங்களிலும் அதிபர் விசேட கவனம் செலுத்தினார். இத்துறைகளைச் சார்ந்த சிறந்த ஆசிரியர்களைப் பெற்று மாணவர்களை வளப்படுத்தினார். பாடசாலைத் தளபாடங்கள் செய்தல், ஏனைய மரப்பொருட்கள், உலோகப் பொருட்கள் செய்தல், பெற்சிற், துவாய், கைக்குட்டைகள் முதலான நூற்பொருட்கள் தயாரித்தல், அவற்றிற்கு வர்ணம் பூசுதல், மினுக்குதல், காட்சிக்கு வைத்தல், உற்பத்திச் செலவு கணித்தல், சந்தைப்படுத்துதல் போன்ற இன்னோரன்ன வேலைப்படிகள் யாவிலும் மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டது. 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கவலைகள் உனக்கில்லை ஒப்புக்கொள்' என்ற கோட்பாட்டை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு தன்னம்பிக்கை, கைத்திறன், நல்ல மனப்பாங்குகளை எய்துவதற்கு இதனால் வழியேற்பட்டது.

இவர் காலத்தில் தையற் தொழிற் கூடம் மனையியற் தொழிற் கூடங்களும் உரிய முறையில் ஏற்படுத்தப்பட்டன. தையல் யந்திரங்கள், மனையியல் உபகரணங்கள் அனைத்தும் நிறைவாகப் பெறப்பட்டன. இவ்வதிபர் காலத்தில் தான் மனையியல் உயர்தர வகுப்புக்குரிய ஒரு பாடமாக இங்கு அங்கீகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய நுண் கலைகளுக்கும் தனித்தனி அறைகள் வழங்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்பட்டன. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தவணை விடுமுறைத் தினங்களில் கலை விழாக்கள் நடத்தப்பட்டு வந்தன.

கல்லூரி நிர்வாகத்தையும் விவசாயப் பண்ணையையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தது பாதுகாப்பான வேலியின்மையே ஆகும். அலாவுதீனின் அற்புத விளக்கினாற் கூடச் சாதிக்க முடியாதென்ற நிலையிலிருந்த 5280 அடி நீள எல்லையில் பலரும் அதிசயிக்கத்தக்க வேகத்தில் சுற்றுமதில் ஒன்றைக் கட்ட முனைந்தார். அரசாங்க நிதியுதவிகள் எதுவுமற்று நிலையில் 'தன் கையே தனக்குதவி' என்ற கோட்பாட்டில் ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகளை நம்பிக்கையூட்டி இதனை நிறைவேற்றி முடித்தார். இதனாற் பாடசாலை புதுப் பொலிவு பெற்றது.

திரு. இராமசாமி அதிபரின் காலத்தில் இக்கல்லூரியில் என்றுமில்லாத அளவிற்கு அமைதியும் ஒழுங்கும் நிலவி வந்தன. இச்சூழலில் ஆசிரியர்கள் நோக்க நலன்வாய்ந்த மகிழ்ச்சியும் மாணவர்கள் ஊக்கவளம் மிக்க எழுச்சியும் கொண்டிருந்தமை காண்கின்றோம். இதனாற் கற்றல் – கற்பித்தற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் மேலோங்கின. அனைத்துப் பாடநெறிகளும் போட்டி போட்டு அபி விருத்தி கண்டன. க. பொ. த. உயர்தர சாதாரணதர பரீட்சைகளில் பல மாணவர் கள் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற னர்.

பல மாணவர்கள் மருத்துவம், பொறி யியல் பௌதீக இரசாயன விவசாயத் துறைகளுக்கும் கலை வர்த்தகத் துறை களுக்கும் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக் கழகம் சென்றமை யாமறிந்ததே. க. பொ. த. சாதாரணதர வகுப்பிற் சித்தியடைந்த வர்கள், சிறப்பாகத் தொழில் முன்னிலைப் பாடங்களிற் சித்தியடைந்தவர்கள் பலர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குத் தெரிவாகியதுடன் வேறும் பல உயர் வேலை வாய்ப்புகளையும் பெற்றுக் கொண்ட னர்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்றவாறு 1979 க. பொ. த. சாதாரணப் பரீட்சையின் பெறுபேற்றினை யும் பாடப்புற வேலைகளிற் செய்த சாதனைகளையும் மதிப்பிட்டு அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற மிகச் சிறந்த மாணவர் தெரிவுப் போட்டியை (Best all Round Student Contest) இங்கு குறிப்பிட லாம். கல்வி அமைச்சு, இலங்கை வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரைம்ஸ் ஒவ் சிலோன் போன்ற நிறுவனங்கள் இணைந்து இப்போட்டியை நடத்தின. இதில் எமது கல் லூரி மாணவியான செல்வி ஜெயகௌரி இரத்தினம் யாழ். மாவட்டத்தில் இரண் டாவது இடத்தைப் பெற்று, அன்றைய மாவட்ட மந்திரி வீரக்கோன் அவர்களி டம் பணப்பரிசிலையும் சான்றிதழ்களையும் பெற்று எமது கல்லூரியின் பெயரைத் தேசிய மட்டத்தில் உயரச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இம் மாணவி பௌதிக விஞ்ஞானத் துறையில் யாழ். பல்கலைக்கழகஞ் சென்று, திறமைச் சித்திபெற்று அங்கேயே உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். பின்பு புலமைப் பரிசில் பெற்று லண்டன் லிவப்பூல் பல்கலைக்கழகஞ் சென்று இர சாயனவியலில் 'கலாநிதி'ப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். விஞ்ஞானத் துறை யில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதல் மாணவி என்ற பெருமையும் இவரையே சாரும்.

அதிபர் இராமசாமி அவர்கள் விளை யாட்டுத் துறையிலும் விசேட கவனம் செலுத்தினர். மெய்வல்லுநர் போட்டிகளில் கோப்பாய் வட்டாரத்தில் எமது பாட சாலை முன்னணியிற் திகழ்ந்தது; மாவட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் பல முன்ன ணிப் பாடசாலைகளுடன் முட்டி மோதி வெற்றிகண்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

அதிபர் இராமசாமி அவர்கள் நேர்மை யும் நியாயமும் கடமை, கட்டுப்பாடும் நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வை யும் திமிர்ந்த ஞானச் செருக்கும் உறுதி யான கூற்றும் ஓங்காரக் குரலும் கூரிய புத்தியும், ஞாபக சக்தியும் பல நூற் பயிற் சியும் உளநூற் தேர்ச்சியும் படிப்பிக்கும் திறனும் விடாப்பிடிப்பான்மையும் காரியப் பொறுப்பும் சமயோசித தந்திரமும் தெளி வான சிந்தனையும் சீரான முடிவும் உறங் காத ஊக்கமும் கிறுங்காத போக்கும் அமையப் பெற்ற ஒரு உயர்ந்த தலைவர்; உத்தம அதிபர்.

அன்னாரின் சேவையால் எமது பாட சாலை பொற்காலங் கண்டமை நாம் செய்த பேறாகும். எங்கள் பொற்கால அதிபர் ஓய்வு பெற்றிருப்பினும் அவரால் உயர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்த்தொலியாலும் ஆண்டவன் அருளா லும் அவர் நீடூழி வாழ்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று நிற்குங் கலாலயம்

திரு. செ. செல்வரத்தினம் அவர்கள்
( செயலர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம். )

*1946*ஆம் ஆண்டு முதல் *1986*ஆம் ஆண்டு வரை *40* ஆண்டுகளாக வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி கண்டு இந்த நாட்டின் முதன்மையான பாடசாலைகளிலொன்றாக விளங்கியது. சகல வளங்களையும் பெற்று கற்றல் கற்பித்தலில் மட்டுமன்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் பல முத்திரைகள் பொறித்து நின்றது. *1986*ஆம் ஆண்டின் பின் கடந்த *10* ஆண்டுகளாக வேறு எந்தப் பாடசாலைகளும் சந்தித்திருக்காத பேரிடர்களை இது எதிர் கொண்டது.

*1986*இல் உள்நாட்டு யுத்தம் புதிய பரிமாணம் எடுத்தது. பலாலி இராணுவ விமானத்தளத்தை அண்டிய எமது பாடசாலைச் சுற்றாடல் பயங்கரப் பிரதேசமாக மாறியது. துப்பாக்கி வேட்டுகள், ஹெலித் தாக்குதல்களுக்குக் கதிகலங்கிப் பாடசாலை உருக்குலைந்த பொழுது *1986* யூனில் இராணுவம் இங்கு புகுந்து நிலை கொண்டது. சொற்ப நாட்களில் இராணுவம் வெளியேறியதாயினும் அதன் பின்பு பாடசாலை முழுவதுமே தரைமட்டமாகி அதனை அணுகமுடியாத நிலையும் ஏற்பட்டது.

**முதலாவது இடப்பெயர்வு** *: (1986 — 1988)*

எனவே *1986* ஆவணி மாதமளவில் சுமார் *2* கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலையில் எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலையின் அன்றைய அதிபராக விளங்கிய திரு. க. தங்கராசா அவர்கள் பெருமனதோடு தனது பாடசாலையை முழுமையாக எதிர்ப்புறத்தமைந்த விநாயகர் ஆலய மணிமண்டப மடத்துக்கு மாற்றினார். எனினும் எமக்கு இடவசதி போதவில்லை. சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எமது வேண்டுகோளுக்கிணங்கி 5 வகுப்பறைகள் கொண்ட கீற்றுக் கொட்டில் ஒன்றை அமைத்து உதவியது. அத்துடன் ஊரிற் சேகரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு மேலும் 5 வகுப்பறைகள் அமைக்கப்பட்டன.

அன்றைய அதிபர் திரு. நா. கணேசபிள்ளை அவர்கள் பாடசாலை அழிவினால் விரக்தியடைந்து புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரிக்கு மாற்றம் பெற்றனர். எந்த வசதிகளுமற்ற பாடசாலையைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை. கல்விப் பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலையில் உதவியாசிரியாரக விளங்கிய திரு. ஆ. சி. நடராஜா அவர்களிடம் அவரது விருப்பத்திற்கு மாறாக அதிபர் பதவியை ஒப்படைத்தார்.

*01-03-1988*இல் பதவியேற்ற புதிய அதிபரும், அவரது ஆசிரியர்களும் வசதியீனங்களை நீக்குவதானால் பழைய இடத்துக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என முடிவு செய்தனர். கல்வித் திணைக்களம் கையை விரித்தது; உடன் உதவிகளுக்கு நிதியில்லை என்றது.

**இரண்டாவது இடப்பெயர்வு** *: (1988 — 1990)*

அதிபர் தற்துணிவோடு ஒரு மாதகாலத்தில் பாடசாலையை இடம்மாற்றியே தீருவது என்று உறுதிபூண்டார். ஈராண்டுகளுக்கு மேலாகச் சனநடமாட்டமற்றிருந்த பாடசாலை வளவு பற்றைக் காடாகக் காட்சியளித்தது; கட்டிடங்கள் அனைத்தும் தகர்ந்து மயானபூமியாக விளங்கியது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், உற்சாகமாகச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். *16* ஏக்கர் நிலம் ஓர் இருவாரங்களிற் சுத்தப்படுத்தப்பட்டமை ஒரு வரலாற்று நிகழ்வாகியது. *22-04-1988*இல் ஆலமர நிழல்களில் வகுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகள் ஆரம்பிக்கப்பட்டன. இடிந்த கட்டிட எச்சங்களில் ஓர் அலுவலகமும் 4 வகுப் பறைகளும் ஏற்படுத்தப்பட்டன.

போரினால் 1987 இல் வலி. வடக்குப் பிரதேசம் முழுவதுமே குடாநாட்டின் மற் றெந்தப் பகுதிகளும் கண்டிராத அழிவு களைச் சந்தித்தது. அப்பகுதி மக்களின் துயர்துடைப்புக்கென வலி-வடக்குப் பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. சட்டத் தரணி திரு. அ. கணேசலிங்கம் அதன்தலை வராகவும். திரு. சி. சிவமகாராசா செயலாளராகவும் திரு. ஆ. சி. நடராஜா உபதலைவராகவும் விளங்கினர். அன்றைய காலக்கட்டத்தில் மிகமோசமாக வலிவடக் கில் பாதிக்கப்பட்ட பாடசாலையாக எமது பாடசாலை விளங்கியதனால் ஒன்றியம் தனது உணர்வு பூர்வமான ஒத்துழைப்பை இதற்கு வழங்க முன்வந்தது.

250 பரப்புடைய பாடசாலை வளாகத் தின் சுற்றுமதில்கள் தகர்க்கப்பட்டிருந்தன வகுப்பறைகளோ 4 மட்டுமே. தண்ணீர் வசதி, மலசல கூட வசதிகள் இல்லை. தள பாடங்கள் இல்லை, பெற்றோரிடம் எது வும் எதிர்பார்க்க முடியாத நிலை. அதிபர் நம்பிக்கையோடு செயற்பட்டார். ஒன்றியம் இவற்றுக்கெல்லாம் கைகொடுக்க முன்வந் தது. அரசு சார்பற்ற நிறுவனங்களின் பேருதவிகளைப் பெற்றுத்தந்த ஒன்றியத் தின் தலைவர் சட்டத்தரணி திரு. அ. கணேசலிங்கம், செயலாளர் திரு. சி. சிவமகாராசா அவர்களது உழைப்புத்தான் பாடசாலைக்கு உயிர் கொடுத்தமை எம் மால் மறக்க முடியாததாகும்.

**ஒன்றியத்தின் முயற்சியினாற் பெறப்பட்ட உதவிகள் :**

1. 20 வகுப்பறைகள் கொண்ட சீற்றுக் கொட்டில்கள் அமைப்பதற்கும். மின் மோட்டர்கள் முதலியன பெறப்படு வதற்கும் T. R. R. O. ஒரு இலட்சத் துப்பதினையாயிரம் ரூபாவை வழங் கியது.
2. கரும்பலகைகள், சல கூடங்கள் அமைப் பதற்குச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (U. K.) ரூபா 37000/- வழங்கியது.
3. சுமார் 800 மாணவர்களுக்குத் தேவை யான பயிற்சிக் கொப்பிகளைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியது.
4. சர்வோதய அமைப்பு குழாய்க் கிணறு தண்ணீர்த் தாங்கிகளை அமைத்த துடன் மின்மோட்டர் ஒன்றையும் வழங் கியது.
5. ரெட்பானா அமைப்பு 500 மாணவர் களுக்குச் சீருடைகளை வழங்கியது.
6. மஸ்கன்ஸ் நிறுவனம் ரூபா 10000/- பெறுமதியான கூரைத் தகடுகளை வழங்கியது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவியைப் பெற்று இளைஞர் கழகம் ஒன்றைத் தனது கிராமத்தில் உடனுருவாக் கிய அதிபர் அதன் மூலம் பாடசாலை வளவில் பல திருத்த வேலைகளையும் மேற் கொண்டார்.


1989 இல் எமது பாடசாலையின் புன ரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய ஒரு கோடிரூபாவைக் கொண்டு உடனடியாகப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கணிசமான அளவு கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 1990 ஆனிமாதம் மீண்டும் யுத்தம் திடீரென வெடித்தது. பாடசாலையின் அனைத்து உடமைகளையும் இழந்து மீண்டும் வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

**மூன்றாவது இடப்பெயர்வு : (1990 — 1993)**

இம்முறை சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரி எமக்குத் தஞ்சமளித்தது. ஆசிரியர் வரவுப்பதிவேடு மட்டுமே எஞ்சிய உடமை யாகியது. மாணவர்களை வேறு பாடசாலை களிற் சென்று கல்வியைத் தொடருமாறு கூறிய ஆலோசனைகளை மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராயில் இயங்கும்



எமது பாடசாலையின்



தற்போதய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கவில்லை. எமது நிலைகண்டு உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் ஏழு வகுப்பறைகளைத் தாமாகவே தந்துதவினர். 1990 மார்கழியில் பாடசாலை அங்கு மீண்டும் ஆரம்பமாகியது.

மாணவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க வளப்பிரச்சினை அங்கு உருவாகியது. கல்வித் திணைக்களத்தை அணுகியும் பயனெதுவும் கிட்டவில்லை. பெற்றோர் பழைய மாணவர் உதவியைப் பெறுவதன்றி வேறு வழியிருக்கவில்லை. அவர்களது உதவிகளைக் கொண்டு இந்துக்கல்லூரியின் வடபகுதியில் 16 வகுப்பறைகள் உருவாக்கப்பட்டன. கொங்கிறிற் கற்களில், தடிகள், பலகைகளைப் பரப்பி மாணவர்கள் அமர்ந்திருந்து கல்வி கற்றதை என்றும் மறக்க முடியாது. கல்லூரிக்கு வடக்கே இருந்த தனியார் வீடும் நுண்கலைப்பாடங்களை நடாத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.

**நான்காவது இடப்பெயர்வு : (1993 — 1995)**

இருபாடசாலைகளிலும் நாளுக்கு நாள் மாணவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க வளப் பிரச்சினைகள் தலைதூக்கின. இவ் விடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு இந்துக் கல்லூரியின் முன்புறத்திலுள்ள தனியார் வளவுக்குப் பாடசாலையை முழுமையாக மாற்றுவதென முடிவு எடுக்கப்பட்டது.

12 பரப்புக்காணியை விஸ்திரணமாகக் கொண்ட அவ்வளவிலுள்ள வீடு எரிக்கப்பட்டுப் பாழடைந்த நிலையில் இருந்தமையால், அவ்வீட்டில் எப்படிப்பாடசாலையை நடாத்துவது? கொட்டில்களை அமைப்பதற்குக் குறைந்தது ஐந்து இலட்சம் ரூபா வேண்டுமே! அவ்வளவு பணத்தை எப்படிப் பெறுவது? என்ற வினாக்கள் எழுந்தன.

''எதற்கும் நாங்கள் தயார்'' என்றனர் ஆசிரியர்கள். ''இதுவே போதும்; எல்லாம் தானாகவே நடக்கும்'' என்றார் அதிபர். ஆசிரியர்கள் எல்லோரும் உற்சாகமடைந்தனர். அன்றைய காலகட்டத்தில் மருதனார்மடக் கோட்டத்திற்குட்பட்ட 103 பாடசாலைகளுக்கான தவணைப் பரீட்சைகளை நடாத்தும் முழுப் பொறுப்பையும் எமது அதிபர் இதற்கென்றே துணிவுடன் பொறுப்பேற்றார். பாடசாலை ஆசிரியர் குழாம் முழு மூச்சுடன் இப்பரீட்சை வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டது. பரீட்சை வினாக்களைத் தயாரித்தல், பொதி செய்தல், பாடசாலைகளுக்கு அப்பொதிகளை விநியோகித்தல் ஆகிய பணிகளை மின்னல் வேகத்தில் மேற் கொண்டனர். இதுவரை காலமும் கண்டறியாத மிகக் குறைந்த கட்டணத்தில் பரீட்சை நடாத்திக் காண்பித்துப் பிரதிக் கல்விப்பணிபாளரினதும், ஏனைய அதிபர், ஆசிரியர்களினதும் பாராட்டைப் பெற்றதுமன்றி, அதே நேரத்தில் தாம் செய்த பணிகளுக்காக எமது பாடசாலை ஆசிரியர்கள் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் மிதப்படுத்தி, அதனை இந்த இடம்பெயர்வுக்குரிய மூலதனமாக்கினர்.

மேலும் அதிபர் தமது ஆசிரியர்களுடன் சேர்ந்து நாடகம் நடித்து நிதி சேகரிக்கத் திட்டம் வகுத்தார். அவர் தயாரித்துப் பிரதம பாத்திரமேற்று ஆசிரியர்களுடன் நடித்த ' மேலும் கீழும் ' நாடகம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இருதடவைகளும், மகாஜனக்கல்லூரி, இராமநாதன் கல்லூரிகளில் 3 தடவைகளும் மேடையேற்றப்பட்டன. அந்த நாடகமூலம் மூன்றரை இலட்சம் ரூபாவுக்குமேல் சேகரிக்கப்பட்டது. மேலும் புன்னாலைக்கட்டுவன், ஈவினை மக்கள் பனைமரங்களை அன்பளிப்புச் செய்தனர். அதிபர், ஆசிரியர்களினது அயராத உழைப்பே இம்முறை இடம்பெயர்வினால் நலிவுற்ற பாடசாலையின் வள ஆக்கத்திற்குக் கைகொடுத்ததென்றால் அது மிகையாகாது. அதிபர் ஆசிரியர்களின் தன்னலமற்ற கடின உழைப்பைக் கண்ட கல்வித் திணைக்களமும் சில உதவிகளைச் செய்ய முன்வந்தது. இதன் காரணமாகக் கட்டிடத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.

**ஐந்தாவது இடம்பெயர்வு : (1995 — 1996)**

1995 றிவிறச இராணுவ நடவடிக்கையால் மீண்டும் பாடசாலை கைவிடப்பட்டது. தென்மராட்சி, வடமராட்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாம மக்கள் மேற்கொண்ட இடம் பெயர்வு இதற்குக் காரணமாகும்.

தென்மராட்சிக்குச் சென்ற ஓரிரு வாரங்களில் அதிபர் அவர்களின் முயற்சியால், அல்லாரையில் திரு. S. இரத்தினசபாபதி அவர்களின் இல்லத்தில், எமது பாடசாலைக்கென ஒரு தற்காலிக அலுவலகம் திறக்கப்பட்டது, மேலும் அதிபர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் அங்கு தேவையான தளபாடங்கள் பெறப்பட்டுப் புளியமரநிழலிலே க. பொ. த. சாதாரணதர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வேறொரு வளவில் ஏனைய வகுப்புகளையும் ஆரம்பிக்கும் நோக்கோடு அலுவலகக் கொட்டிலொன்றும் அமைக்கப்பட்டது.

அதே நேரத்திற் கல்வித்திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய அல்லாரை அ. த. க. பாடசாலையில், எமது பாடசாலையுடன் மேலும் ஒன்பது இடம் பெயர்ந்த பாடசாலைகளும் ஒன்றினைக்கப்பட்டுப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டுக்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் அங்கு நடாத்தப்பட்டன.

**ஆறாவது இடம்பெயர்வு** : *(1996)*

1996 சித்திரையில் வலிகாமம் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் சூழ்நிலை ஏற்பட்டுத் தத்தம் இடங்களுக்குத் திரும்பினர். எனவே எமது பாடசாலையும் உரும்பிராய்க்கு வரவேண்டியதாகியது. பாடசாலையில் 14 வகுப்பறைகளைக் கொண்ட கூரைத்தகட்டுக் கொட்டில்கள் இருந்த இடமே தெரியாது போயிருந்தன. வீட்டுக் கூரைகள் யாவும் தகர்ந்திருந்தன. பாடசாலைத் தளபாடங்கள், மாணவர் இருக்கைகள் பாடசாலையின் ஏனைய சொத்துக்கள் யாவும் இழந்தநிலை. பாடசாலையை மீளப்புனரமைக்க உதவி கோரிப் பெற்றோரிடம் போக முடியாத நிலை. இந்நிலையில் பழைய மாணவர் சங்கம் கை கொடுத்துதவியது. அத்துடன் கல்வித் திணைக்களமும் தீவுப்பகுதிப் பாடசாலைகள் முன்னர் யாழ் நகரில் பயன்படுத்திய கொட்டில்களையும் தந்துதவித் திருத்த வேலைகளுக்குச் சிறிதளவு நிதியும் வழங்கியது. அதிபர் இல்லாத நிலையில் ஏற்பட்ட இந்த இடம்பெயர்வுக்கு உப அதிபர் திரு. த. சற்குண சர்மா அவர்களும் பகுதித்தலைவர் திரு. சி. மணியம் அவர்களும் வழங்கிய பங்களிப்பு மிகப்பெரிதாகும்,

பத்து ஆண்டுகளில் ஆறு இடம்பெயர்வுகளைச் சந்தித்த எமது பாடசாலை தன் கட்டமைப்பில் எள்ளளவேனும் தளராது இன்றும் தலை நிமிர்ந்து நிற்பது பெருமைப்படக்கூடிய ஒரு விடயமாகும். இத்தகைய ஒரு நீண்டகால அனுபவம் - 6 இடம்பெயர்வுகள் - வேறெந்தப் பாடசாலைக்கும் கிடைத்திருக்குமோ என்பது சந்தேகமே.

ஒவ்வொரு இடப்பெயர்வின் பொழுதும் பொதுவாகப் பாடசாலையின் முழுத் தளபாடங்களும், ஏனைய சொத்துக்களும் இழக்கப்பட்டன எனலாம். அவற்றை மீண்டும் மீண்டும் தேடித் தேடி ஆக்கிச் செயற்பட்டமை அனுபவித்துள்ள வேதனைகளுக்குள்ளே ஒரு சாதனையேயாகும்.

ஒரு சில இடம்பெயர்வுகளின் பொழுது எமது பரிதாப நிலைகண்ட அதிகாரிகள் வேறு பாடசாலைகளுடன் இணைக்கும்படி கூறியதுமுண்டு. ஆனால் எந்த இடர்ப்பாடுகளையும் முகங் கொடுக்கக் கூடிய, தேடற்கரிய ஒரு பாடசாலைச் சமூகத்தை நாம் உருவாக்கிக் கொண்டமையால், இன்று இப்பாடசாலை காலத்தை வென்று நிற்கும் கலாலயமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது. 12 பரப்புக்காணியில் அடைபட்டுக் குண்டுச் சட்டியிற் குதிரை ஓடியதுபோல முடங்கிக் கிடக்கும் கிடக்கும் எமது மணிகள், 250 பரப்புடைய எமது சொந்த வளாகத்துக்கு ஏழாவது இடம் பெயர்வை எப்பொழுது காண்பரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரினும் தளரினும் எம்பணி தொடரும்

திரு. ந. ஜெயகுமாரன்
(செயலர், பழைய மாணவர் சங்கம்.)

எமக்கெல்லாம் அறிவூட்டி வழிகாட்டி வளர்த்தெடுத்ததாய் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம். அல்லற்பட்டு அழுது புலம்பும் தாயைக் காணும் போது எத்தகைய மனக்குமுறலும் அங்கலாய்ப்பும் ஏற்படுமோ அதேபோல எமது வித்தியாலயம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் துன்பங்கள் எமது உணர்வுகளைத் தூண்டிவிட்டன. அவை சொல்லொணாத் துயரங்களை எம் மனதில் கிளறி விட்டன. எனினும் அத்துயரங்களுக்குள் அமிழ்ந்து போகாமல் அவற்றைக்களைந்தெறிய வேண்டிய பொறுப்பும் கடமையும் பாடசாலை மைந்தர்களாகிய எமக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்து கொண்டோம்.

இந்த வகையில் பழைய மாணவர் சங்க செயற்பாடுகள் யாவும் துரிதமாக ஒழுங்கமைக்கப்பட்டன. பல்வேறுபட்ட எதிர் பார்ப்புக்களை நிறைவு செய்ய வேண்டிய பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பதவி எனக்குக் கிடைத்தது. காலத்தின் தேவையும் கடமையும் என் கரத்திலும் இருப்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

வெறுங்கையோடு வேதனையைச் சுமக்கின்ற நிலைமை எமது பாடசாலைக்கு மூன்றாவது தடவையும் ஏற்பட்டது. ஆம்! எமது பாடசாலை 1990 ஆம் ஆண்டு மூன்றாவது முறையும் இடம்பெயர்ந்து கொண்டது. உருப்பிராய் இந்துக்கல்லூரி எமது பாடசாலையை அரவணைத்தது. எனினும் எம்மைத் தாங்கும் இயல்தகவு அதனிடம் இருக்கவில்லை. கல்வித்திணைக்களமோ செயலிழந்த நிலையில் காணப்பட்டது. யாரை நம்புவது? யாரிடம் கேட்பது? போன்ற பல கேள்விகள் எம்மனதில் தோன்றின. வேதனையும் விரக்தியும் எதிர்காலம் பற்றிய சூனியமும் எல்லோரையும் ஆட்கொண்டிருந்த அந்த வேளையில் ஆளுமை மிக்க எமது அதிபர் திரு. ஆ. சி. நடராஜா அவர்களின் துரிதமான செயற்பாடுகள் பாடசாலையின் ஆரோக்கியத்திற்கு வலுவூட்டியது. பழைய மாணவர்களையும், பெற்றோர்களையும், நலன்விரும்பிகளையும் ஒன்றிணைத்து, இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி பாடசாலைக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சியில் அதிபர் ஈடுபட்டார். இச்செயற்பாடுகளில் பழைய மாணவர் சங்கம், தனது பங்களிப்பை முழுமையாகச் செய்ய முன்வந்தது. ஆற்றல்மிக்க அதிபரின் வழிகாட்டலும் உறுதிமிக்க பிரதி அதிபர்களின் அனுசரணையும் உத்தம ஆசிரியர்களின் தன்னலமற்ற பங்களிப்பும் எமது சங்கத்திற்கு வலுவூட்டின.

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஏழு வகுப்பறைகள் எமக்கென வழங்கப்பட்டன. பதினாறு வகுப்புக்களுக்கென தற்காலிக கொட்டில்களும். நூலகமும், செயலகமும் அத்தியாவசியமாக அமைக்கப்படவேண்டி இருந்தன. இவற்றுக்கென புன்னாலைக் கட்டுவன், ஈவினை மக்கள் சுமார் எண்பது பனைகளை அன்பளிப்பு செய்தார்கள். எனினும் இவற்றை ஒழுங்கு செய்து வகுப்பறைகளாக்குவதற்கு நிதி வேண்டும் என்ற பிரச்சினை மேற்கிளம்பிய போது பணம் சேர்ப்பதற்கான ஒரேவழி தான் மேடையேறுவதே என்று அதிபர் முடிவு செய்தார்.

மேலும் கீழும் :

தான் ஆசிரியராகப் பணியாற்றிய யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தாரித்து, பிரதம பாத்திரமேற்று நடித்து நாற்பத்தி மூன்று தடவைகள் மேடையேற்றிய "மேலுங்கீழும்" என்ற நாடகத்தை 12 ஆண்டுகளுக்குப் பின்பு இங்கு மீள மேடையேற்ற அதிபர் முன் வந்தார். ஆசிரியைகள் **செல்வி அருணா கந்தவனம், செல்வி சந்திரஶ்ரீ தெட்சணா மூர்த்தி,** ஆசிரியர்கள் **திரு. தா. பாலசுப்பிர மணியம், திரு. க. ஆனந்தராசா, திரு. சி. மணியம், திரு. க. கதிரவேலு, திரு. அ. அன்ரன் குணரத்தினம்** முதலியோர் ஏனைய நடிகர்களாக பாகம் ஏற்றனர்.

இந்நாடகம் மகாஜனாக்கல்லூரியிலும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தி லும் இராமநாதன் கல்லூரியில் இருதடவை களும் மேடையேற்றப்பட்டது இதன் மூலம் நாற்பத்தையாயிரம் ரூபா சேகரிக்கப் பட்டது. இதனாற் தற்காலிகக் கொட்டில் களை அமைக்கும் பணி எளிதாக நிறை வேறியது.

மாணவர் தொகை வேகமாக அதிகரித் தது. உரும்பிராய் இந்துக்கல்லூரி வளம் திருப்திதரவில்லை. எனவே 1993 யூனில் அக்கல்லூரியின் எதிர்ப்புற வளவுக்கு எமது பாடசாலையைநகர்த்தத்திட்டமிட்டோம். பாடசாலையின் இந்நான்காவது நகர்ச்சிக்கு ரூபா நான்கு லட்சமாவது வேண்டுமே என்று மதிப்பிட்ட போது அன்றைய சூழலில் இது ஒரு கற்பனைக் கனவு என்று பலரும்விமர் சித்தனர்; கல்வித்திணைக்களம் கையறு நிலையிலிருந்தது. அதிபர் தனது பாசம் மிக்க ஆசிரியர் குழாத்தைப் பயன்படுத்தி "எமது திட்டம் வெறும் கனவல்ல" என் பதை செயற்படுத்திக் காட்டினார். "எங்க ளால் முடியும் என்று நாம் உறுதி எடுத்தால் எதனையும் சாதிக்கலாம்" என்றார்.

மருதனார்மடக் கல்விக்கோட்ட 1 3 பாடசாலைகளுக்கான பரீட்சை நடாத்தும் பொறுப்பை தானே முழுமையாக ஏற்று, தமது ஆசிரியர்களைக் கூலிகளாக்கி, அதன் மூலம் ரூபா ஒரு லட்சத்துக்குமேல் வேதனம் ஈட்டினார். 'மேலும் கீழும்' நாடகத்தைக் கண்டுகளிக்காதவர்கள் மீண்டும் அதனை மேடையேற்றும்படி விடுத்த கோரிக்கை யைப் நன்கு பயன்படுத்தினால் மிகுதி நிதி யையும் பெறலாம் என்று தீர்மானித்தோம்.

**மேலும் கீழும் பகுதி II :**

முன்னைய நாடகத்தைப் பார்த்தவர்கள் பார்க்காதவர்கள் அனைவரையும் ஈர்க்கும் வகையில் 'மேலும் கீழும் பகுதி II' என்ற புதிய படைப்பை அதிபர் உருவாக்கினார். ரூபா 5000/- 2000/- 1000/- 500/- என நுழைவுச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டன. 3 லட்சரூபாவுக்கு அச்சிட்ட நுழைவுச்சீட்டுகள் 20 நாட்களில் விற்றுத் தீர்ந்துவிட்டன. எதிர்பார்த்ததற்கும் மேலான வெற்றி எமக்குக்கிடைத்தது. உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நாடகம் நடந்தே றியது. ஒரு நாடகம் இவ்வளவு பணத்தை ஈட்டித்தரும் என்ற செய்தி இந்த நாடகத் தின் மூலம் வரலாற்றில் பதிக்கப்பட்டிருக் கும் என்று நான் கருதுகிறேன். மேலும் எந்த ஒரு பாடசாலையும் தன்னை வலுப் படுத்திக்கொள்ள தன் திறமையை மூலதன மாக்கி வெற்றிகாணலாம் என்பதற்கும் எமதுஇந்த முயற்சிகள் ஒரு முன்மாதிரியாக அமையும் என்றும் நான் கருதுகின்றேன்.

கோட்டப் பரீட்சையை மேற்பார்வை செய்து நடத்துதல், நாடகப்பிரதி எழுது தல், தயாரித்தல், நடித்தல், நுழைவுச் சீட்டுக்களை விற்றல், தனது பாடசாலைப் பரீட்சையை நடத்துதல் எனப் பல்வேறு பணிகளையும் ஒரே காலத்தில் அதுவும் 20 நாட்களில் நடத்தி முடிக்க முயன்ற எமது அதிபர் உடல் ரீதியான பாதிப்புக் குட்பட்டுத் தீராத நோய்க்கு உட்பட்டமை ஒரு துயர் தோய்ந்த சம்பவமாகியது.

**வெளிநாட்டு பழைய மாணவர் உதவி :**

பாடசாலையின் நிலை கண்ட கடல் கடந்த எமது பழைய மாணவர்கள் பலரும் தம்மாலான உதவிகளை வழங்க முன்வந் தனர். இவர்களுள் குப்பிளான் **தர்மலிங்கம் பிரபாகரன்,** வயாவிளான் **வதனி வேலுப் பிள்ளை** ஆகியோர் சுவிற்சலாந்திலிருந்து வழங்கிய உதவிகள் இங்கு நன்றியுடன் நினைவு படுத்த வேண்டியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு



பழைய மாணவர் சங்கச் செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிக் கட்டத்தில் கல்வித்திணைக்க ளமும் எமது நிலைகண்டு சில கொட்ட கைகளை அமைத்துத் தந்தது.

**கொழும்புக்கிளை :**

கொழும்பிலுள்ள எமது பழைய மாண வர்கள், எமது சங்கக் கிளை ஒன்றினை அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர். திருவாளர்கள். சக்திதரன் சோதிலிங்கம், சிவகுமார், ந. ஜீவகுமார் Dr. வி. ரவீந்திரன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக விளங்குகின்றனர்.

பாடசாலை ஐந்தாவது முறையாகத் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து மீண்டும் இன்றைய இடத்திற்கு வந்து சேர்ந்தது. 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்பது போல அழிக்கப்பட்டிருந்த கொட்டில் களையும் வீட்டையும் மறுசீரமைத்து, வேண் டிய தளபாடங்களையும் வழங்கி உதவ சுமார் ஒரு லட்சம்ரூபாவுக்குமேல் எமது சங்கம் செலவு செய்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள் பலர் வன்னிக்கு இடம்பெயர்ந்தமையால் தற்கா லிகமாகத் தொண்டர் ஆசிரியர்களை நிய மித்தும் எமது சங்கம் உதவிவருகிறது.

**எமது சமூகப்பணிகள் :**

பாடசாலைப் பணிகளுக்கு அப்பால் அதிபரின் வழிகாட்டலில் பல சமூகப்பணி களையும் எமது சங்கம் செய்து வருகின்றது 1995 இல் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது மல்லாகம், அளவெட்டி, இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த 1500 இக்கு மேற்பட்ட மக்கள் திடீர் அகதிகளாகி உரும்பிராய் இந்துக்கல்லூரி யில் தஞ்சம் புகுந்தனர். அவ்வேளையில் அம்முகாமைப் பொறுப்பேற்று நடத்திய கிராமசேவை அலுவலர் திரு. சின்னத்துரை யின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு நாள் 3 நேரமும் சமைத்த உணவை சுமார் 30000/- ரூபா செலவில் வழங்கினோம். ஆசிரியர் களே இச்சமையல் வேலைகளைச் செய்து முடித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இராணுவ நடவடிக்கையால் உடு துணிகளைக் கூட இழந்து வெளியேறிய மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் படும் துன்பங்களை அறிந்ததும் துணிசேகரிப்புத் நடவடிக்கைகளைச் சங்கம் மேற்கொண்டது ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் உரும்பிராய், ஊரெழு, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளுக்கு வீடு வீடாகச் சென்று 4000 த்துக்கு மேற்பட்ட உடுப்புகளைச் சேகரித்துப் பொதி செய்து சமூகசேவை நிறுவனங்கள் மூலம் விநியோ கம் செய்தனர்.

**வீடு அன்பளிப்பு :**

எமது பாடசாலைச் சுகாதாரத் தொழிலாளி திரு. செபஸ்தியான் எஸ் தாக்கியின் வீடு 'றிவிரச' இராணுவ நட வடிக்கையால் முற்றாகவே அழிக்கப் பட்டது. அவருக்கு ரூபா 20,000/- மதிப் பீட்டில் ஒரு வீடுகட்டிக் கொடுக்கத் தீர் மானித்தோம். அதிபர் ஆசிரியர்களின் பங் களிப்போடு இதனைச் செய்துமுடித்தோம்.

**அழகும் ஆனந்தமும்:**

தற்காலிக கொட்டில்களிலே கல்வி பயிலும் மாணவர்கள், அச்சூழலால் உள உணர்வு குன்றிவிடக் கூடாது என்பதில் அதிபர் தனித்துவமான கவனம் செலுத்தி வருகிறார். எனவே பாடசாலை வளா கத்தை ஒரு நந்தவனமாக, ஆச்சிரமமாக அமைக்க விளைத்தார். அதனையும் எமது சங்கம் விருப்போடு ஏற்றுச் செயற்படுத்தி வருகிறது.

**"கல்வித்தாயே ! உன் கழல்**
**தொழுதெழுவோம்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயவையின் அன்னை நீயே நிலைபெற்று வாழி அம்மா!

'அன்னைதாசன்' க. ஆனந்தராசா

பனையொடு தென்னை எங்கும்
பசுமையாய் வளர்ந்த பூமி
மாவுடன் வாழை பலா
வளமுடன் விளைந்த பூமி
செழுமையாய் செம்மண் எங்கும்
சிறப்புற நிறைந்த பூமி
வயவையாம் எங்கள் மண்ணின்
மாபெரும் கல்வித் தாய் நீ.

தமிழனின் தலை விதியாலே
திறிகெட்டு ஓடும் வேளை
தாயே நாம் உன்னைவிட்டு
தலை தெறிக்க ஓடிவிட்டோம்
உடலைத் தான் அங்குவிட்டோம்
உயிரை நாம் ஒப்புகின்றோம்
உன் பெயர் மங்காதிந்த
உலகிலே நிலைக்கச் செய்தோம்.

உன்மைந்தர் நாங்க ளம்மா
உயிர் மூச்சு உள்ள மட்டும்
உன்நாமம் நாம் மறவோம்
ஒன்றாகி உனை வளர்ப்போம்
வயாவிளான் ம. ம. வி. யெனும்
பெயரினைக் காவிக் காவி
பெயர்கின்ற இடங்க ளெல்லாம்
பெயருடன் நிலைக்க வைத்தோம்.

கலையொடு கல்வி தந்தாய்
காசினி சிறக்க வைத்தாய்
மலையென இடர் வந்தாலும்
உயர்வுறும் அறிவு தந்தாய்
கயமைகள் மலிந்தும் மண்ணில்
பொன்விழாக் காணும் எங்கள்
வயவையின் அன்னை நீயே
நிலைபெற்று வாழி அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
VAY
AR

## 'உதயன்' பத்திரிகையிலிருந்து......

**செய்தி 10-11-1996**

*பாடசாலைகளிற் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுவது உண்டு. ஆசிரியர்களுக்குச் சேவை நலம் பாராட்டி விழா எடுத்து அன்பளிப்புகள் வழங்கப்படுவதும் உண்டு. பழைய மாணவர் சங்கங்கள் கல்லூரியில் வசதிகள் செய்வதற்கு நிதி வழங்குவதும் உண்டு.*

*இவை எல்லாம் வழமையான சங்கதிகள். ஆனால் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் புதுமை ஒன்றினைச் செய்திருக்கின்றனர். அந்தப் பாடசாலையில் பணிபுரியும் தொழிலாளி ஒருவருக்கு உறையுள் ஒன்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளனர். .........*

ARCHIVES

**ஆசிரியர் தலையங்கம் 11-11-1996**

மனிதநேயம் மலரட்டும்!

*வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் புதுமையொன்றைச் செய்திருக்கிறார்கள் ...... ரூபா 20000/- செலவில் சிறியவீடொன்றைத் தமது பாடசாலைத் தொழிலாளி செ. எஸ்தாச்கிக்குக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்துள்ளனர்..............*

*இந்த ஏற்பாடு முற்று முழுதாக மனிதநேயமானது. அவர்கள் செய்த உதவி காலத்தாற் செய்த பேருதவி. இத்தகைய மனித நேய உதவிகளே நொந்து போயுள்ள எமது மக்களுக்கு இன்று தேவைப் படுகின்றன. .........*

*இத்தகைய மனிதப் பண்பும் மனித நேயமும் மனிதாபிமானமும் எமது மக்களிடையே பரவினால்தான் இன்றைய தாழ்வுற்ற நிலையிலிருந்து தமிழர் சமுகம் விடுபட்டு ஓரளவேனும் தலையுயர்த்தலாம்.*

நன்றி '**உதயன்**'

250137

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிலோர் வெண்ணிலா

செல்வன் த. ஐங்கரன்

விண்ணிலா போலொரு எம்மண்ணிலே பொன்நிலா
பொன்னிலா காண்பது இன்றொரு பொன்விழா
எண்ணிலா வளர்ச்சிகள் எத்தனை உயர்ச்சிகள்
மண்ணிலே நாமெலாம் மதிப்புடன் நடந்திட
வயாவிளான் என்றொரு வெண்ணிலா காரணம்

வயதுகள் ஐம்பது வளமுடன் கண்டுமே
வயாவிளான் கொண்டது புகழை என்றுமே
தயாள சிந்தையும் தகுந்த அன்பையும்
உயர்ந்த அறிவையும் சிறந்த கடமையும்
கண்டது உண்மை நான் வயாவிளான் தன்னிலே

எழுந்து நின்ற எங்களின் கோயில்
விழுந்தது உண்மை தான் அழிந்ததில்லை
விழுந்த வேகத்தில் எழுந்து நிற்கின்றோம்
மழுங்கும் ஒளியினை ஏற்றி வளர்க்கிறோம்
எழுந்து சிரித்தது எம் நெஞ்சு இனித்தது

கொட்டிலில் படித்தோம் கொடியுடன் தான்
கட்டினோம் தனியிடம் எங்களின் வேர்வையில்
காட்டினோம் கல்வியை காலம் அறிந்தது
நாட்டினோம் புகழ் கொடி நடராஜர் துணையுடன்
ஏட்டிலே இன்று எம் சாதனை பதிந்தது

(வேறு)

எனை வளர்த்த தாயிற்கு எதிர்காலம் கேட்கின்றேன்
எனைப் படைத்த இறைவா உனைதான் கேட்கின்றேன்
இறந்த கால வசந்தங்கள் இனும் மணக்கும் சுகந்தங்கள்
பறந்து போய் பார்க்கின்றேன் பரந்த எம் வயாவிளானை


பஞ்சணையாய் ஆகி நின்று நெஞ்சினிக்க நாமெலாம்
கொஞ்சி விளையாடி விஞ்சு சுகம் தேடி
வஞ்சகங்கள் இல்லாது கூடி விளையாடும்
பச்சை வெளி வேண்டும் பரந்த வெளி வேண்டும்

சிறந் தெங்கள் கல்வி விரிந் தொளிர்வது போல
பரந்த சைந்தாடும் ஆலமரம் தன்னில்
தூங்கிக் கிடந்தாடும் விழுதுகளின் மீது
தொங்கி விளையாடும் தொலைந்த காலம் வேண்டும்

இன்னும் வேண்டும் என்னருமை பாடசாலை
விண் முட்டும் மாடியதும் மேடை மண்டபமும் வளமான
மண் நிலமும் இதை எல்லாம் கவி பாடும் காலமதும்
ஆண்டவனே அருளக என்று வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986இல் நிர்மூலமாக்கப்பட்ட
எமது கல்லூரியின் எச்சங்கள்



விஞ்ஞான மாடிக்கட்டிடம்



வகுப்பறைகளிற் சில



வெள்ளிவிழா மண்டபம்



பிரதான மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் பார்த்தசாரதி



புன்னகை பூத்த முகம், எளிமையான தோற்றம், கருணை உள்ளம், கண்டவர் மதிக்கும் உருவம், பண்பின் அமைவிடம், பொறுமையின் சின்னம், அறிவின் சிகரம், என்றெல்லாம் சொற்களை அடுக்கிச் சென்றாலும் வார்த்தைகளால் ஈடுகாணமுடியாத ஒரு பேராளர் உயர்திரு. மு. கணேசன் அவர்கள்.

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் கல்வி கற்ற கணேசன் அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பினை முடித்து 1959இல் ஆசிரியப் பணியைப் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியிலேயே ஆரம்பித்தார். 1967இல் அங்கிருந்து மட்டக்களப்பு வந்தாறுமூலை ம. ம. வி. க்கு மாற்றலாகி ஏழு ஆண்டுகள் அங்கு கடமையாற்றினார். 1975இல் எமது பாடசாலைக்கு வந்த கணேசன் அவர்கள் பத்து ஆண்டுகள் ஆசிரியராகவும், அடுத்த பத்து ஆண்டுகள் உப அதிபராகவும் கடமையாற்றி 15 - 10 - 1995இல் ஓய்வு பெற்றனர்.

இருபது ஆண்டுகளாக இப்பாடசாலையில் இணையற்ற சேவையாற்றிப் பாடசாலையின் உயர்வுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

மாணவர்களுக்குக் கல்வியென்னுங் கடலை அமுதாக ஊட்டி பசித்த மாணவர்களுக்கு உணவளித்து, நோயுற்ற மாணவர்களுக்கு மருந்தளித்து பெற்றோரை இழந்த மாணவர்களுக்குப் பெற்றோராக விளங்கி மாணவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கணேசன் அவர்களை 'வைசர் சேர்' என்றே மாணவர் அன்பாக அழைத்தனர்.

ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குவதில் பேராசானாக, வழிகாட்டுவதிலே தலைவனாக. குற்றந்தாங்கி அன்பைப் பொழிவதிலே தாயாக, கண்டிப்பதிலே தந்தையாக, உதவுவதிலே உற்ற நண்பனாக, ஆசிரியர்களின் பழுக்களைத் தாங்குவதிலே தேவ மைந்தனாக விளங்கியதுடன். அதிபரை வழிநடத்துவதிலே நல்ல மைச்சனாகச் செயற்பட்டவர் எங்கள் உப அதிபர் கனேசன் அவர்கள்.

பாரதத்திலே தர்மத்தை நிலைநாட்டவந்த பார்த்த சாரதிபோல் பாடசாலையின் பெருமையை உயர்த்துவதிலே தன்னிகரற்று விளங்கியவர் கணேசன் அவர்கள். இப்பாடசாலையின் வரலாற்றில் அவரது சேவை இமயமென உயர்ந்து நிற்கிறது. ஓய்வு பெற்றுச் சென்றாலும் பாடசாலைச் சமூகத்தினர் ஒவ்வொருவரது இதயத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் அன்னார் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கோர் அன்னை



அமைதியின் இருப்பிடமாக, அன்பின் பிறப்பிடமாக, எமது பாடசாலைக்கோர் அன்னையாகத் திகழ்பவர் திருமதி இ. சோமசுந்தரம் அவர்கள். 01 - 01 - 1972இல் ஆசிரியையாக முதல் நியமனம் பெற்று இப்பாடசாலையிற் கடமையேற்ற காலத்திலிருந்து வெள்ளி விழாக் காணும் இந்நாள்வரை தனது அளப்பரிய சேவையை இப்பாடசாலைக்கு நல்கி வருகிறார்; பாடசாலையின் உயர்ச்சியில் மிக நீண்டகாலம் இரண்டறக்கலந்து செயற்படுகின்றார்.

பயிற்றப்பட்ட ஆசிரியையாகி, பின் பட்டதாரி ஆசிரியராக உயர்ந்து மாணவர்களுக்கு இந்து நாகரிகம் ஆங்கிலம் முதலான பாடங்களைப் போதித்து வரும் திருமதி சோமசுந்தரம் அவர்கள் மாணவர்களது அன்புக்குரிய அபிமானத்துக்குரிய ஒருவராக விளங்கிவருகிறார்.

மாணவருடன் தானும் ஒருவராகமாறி அவர்களது தகுதியறிந்து ஆங்கில பாடத்தை அவர் கற்பிப்பது ஒரு தனிக்கலை. ஆங்கில மொழி என்று அந்நியப்பட்டு நிற்காது மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்றுயர அன்னார் பெரும் பங்கு ஆற்றி வருகின்றனர். மாணவர்கள் ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் வளர வேண்டுமென்ற உணர்வு இவரிடம் என்றென்றும் காணப்படுகின்றது. இதனால்தான் பழைய மாணவர்கள் அனைவரும் பாடசாலை பற்றிச் சிந்திக்குமிடத்துத் திருமதி சோமசுந்தரம் அவர்களை மனக்கண்ணில் என்றும் நிறுத்துகின்றனர்.

சக ஆசிரியர்கள் அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமாக விளங்கி, புன்னகை பூத்த முகத்துடன் பாடப் புறவேலைகளிலும் பங்காளியாய், வழிகாட்டியாய், சேவகியாய்ச் செயற்பட்டுவரும் திருமதி சோமசுந்தரம் அவர்கள்களது சேவையை வாயார வாழ்த்திப் பாராட்டுவதோடு, அவரது சேவை தொடர்ந்து கிடைக்க வேண்டுமென எமது பாடசாலைச் சமூகம் பிரார்த்திக்கின்றது.

வெள்ளிவிழாக் கண்ட எமது அன்னைக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான்

## மத்திய மகா வித்தியாலயம்

# பொன் விழா மலர்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 FEB 2001
PERIODICALS DIVISION

# மாணவர் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருட்களினால் ஏற்படும் விளைவுகளும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகளும்

முந்தித் தவம் கிடந்து, முந்நூறு நாள் சுமந்து, அந்தி பகலாய் இறைவனை வந்தித்து, ஒவ்வோர் அன்னையும் பெற்றெடுத்த அரிய பிள்ளைச் செல்வங்கள், கால நீரோட்டத்தில் வளர்ந்து எதிர் காலத்தில் நாட்டை ஆள்கின்ற, அதன் நிர்வாகச் செயற்பாடுகளில் பங்கெடுக்கப் போகின்ற நாட்டின் அதிபராக, வைத்தியராக, பொறியியலாளராக, ஆசிரியராக, தொழிலாளராக உருவாவது திண்ணம். ஆனால் இவ்வளர்ச்சிப் பாதையின் இடையிலே, ஒரு பெரிய கண்ணி வெடியை உலகின் நாசகாரர்கள் புதைத்து வைத்துள்ளனர். அதுதான் போதை மருந்து எனும் பொல்லாத மருந்து. உடலைத் தள்ளாட வைத்துக் கொல்லும் கொலை மருந்து. தன்னிடம் வீழ்ந்தோரை அணுஅணுவாக மாள வைக்கும் அழிவு அரக்கன். எமது இளம் சந்ததியின் முதுகெலும்பை உடைத்து உலகைக் கதிகலங்க வைக்கும் இப்போதை மருந்தைப் பற்றி ஆராய்வது இக்காலத்திற்கு மிகவும் அவசியமானதொன்றாகும்.

இன்றைய உலகில் அபிவிருத்தி அடைந்த, அடைந்து வருகின்ற நாடுகளில் பணத்தை மட்டும் தம் இலக்காகக் கொண்டு, எண்ணத்தை எல்லாம் தம் போதை மருந்து வியாபாரத்தில் வைத்துப் பல பண முதலைகளும் அவற்றின் கைக்கூலிகளும் போதை மருந்தைப் பாவிக்கும். அழிவையே தரும் இழிவான பழக்கத்தை இளைஞர் யுவதிகள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர். அபின், கஞ்சா, ஹிரோயின், மர்ஜுவானா போன்ற இன்னோரன்ன போதைப் பொருட்களை அதிக விலையில் எம்மிளம் செல்வங்களுக்கு வழங்குகின்றனர்.

இத்தகைய போதையேற்றும் பொருட்களை வாய் மூலமாகவும், ஊசி மூலமாகவும் உடலில் ஏற்றியும் சுகானந்த வெள்ளத்தில் மூழ்கி இன்பம் அனுபவிப்போர் தொடர்ச்சியாக அதைப் பயன்படுத்த விழைகின்றனர். இவ்வாறு எம்முடல் இப்போதை மருந்துகளை உள்ளெடுக்கும் போது அவை சிறுகச் சிறுக எம்முடலின் நரம்பு மண்டலத்தைத் தாக்கி அதன் கட்டமைப்பைக் குலைத்து விடுகின்றன. அவற்றை உட்கொள்ளும் பழக்கத்தை இலகுவில் நிறுத்த முடியாத அளவுக்கு நிலைமையை விபரீதமாக்கி விடுகின்றன. இறுதியில் மரண தேவனின் கால்களுக்கு இட்டுச் செல்கின்ற அரிய கைங்கரியத்தைச் செய்து முடிக்கின்றன.

இது நிற்க, வேறுபல, தீமைகளையும் இவை ஏற்படுத்துகின்றன. போதை மருந்தை உட்கொண்டு மெய்மறந்த நிலையிலே தம்மை மறந்து பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொள்கின்றனர். தாமே அத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகின்றனர். இதனால் ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் தொற்றவும் வழிசமைத்துக் கொடுக்கின்றனர். அத்துடன் குடும்பத் தலைவன் ஒருவன் இப்பழக்கத்திற்கு அடிமையாகும் போது பெருந்தொகையான பணச் செலவை இது ஏற்படுத்துகின்றது. குடும்பத்தைப் பேண உதவ வேண்டிய செல்வம் அதனைச் சீர்குலைக்கவே பயன்படும். இதனால் அக்குடும்பத்தில் வாழும் அவர்களது பிள்ளைகளின் கல்வி சீரழிந்து போவதுடன் ஒரு கட்டத்தில் அவர்களும் இப்பழக்கத்திற்கு அடிமையாகும் பேராபத்து உண்டாகின்றது.

மேலும் தொடர்ச்சியான போதை மருந்துப் பாவனையால் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்பட வேண்டிய வளம் விழலுக்கிறைத்த நீர் போல வீணாகிப் போவதால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதோடு மக்களின் வாழ்க்கைச் செலவும் உயர்வடைகின்றது. அத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் பெரும்பான்மையானோர் இப்பழக்கத்திற்கு அடிமையான நிலையில் அவர்களின் குடிகள் அழிவதோடு, தேசத்தின் கலாசாரங்கள் அவர்கள் அறியா நிலையில் கற்பழிக்கப்படுகின்றன. இதனால் ஓர் இளைய பரம்பரையே கல்லறைகளுக்கு போகும் கவலையான நிலை ஏற்பட வழி ஏற்படுகின்றது. நாட்டின் ஆணிவேராகத் திகழ வேண்டிய இளைய பரம்பரை அழிந்தால் பின்னெதற்கு வாழ்க்கை? இப்பழக்கத்தைத் தடுக்க, சமூக விழுமியங்களை காக்க நாம் என்ன செய்யலாம்?

கிராமிய ரீதியாக, பிரதேச ரீதியாகமக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு போதை மருந்து ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய பிரச்சாரம் செய்யலாம். அப்போதை மருந்துகள்ஏற்படுத்திய விளைவுகளை அவை ஏற்பட்ட இடங்களின் புகைப்படங்கள் மூலம் விளக்கலாம். மேலும் இளைஞர்களை சிறந்த சரியான பாதையில் வழிநடத்த, பெரியோர்கள் மூலம் அதற்கான கழகங்களை அமைத்து அவர்களை வழிநடத்தலாம். போதைமருந்துத் தடுப்பு வாரங்களை அனுட்டித்து அவை பற்றிய விபரங்களை மக்களின் மனங்களில் பதியச் செய்து அவற்றின் பாவனை விளைவைக் குறைக்கலாம்.

மேலும் போதை மருந்துப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை இனம் கண்டு அவர்களைச் சீர்திருத்திப் புதிய மனிதர்களாக்க, சீர்திருத்த வைத்தியப் பாடசாலைகளை நிறுவி, அதன் மூலம் அவர்களைப் பழைய நிலைக்கு மாற்றமுடியும். இத்துடன் உலகை அழிக்கும் போதை மருந்து வியாபாரத்திற்கு நாடுகள் ஒன்றிணைந்து கடுமையான தடைவிதிப்பதுடன், இதை மீறி வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களை, எமகாதகர்களை நாடுகள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு, ஒற்றுமையுடன் மிக மிக விழிப்பாக இருந்து கடத்தலில் ஈடுபடும் வேளை கைது செய்து கடுமையான தண்டனையை அவர்களுக்கு வழங்க வேண்டும். இதன் மூலம் இவ்வழிவு வர்த்தகத்தைப் படிப்படியாக ஒழிக்க வாய்ப்பு ஏற்படும். இதைவிட முக்கியமாக பணத்திற்கு ஆசைப்பட்டு, மனிதரைப்பிணமாக்கும் போதை மருந்து வர்த்தகத்திற்கு உடந்தையாக இருந்து வியாபாரிகளிடம் இலஞ்சம் பெற்று வியாபாரத்தைக் கண்டும் காணாததுமாக இருக்கும்சுங்க அதிகாரிகளுக்குத், தண்டனை வழங்கியும் அவர்களை இடமாற்றம் செய்தும் வியாபாரங்களுக்கு தடைகள் ஏற்படுத்தலாம்.

எனவே உலகை உலுக்கும் இப்போதை மருந்துப் பாவனைக்கு சாவுமணியடிக்க, அப்பழக்கத்திலிருந்து எம் இளைய சமுதாயத்தை மீட்டெடுத்து, நாட்டைத் தாங்கும் தூண்களாக மாற்றும் அரிய பணியில் உரிய முறையில் ஆக்கத்துடன் ஊக்கத்துடன், உயர் நோக்கத்துடன் முயல்வோமாக!! உலகை விழுங்கும் சாவு அரக்கனுக்கு சமாதி கட்டுவோமாக!! இன்றிலிருந்து இவ்வரிய பணியைத் தொடர திட சங்கற்பம் கொள்வோமாக!!!

சி. தயாபரன்
ஆண்டு 12
(கணிதப் பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்வும் எமது வாழ்வும்

**1995** ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் **30**ஆம் நாள், யாழ்ப்பாண மக்கள் வாழ்வில் மறக்கமுடியாத நாள். மாலை நான்கு மணி இருக்கும் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர். உலக வரலாற்றில் இடம் பெறாத பாரிய இடப்பெயர்வு ஒன்று ஆரம்பமானது. எதுவுமே யாருக்கும் புரியாத நிலை.

நாவற்குழிப் பாலத்தினூடாக மக்கள் நகரத் தொடங்கினர். அலையின் நடுவே அகப்பட்ட துரும்பின் நிலைக்கு ஒவ்வொரு மனிதனும் ஆளானான். பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள், குழந்தைகளைப் பிரிந்த பெற்றோர்கள், அண்ணனை இழந்த தங்கை, தங்கையை இழந்த அண்ணன், எல்லோருடைய அவல ஒலிகளும் வானை எட்டின. குடும்பங்கள் சிதறி அல்லோலகல்லோலப்பட்டன.

குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், முதியோர்கள், நோயாளிகள் என அனைவருமே இந்த அவல நிலையைச் சந்தித்தனர். மக்கள் அனைவருமே ஒரு குறுகிய பாதையினூடாக அடிமேல் அடிவைத்து நகர்ந்து சென்றனர். தென்மராட்சி பகுதியை நோக்கி அனைத்து வலிகாம மக்களும் பெயர்ந்தனர். மக்கள் கூட்டமோ கடல் அலைகளைப் போன்று சென்று கொண்டிருந்தது. இவ் அலையில் அகப்பட்ட சில குழந்தைகளும் முதியோகளும் நசுக்கிக் கொல்லப்பட்டனர். இந்நீண்ட பயணத்தினால் பெரும்பாலானவர்கள் உணவு. நீர் எதுவுமின்றியே மயக்கமடைந்தனர். இடம் பெயர்ந்த ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே பாதுகாத்தானே ஒழிய பிறரைப் பற்றிசிந்திக்கவே இல்லை. மக்கள் பசியால் துடித்தனர். இளநீர்களைப் பறித்து அதன் நீரைப் பருகியும், உள்ளீட்டை உணவாகப் பயன்படுத்தியும் பசியாற்றினர். இப்படியாக எத்தனை நாட்கள்தான் பட்டினியில் வாடுவது? தாம்எடுத்து வந்த பொருட்களை, நகைகளை விற்று பணத்தைப் பெற்று உணவுப் பொருட்களை பெற்றுக் கொண்டனர்.

ஏழைகளான மக்களின் பக்கம் யார் கவனமும் செல்லவில்லை. அவர்களுக்கு உதவ சில அமைப்பினர் முன்வந்தனர். அவர்கள் மக்களுக்கு உணவுப்பொருட்கள் போன்றவற்றை வழங்கி உதவி புரிந்தனர்.

மக்கள் நன்னீருக்காக அதிகதூரம் செல்லவேண்டி இருந்தது, சுத்தமானநீர் கிடைக்காமை, சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாக மக்களிடையே தொற்றுநோய்கள் பரவின. போதிய மருந்து வசதி இல்லாமையினால் பலர் இறந்தனர். இதுமட்டுமன்றி வியாபாரிகள் அதிகமான இலாபத்தை நோக்காகக் கொண்டு அதிக விலையில் பொருள்களை விற்றனர். பணவசதி படைத்தவர்களால் மட்டுமே சுமாரான வாழ்க்கையை வாழமுடிந்தது. ஏழை மக்கள் துன்பத்திலேயே மூழ்கி இருந்தனர்.

இவ்வாறாக அனர்த்தங்கள் பலவற்றைச் சந்தித்த மக்கள் ஓரளவு தமது நிலையினை பலப்படுத்திவரும் நாட்களில் மீண்டும் ஒரு இடம்பெயர்வுக்கு உட்பட்டனர். அதாவது 19-04-1996 அன்று மீண்டும் இராணுவத்தினர் தென்மராட்சியை நோக்கி படையெடுத்தனர். இதனால் மக்கள் கடல் கடந்து இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் மக்கள் பலரின் வாழ்வு கடலிலேயே முடிந்துவிட்டது. உடமைகளும் மூழ்கிவிட்டன.

இவ்வாறாக அக்கரையை அடைந்த மக்கள் வன்னி எனும் பெருநிலப்பரப்பிலே உடமைகள் எதுவுமின்றி வாழ்வதற்கு தள்ளப்பட்டனர். போருக்கு அஞ்சி காடுகளிலே இன்று அலைகின்றனர். நோய்களினால் அவதிப்பட்டு மருத்துவ வசதியின்றி இறப்பைச் சந்திக்கின்றனர். இன்னும் அவர்களின் இன்னல்கள் தொடர்கின்றன.

**ம. சுபாஸ்கரன்**
ஆண்டு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் சமூகமும்

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்றார் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலே முன் தோன்றிய மூத்த தமிழுக்குப் பெருமை சேர்த்துவிட்ட ஔவை. அவரின் பொன்மொழி வெறும் ஏட்டு மொழி அல்ல. அன்று தொட்டு இன்று வரை புடம்போட்ட தங்கம் போல் பிரகாசித்து விளங்கும் இனியபொன்மொழி. ஆம்! அவர் கூறியது போல் மானிடப்பிறவி பெறுவதற்கரிய புனிதப்பிறவி. பிறவிகளில் எல்லாம் பகுத்தறிவுள்ள செவ்விய பிறவி. அம்மேலான பிறப்பை எய்திய நாம் நாமாகவும், சமூகத்துடன் ஒன்றிணைந்தும் வாழாவிடில் பெறற்கரிய மாந்தர் பிறப்பினால் யாதொரு பயனுமில்லை. சமூகம் என்பது என்ன? என்ற ஐயம் எமக்கு ஏற்படலாம். சமூகம் என்றால் முதலில் குடும்பம் பின்னர் நாம் வாழும் ஊர், பின் எம் நாடு, பின், உலகம் என்று பரந்துபட்ட ஒரு விருட்சமாய் வளர்கிறது. நாமும் எம்மைச்சார்ந்தவர்களும் ஒரு சமூகமே ஆகும்.

சமூகம் வேறு, நாம் வேறு, எம் வாழ்க்கை வேறு என்று எண்ணி இருப்பது மடமை. சமூகமும் எமது வாழ்வும் ஓர் ஆடையின் பாவுநூலும், ஊடை நூலும் போலப் பின்னியுள்ளன. இவ்விரண்டையும் பிரித்து விட்டால் திசையறிகருவி அற்ற கடற்பயணம் போல் எம் வாழ்வும் வீணாகிவிடும். நாம் பிறக்கும்போதோ, வாழும் போதோ ஒரு சமூக வட்டத்திற்குள்ளேயே பிறக்கிறோம்; வாழ்கிறோம். இது எவர்களாலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. சமூகத்திற்காக வாழப் பிறந்த நாம் எமக்காக வாழ்ந்தால் அது எவ்வளவு கேவலம் கெட்ட வாழ்க்கை. ''ஆறிலுஞ் சாவு; நூறிலுஞ் சாவு: தாயகம் காப்பது கடமையடா'' என்பது கவிஞர் கண்ணதாசன் பாடிவைத்த பொன்வாக்கு. எமது மரணத்திற்காகப் பயந்து எமது சமூகமாகிய தாயகத்தை காக்காமல் இருந்து விடக்கூடாது.

உயிரைச் துச்சமாக மதித்து எமது சமூகத்திற்காக நாம் கொதித்தெழ வேண்டும். ''ஊருடன் கூடிவாழ்'' என்பது முதுமொழி. நாம் ஒவ்வொருவரும் சமூகத்தோடு ஒட்டி வாழவேண்டும். சமூகத்தின் கலாசாரம், பண்பாடு, நடையுடைபாவனை, பழக்கவழக்கம் என்பவை எப்படியோ அதன்படியே நாம் ஒழுக வேண்டும். சமூகத்தோடு கூடிவாழ்ந்தாலே எமது வாழ்வு சேமம் அடையும். ''ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'' என்பது ஓர் சொல்லற்கரிய கூற்று. எமது சமூகத்துடன் நாம் பகை கொள்வது தகாது. அப்படி நாம் பகைப்போமானால் நாமே அழிய நேரிடும். ''கூட்டுயர்வே நாட்டுயர்வு'' என்பது எழுதிவைத்த ஒவியமொழி. நாம் யாவரும் ஒன்றாய்க் கூடி சமூகத்தோடு ஒன்றி வாழ்வோமாயின் எமது நாட்டின் உயர்ச்சியும் எழுச்சியும் சொல்லில் அடங்கா. ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வேயாம்.'' நாம் யாவரும் ஒற்றுமையாக வாழ்ந்தால் எம் வாழ்வு மலரும். அப்படி இல்லாவிடில் அனைவருக்குந் தாழ்வே.

''தனி யொருவனுக்காகச் சமூகமும் சமூகத்திற்காக தனியொருவனும்'' என்பது முற்றிலும் உண்மை. தனியொரு மனிதனுக்காக சமூகம் படைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. அதுபோலவே சமூகத்திற்காக நாம் படைக்கப்பட்டோம் என்பதிலும் சந்தேகமில்லை. சமூகத்தின் உயர்வு, தாழ்வு எம்செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. அதே போல எமது ஒழுக்கமும் சமூகத்தின் நடத்தையிலேயே தங்கி உள்ளது.

**''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே''**

என்கிறார் அமரகவி பாரதியார். நற்றவத்திலும், பெரும் செல்வங்களிலும் தலை சிறந்தது எமது சமூகமே. எமது தாயும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் தாயகமும் வானிலும் மாணப் பெரிது. நன்றாக உற்று நோக்கின் தாயிலும் தாய் நாடே சிறந்தது. இந்தியாவில் வாழ்ந்த கொடிகாத்த திருப்பூர்க்குமரன் அவர்கள் தனது தாய், மனைவியிலும் பார்க்கத் தனது சமூகமே பெரிது என எண்ணி இந்தியக்கொடி காத்துத் தன்னுயிர் துறந்து மகாவீரர் ஆனார்.

எமது நாடு சுதந்திரமடைந்துவிட்டது என்பது ஏதோ உண்மைதான். இருந்தும் அதன் விலங்குகள் சில இன்னும் அறுபடாத நிலையில்தான் உள்ளன. அதற்குக் காரணம் நாம் சமூகத்துக்காக இன்னமும் வாழத் துணியவில்லை என்பதே ஆகும். எமது உடம்பிற்குச் சிரசு போன்று இந்த சமூகமும் எமது வாழ்க்கையின் சிரசாய் விளங்குகிறது. சாம்பிராணி தான் அழிந்து மணத்தைப் பரப்புகிறது. மெழுகுதிரி தான் எரிந்து ஒளியைத் தருகிறது. அதுபோல நாமும் எம்மைச் சூழ்ந்த சமூகத்துடன் ஒத்து வாழ்வதுடன் சமூகத்திற்காக எம்மை செருப்பாய்த் தேய்க்க வேண்டும்.

'' தனிமனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் '' என முழங்கினார் பாரதி. ஆகவே சமூகத்திற்காக எப்போதும் நாம் கூக்குரல் எழுப்பவேண்டும். இப்படித்தான் காந்தியும், புத்தரும், இலிங்கனும் சமூகசேவையின் உச்சக்கட்டத்தில் திகழ்ந்தார்கள். காந்தியின் சமூகசேவை அவரை மகாத்மா ஆக்கியது. புத்தரின் சமூக சேவை அவரைத் தெய்வமாக்கியது. இலிங்கனின் சமூக சேவை அவரை ஜனாதிபதி ஆக்கியது. ஆகவே சமூக சேவையே எம் உயர்வுக்கு வழி. '' ஏனழகளுக்காக எவனது இதயம் குருதி கசிகிறதோ அவனையே மகாத்மா என்கிறேன் '' என்று விவேகானந்தர் நியூயோர்க்கிற் சொற்பொழிவாற்றியுள்ளார். ஆகவே நாம் எல்லோரும் சமூகத்தில் வாழும்போதே சமூக சேவைகளையும் செய்யப்பழகிக் கொள்ள வேண்டும்.

'' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் ''

என்பது உலகப் பொதுமறை பொய்யாமொழியின் ஒரு முத்து. இதில் வாழ்வாங்கு வாழ்தல் என்பது, தானும் வாழ்ந்து சமூகத்தையும் வாழ வைத்தலாகும். ஆகவே நாம் எல்லோரும் சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்து வானிலே பிரகாசிக்கும் விண்மீன்களாய் ஒளிர்வோமாக;

வாழ்க எம் சமூகம்;
வளர்க எம் சமூகசேவை;

செல்வி ஜெ. இராசமல்லிகை
ஆண்டு 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர் தலைவர்கள்



250137

சாரணர் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல்

பாரிலே பல நூல்கள் உள்ளன. எனினும் என் மனதைக் கவர்ந்த நூல் திருக்குறள் ஆகும்.

பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவரால் இந் நூல் எழுதப்பட்டது. சாதி சமய பேதமின்றிச் சகலருக்கும் பொதுவான நூல்

**'' அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் ''**

என்று ஔவையார் போற்றுகின்றார். இந் நூல் ஈரடி வெண்பாக்களால் ஆனது. இதன் கண் இல்லாத பொருள் இல்லை, அறத்துப் பால் பொருட்பால் காமத்துப் என்ற மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. 1330 குறட் பாக்களை உடையது. திருக் குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ள போதும் பரிமேலழகரின் உரையே சிறந்தது எனப் போற்றுவர்.

திருக்குறள் உலகப் பொது மறை. பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அற இலக்கியங்கள் தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கின்றன என்பது கற்றோர் கருத்து. இவற்றிற் திருக்குறள் தலையாயதாகும்.

மாணவர்களாகிய நாங்கள் சிறுவயதிலேயே திருக்குறளை மனனம் செய்ய வேண்டும். நல்ல மனிதர் களாக வளர திருக்குறள் உதவி செய்யும்.

**'' கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக ''**

**சி. கலீபன்**
**ஆண்டு 8**

---

# ஒரு புத்தகத்தின் சுயசரிதை

நான் ஒரு தமிழ் மொழிப் பயிற்சிப் புத்தகம். என்னைக் கறையான் அரித்துக் கொண்டிருக்கின்றது. குப்பையில் கிடக்கின்றேன், என் வாழ்க்கை முடிந்து கொண்டிருக்கின்றது.

முன்பு நான் மிகவும் இளமையாக இருந்தேன். அழகாக இருந்தேன். என் மீது ஒரு மடிப்பும் கிடையாது. நல்ல வண்ணப் படம் என் அட்டையாக அமைந்திருந்தது. புத்தகக் கடை ஒன்றில் மிகவும் அழகாக வைக்கப்பட்டிருந்தேன்.

ஒரு நாள் ஒரு அம்மாவும் தம்பியும் அந்தக் கடைக்கு வந்தனர். தம்பி என்னை வாங்கித் தரும்படி அம்மாவிடம் கேட்டான். அம்மாவும் கடைக்காரனிடம் கேட்டு என்னை வாங்கி மிகவும் பக்குவமாகப் பையினுள் வைத்தார். வீட்டுக்குச் சென்றதும் எனக்கு மேலுறை போடப்பட்டது. நல்ல மரியாதையாகத்தான் வாழ்ந்தேன்.

காலஞ்செல்லசெல்லத்தம்பிவளர்ந்தான் என்னால் வளர முடியவில்லை, அவனுக்குத் தேவையான விடையங்களை என்னால் கொடுக்க முடியவில்லை. அவனுக்கு என் மீது கோபம் வந்தது. அம்மாவிடம் ' அம்மா நான் இப் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டேன் ' எனக் கூறினான். பாவம் அந்தத் தம்பிக்கு வேறு தம்பியோ தங்கச்சியோ இல்லை. என்னை அவர்கள் கவனிக்கவில்லை. படிப்படியாகக் குப்பை மேட்டுக்கு வந்துவிட்டேன். ஒராண்டு என்றாலும் தம்பிக்குப் பயனுடையனாக இருந்ததை இட்டுச் சந்தோஷம் தான்.

**இ. நிருபன்**
**ஆண்டு 6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Friendship

Affection binds people in two ways. One is concerned with sex. The other is with family ettachment. The third one which is neither sex nor family attachment. That is what we call friendship.

This arises from nothing but mutual understanding. This results in mutual benevolence. Friendship arises between the persons of the same sex or with the opposite sex. True friendship surpasses caste, creed, age or nationality. 'Fate makes our relations and choise makes our friend'. So when we select our friends we must be careful, Otherwise that friendship may even ruin our life itself.

Pure love is one which hasn't any motive behind. In our Epics and religious Stories we find many examples for pure love. The love of saiva saints towards Lord Siva is pure love. The Love between Krishna and Arujna is also pure love.

In the western world in Shakespeare plays we find examples for pure love. In 'As you like it' the love between Rosalind and celia. Celia leaves her father goes to the forest with Rosalind. So also the friendship between Antonio and Bassanio in Marchant of Venice.

The other love is soiled love. This arises from the hearts which has a selfish motive behind. In Mahabhrtha we find a good example for this kind of love. The friendship between Sakuni (the matemal uncle of Dhuriyotha) and Dhuriyothana. Their friendship lead to destruction.

In order to maintain the friendship we must observe certain things. They are to take and give again, to listen and to talk, to dine and to entertain. The friendship is strengthened by mutual love and kind deeds.

'A friend in need is a friend indeed'

**R. Karthika**
Year 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Home Town

My home town is Jaffna which is a peninsula in the north of Sri Lanka. It is about 442 Km from Colombo. It is a large town. The majority of people living in Jaffna are Tamils mainly Hindus and Christians.

It is said that in olden days Jaffna fell under the control of the Partugese. Later the Dutch took over control in Jaffna. Some of the thlngs left behind by them can be seen even today and the most interesting one is the old Dutch Fort.

There are also many schools, banks and public buildings. There is an ancient Hindu temple which is called Nallur Kandaswamy Temple. Keerimalai with its fresh water bathing tank is a famous place.

Most of the people in Jaffna are engaged in farming and fishing. There are some industries too. Most of educated people are working as teachers and government Servants. Many touiists are attracted to Jaffna by its warm climate throughout the year, the beautiful beaches and the sea food etc-. Being a Tamil I'm proud of my home town Jaffna.

**B. Shoba**
year 8 A

---

# The Importance of Learning English

*English is the international language of the world. Though it is not their mothertongue many people in Asian and African countries use this language for the purpose of communication. It is a key language to the whole nation. To us in Sri Lanka a good knowledge of English is very necessary. Students wishing to follow higher studies find a knowledge of English most helpful.*

*Learning English also helpus to go to other countries and find employment. English language being a common language in our country is a very useful tool to create better understanding and unity among people.*

**K. Chitra**
Year 10 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our School Library

A library is a room or building in which a well arranged collection of books are kept for reading or reference. Now a days every school has its libraries which are small when compared with the well - equipped public libraries that are to be found in some of the towns.

Our school has a library which is a blessing to most of the children. The library contains books for reference, informative reading and light reading magazines for recreation and the daily papers for the current events.

Most of our school children connot afford to buy all the books that they need for reference or educational reading. There are all the volumes of the Encyclopaedia in our School library. These volumes are a mine of information on all branches of human knowledge. The novels of great writers like Charles Dickens also help the students to broaden their know ledge more about life and human nature, besides a source of amusement and pleasure.

The educational magazines like 'Understanding Science' and the book of knowledge give us a detail knowledge of advancement is science and information on all branches of knowledge.

We are able to know the course of events and political changes through the news papers in our School library.

Thus our School library is very useful to us who cannot buy these books and magazines.

**S. Suganthini**
Year 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென் ஜோன்ஸ் முதலுதவிப்படை





பெண்கள்



ஆண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sources of Power

People in every country need energy. We need energy to cook our food, to cool or heat our homes and to run our machines. We get energy from coal, gas, oil and wood. Oil was formed a long time ago from dead animals and plants that lived in the sea. These came to be buried under layers of sand and mud and trapped between layers of rock. Then the thick fatty oil which is called 'crude oil' formed and it is collected and refined. Coal, gas and oil are called fuels. Coal was one of the first source of power. But it produces a great quantity of unpleasant waste material and gases. Gas is used for cooking in many homes in towns. Petrol is used to run cars, buses, lorries and machines. Falling water can also be used to create energy. In Sri Lanka we are lucky to have a number of waterfalls and we have been able to create electricity. Electricity created by water is called Hydro - Electricity. It is highly economical and clean. Nuclear Fuel can also be used to create energy. But it is highly dangerous and it damages the environment by radio activity. Windmills can also be used to create energy but they are not constant and can produce oniy small quantities of power.

Some countries are trying to get energy from the sun. It is called Solar Energy. In some parts of our country we can find solar collectors on the roofs of buildings to provide electricity.

**T. Susama**
**year 9 A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிசொல்ல மாட்டீரோ?

மொக்குகள்

நாங்கள் ஆறாம் ஆண்டு மாணவர்கள்; வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத் தில் படிக்கிறோம். அதிகாலையிலே எம்மை அம்மா எழுப்பி 'படி படி' என்கிறார். பின் அவசர அவசரமாக வெளிக்கிடுத்திப் பாட சாலைக்கு விரைந்து போகச் சொல் கிறார். ஓடி ஓடிப் போகிறோம்.

சற்று நேரம் பிந்தினால் அதிபர் மிரட் டுவார். விடியற்காலை வீட்டிலும் படித்த தால் தான் கண்ணயர்ந்து விட்டது என்று அதிப ருக்குச் சொன்னால் அதை உண்மையென ஏற்பாரா? எனவே நாங்கள் வாய்திறப்ப தில்லை.

வகுப்புக்குஅடுத்தடுத்துஎட்டுப்பாடங்க ளும் ஆசிரியர்கள் வருகின்றனர். ஆட அசைய நேரமின்றி ஒரே படிப்பு. பசி, தாகம் பார்ப்பது கூடக்கிடையாது. படிப் பது ஒன்றே எங்கள் வேலை.

கடைசி மணி அடித்ததும் வீட்டுக்குப் பாய்கிறோம். வாசலிற் காத்து நின்ற அம்மா சாப்பாட்டைத் தருகிறார். சாப் பிட்ட கை காய்வதற்குள் ரியூரறிக்கு ஓடுகி றோம். ரியூரறி டிறெக்ரர் வாசலில் நிற்கி றார். ''நேரம் பிந்தி வந்தால் டிஸ்மிஸ்'' என்கிறார். 6 மணிவரை அங்கும் படிப்பு. இருளுமுன் வீட்டுக்குப் போயாக வேண்டும்; ஒடுகிறோம்.

'கால் கையைக் கழுவிவிட்டுச் சாப்பிடு' என்கிறார் அம்மா. சாப்பிடும்போது அப்பா வின் குரல் கேட்கிறது 'ஒழுங்காகப்படிக் காததால் தான் புலமைப்பரிசிலில் சித்தி யில்லை. அதனால் எங்கள் குடும்பக் கௌர வம் போச்சு. இனியாவது படி' என்கி றார் அப்பா. நாங்கள் படிப்பதற்காக வீட்டிலே மற்றைய எல்லோருக்கும் வாய்ப் பூட்டு. 10 மணிவரை படுக்கவும் விடமாட் டார்கள். வாய்திறந்து பேசவும் மாட்டார் கள், ஒவ்வொரு நாளும் இதே மாதிரித் தான் காலை 5 மணிமுதல் இரவு 10 மணி வரை படிப்பு! படிப்பு! ஒரே படிப்பு!

பள்ளிக்கூடம் ஓடினோம். ரியூரறிக்கு ஓடினோம். வீட்டிலே காலையும் இரவும் படி படியென்று படித்தோம். பரீட்சையில் தான் புள்ளிகள் இல்லை. கணிதத்துக்கு 08, தமிழுக்கு 00, சமயத்துக்கு 09, விஞ்ஞானத் துக்குப் 14. எல்லாப் பாட புள்ளிகளைக் கூட்டினாலும் 80 வராது.

அம்மா சொல்கிறார் - கிரகபலன் சரி யில்லையாம். அப்பா சொல்கிறார் - அவங் கள் ஒழுங்காகப் படிப்பிப்பதில்லையாம். அதிபர் சொல்கிறார் - வீட்டிலை கவனிப்பு இல்லையாம். ஆசிரியர் சொல்கிறார் - கீழ்வகுப்புகளில் அத்திவாரம் சரியில்லை யாம். ரியூரறி வாத்தியார் சொல்கிறார் - பாடசாலை ஆசிரியர்களுக்குத் தங்களைப் போலப் படிப்பிக்கத் தெரியாதாம்.

தமிழ் வாத்தியார் சொல்லுவார் 'பானையில் இருந்தால் தான் அகப்பையில் வருமாம், நாங்கள் பானைகள் தான். பானைக்குள் எதுவும் இல்லை என்றால் அது பானை செய்த குற்றமா? நாங்கள் என்ன ஓட்டைப் பானைகளா?

இந்தக் கொடுமைகளைக் கடவுளுக்குச் சொல்லலாம் என்றால், இந்தப் படிப்பால் கோயிலுக்குப் போகக்கூட நேரமில்லையே.

இங்கு உங்களுக்காவது சொல்லிப்பார்ப் போமென்றால் நீங்களும் சிரித்துப் போட் டுப் போகப் போறீர்கள். நாங்கள் யாரிடம் சொல்வது? அம்மா அப்பா அதிபர் ஆசிரி யர்கள் எல்லோருமே கடுகடுப்பாக உள்ள னரே.

பறவைகளைப் பார்க்கிறோம். வானில் ஆனந்தமாகப் பறக்கின்றன; மரநிழலிலி ருந்து இனிமையாகப் பாடுகின்றன. கன்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிகள் துள்ளி விளையாடுகின்றன. அவைக்குள்ள இன்பம் எமக்கு இல்லையே நாங்கள் செய்த தவறு என்ன? இன்பமாய் வாழ வழி சொல்ல மாட்டீரோ?

அப்பா சொல்லுவார் அந்தக் காலத்திலே தான் ஒரு விளையாட்டு வீரனாம். உதைபந்தாட்டத்தில் சூரப்புலியாம். மாலை முழுவதும் விளையாட்டாம். அவர் பெற்ற விருதுகளுடன் படங்கள்பல வீட்டுச் சுவரிலே தொங்குகின்றன.

எங்கள் விளையாட்டு பாடசாலையில் பாடவேளைகள் மாறும் நேரந்தான். அடுத்த பாட ஆசிரியர் வருமுன் ஒவ்வொரு நிமிடம் விளையாடக் கிடைக்கும். அதிபர் சுற்றுலா வந்தால் அந்த நேரமும் பறி போகும்.

பின்வாங்கில் இருக்கும் கண்ணன் இடைக்கிடை தான் பாடசாலை வருவான். தினமும் பாடசாலை வருவதாய் பெற்றோருக்குப் பாவனை காட்டிவிட்டு T. V. பார்க்கப் போய்விடுவான். ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று எங்களுக்குக் கூறி அதற்காக ரொபியும் வாங்கித் தருவான்.

பரீட்சையில் எட்டுப்பாடத்திலும் மொத்தப்புள்ளி 28 எடுத்துக் கடைசிப் பிள்ளையாக வந்த நமணனும் இடைக்கிடை பாடசாலைக்கு வருவான். அவனும் ரொபி, கன்டோஸ் எல்லாம் தாராளமாக எமக்குத் தருவான். அதற்கான காசைத் தானே உழைக்கிறானாம். அவனது அப்பா ஒரு மெக்கானிக்காம். அவரை விடத்தான் கெதியாகவும் நன்றாகவும் யந்திரங்கள் மோட்டர்களைத் திருத்தி விடுவானாம். அவனது விவேகத்தைப் பாராட்டி அவனைக் கொண்டு வேலை செய்யவே எல்லோரும் முண்டியடிக்கின்றனராம்.

நாங்கள் படிக்கிறோம். ஓடி ஓடிப்படிக்கிறோம்; நாள் முழுதும் படிக்கிறோம். பயனெதையுங் காணோம் எங்களுக்கு வழி சொல்லமாட்டீரோ?

---


தரமான றெடிமேட் ஆடைகள்

மற்றும்

**சேட்டிங், சூட்டிங், பட்டுச் சேலைகள்**

**என்பவற்றை நிதான விலையிற்**

பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய இடம்

**கணேசன் சென்ரர்**

தாவடி வடக்கு, **கொக்குவில்.**

# எமது சமூகத்தின் இன்றைய கல்வி அழுத்தங்கள்

பேராசிரியர், வ. ஆறுமுகம்
கல்வியற்துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

எமது சமூகம் இன்றைய காலகட்டத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல. ஒரு புறம் பொருளாதார நெருக்கிடைகள். மறுபுறம் சமூகக் கூறுபாடுகள், முரண்பாடுகள். இவை எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, இவற்றின் தாக்கங்கள் யாவும் சிறியனவாகத் தோன்றுமளவுக்குப் பூதாகரமாக உருவாகியுள்ள போர்க்காலச் சூழல். இப் போர்க்காலச் சூழல் எமக்குப் பழக்கப்பட்டுவிட்ட ஒன்று என நழுவிவிட முடியாத அளவுக்கு நாம் எல்லோரும் அதனால் பீடிக்கப்பட்டு விட்டோம். மேற்கூறிய பிரச்சனைகள், நெருக்கிடைகள், தாக்கங்கள் யாவற்றுக்கும் மத்தியில் தொடர வேண்டிய கல்விச் செயற்பாடுகள் பற்றிய நோக்கிலே இக் கட்டுரையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதற்கண் 'எமது சமூகம்' என்ற பதப் பிரயோகத்தின் வரப்பெல்லை நிர்ணயிக்கப்படவேண்டும். இங்கு 'எமதுசமூகம்' என்பது யாழ். குடாநாட்டின் மக்களைக் குறிப்பது எனக் கொள்ளுதல் வேண்டும். சமூகம் என்பது விரிந்த பொருளைக் குறிப்பதானாலும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களது நிலைமைகள், அவர்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் என்பன பிற இடங்களிலுள்ளவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளிலும் வேறானவை. கல்வி நிலைமையும் அப்படியானதே. யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் பாரம்பரிய மனப்பாங்கு மட்டுமல்லாமல் இன்றைய அசாதாரண சூழ்நிலையிலும் கல்வியிற்கூடக் கவனம் செலுத்தவேண்டியது கட்டாய தேவை. அந்தத் தேவையை நிறைவுசெய்ய எடுக்கும் முயற்சிகள், எத்தனங்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டுத் திசைமாறிப்போகும் அவலத்தைக் காணலாம். கல்வியில்முன்னேறவேண்டும் என்றஆர்வம், அங்கலாப்பு, அதற்கான வழிகள், வாய்ப்புக்கள் இல்லையே என்ற ஆதங்கம், எடுக்கும் முயற்சிகள் பயனளிக்கவில்லை என்ற ஏமாற்றம், அதனால் ஏற்படும் விரக்தி போன்ற உளரீதியான அழுத்தங்கள் ஓலங்களாகவும், முனகல்களாகவும், முணுமுணுப்புக்களாகவும் ஒலிப்பதைக் கேட்கலாம். அதைக் கேட்பதற்கு எமது செவிகளின் தயார்நிலை தேவைப்படுகின்றது.

அவ்வகையான அழுத்தங்களுக்கு ஆட்படுவோர் யாரெனப் பார்ப்பின் எம்முன் ஒழுங்குவரிசையில் தோற்றுவோர் —மாணவர்கள் [குறிப்பாகச் சிறு பராயத்தினர்), ஆசிரியர்கள், பெற்றோர்களாவர், கல்வி வழங்குதல் / பெறுதல் என்ற வகையில் இவர்கள் ஒவ்வொருவரும் சீர்காணவேண்டிய, சரிசெய்யவேண்டிய அழுத்தங்கள் வெவ்வேறாகும். இவற்றைப்பற்றிச் சிந்திக்கின்ற கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு கல்வியாளனுக்கும் உண்டு. ஆனால், இன்று நாம் காண்பதோ வேறு, யதார்த்த நிலையில் அடிமட்டக் குறைகளைக் காணமுற்படாது, எம் கண்முன்னே இருப்பதைப் பார்க்க முயலாது, அப்பாற்பட்ட விடயங்களிலும், 'ஆழமான' ஆய்வுகளிலும் அக்கறைசெலுத்தும் கல்வியாளர்கள் இன்றைய நிலையில் காட்சிப் பொருட்களாகி விடலாம் என்ற ஆபத்து உண்டு. வித்துவச் செருக்குகளும் விவாதங்களும் வேளைக்கு உதவாவிடின் வீணாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக எம் அருமைச் சிறார் களின் அவலத்தைப் பார்ப்போம். அவர் கள் படும் வேதனைகளைப் பட்டியற்படுத்தி விடலாம்:-

1) எந்நேரமும் ஓய்வு ஒழிசல் இன்றிப் படிக்கவேண்டி இருத்தல் — பாட சாலை, வீடு, ரியூட்டரி என்ற நிர்ப் பந்தங்கள்.

2) படிப்பு படிப்பு என அலைந்து திரிந் தும், உயர்மதிப்பெண்களைப் பெறத் தவறுவதால், அப்படிப்பினால் உரிய பயனைப் பெறமுடியாமை.

3) மதிப்பெண்கள் குறைகின்ற சந்தர்ப் பங்களில் பெற்றோர் ஆசிரியர் எவரி டமிருந்தும் ஆதரவு, ஊக்குவிப்பு இல்லாமல் பதிலுக்கு ஏச்சும் நச்ச ரிப்பும்.

4) காலையில் நித்திரையிலிருந்து விழித் தெழும் / எழுப்பப்படும் நேரந் தொட்டு படிப்பு என்ற பெயரில் வேறுஎதற்கும் நேரமோ சுதந்திரமோ இல்லாத நிலை.

தமது பிள்ளை படித்துச் சிறக்கவேண்டு மென்ற அங்கலாய்ப்பினால் உந்தப்படும் பெற்றோரின் விரட்டலுக்கும் மிரட்டலுக் கும் ஈடுகொடுக்கவேண்டி, சிட்டுப்போல் சுதந்திரமாகப் பறந்துதிரிய வேண்டிய பரு வத்தில், இன்பத்துக்குப் பதில் துன்பச் சுமையைத் தூக்கமாட்டாமல் தள்ளாடும் அச் சிறுவர்களுக்காகப் பரிதாபப்பட எவ ரும் இல்லை.

ஒரு பிள்ளையினுடைய வாழ்நாளில் ஒரு நாளை நோக்குவோமேயானால் அதன் அவலத்தைக் காணலாம். காலையில் ஐந்து மணியளவில் துயிலெழுந்து 'படி, படி, என்று பெற்றோரின் போதனை, பள்ளிக் கூடத்துக்குப் போனால் ஆசிரியர்களிட மிருந்து அதே ஒலி. பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பியதும் அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ரியூட்டரி நோக்கி ஓட்டம் அங்கும் அதே அவலந் தான். ரியூட்டரியிலிருந்து மாலையில் வீடு திரும்பும் பிள்ளைக்கு (வீட்டு வசதியைப் பொறுத்து) ஏதேனும் உணவு கிடைக்க லாம்; இல்லாமலும்போகலாம், தொடர்ந்து படிப்புத்தான். இரவு நேர உணவுக்குப்பின் களைத்த நிலையில் படித்தாலும் சரிதான் படுத்தாலும் சரிதான். இதற்கிடையில் அவனுக்கு / அவளுக்கு விளையாட்டுக்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது?

இந்தக்கல்வி சிறுவர் உள்ளத்தில் என்ன எண்ணங்களைக் ஏற்படுத்த முடியும்? கனி யாக இருக்க வேண்டிய கல்வி கனதியாக மாறும் நிலையில், அதனை இயல்பு நிலை யில் கற்பதற்கு வழிகேட்டு நிற்கின்றது இன்றைய மாணவ சமுதாயம். நாம் என்ன செய்யப் போகின்றோம்? 'கற்போனின் இயற்கையோடு இயைந்ததாகக் கல்வி அமைய வேண்டும்' என்ற ரூசோவின் கூற் றையும், 'அனுபவமே கல்வி, அது ஒரு போதும் பளுவாகி விடக்கூடாது' என்ற ஜோன் டூயியின் சிந்தனையையும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது எமது கடமை யாகின்றது. கல்வியைத் திணிக்கப் போகின் றோமா அல்லது தளிர்விடத் தூண்டப் போகிறோமா என்பதைப் பொறுத்தே பிஞ்சுள்ளங்களின் மலர்ச்சி முளைவிடும்.

பெற்றோர்கள் பக்கத்துக்கு எமது புலன்களைத் திருப்பினால் அங்கும் நாம் காண்பதும் கேட்பதும் அலுத்துச் சலிக்கும் தோற்றமும் ஒலியுந்தான். தன் பிள்ளை படித்து முன்னேற்றங்காணவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு தந்தை தாயிடமும் ஓங்கி நிற்பது இயல்பே. ஆனால் அதுபிள்ளை அதனுடைய திறமைக்கும் மேலாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கச் செய்கின் றது. அந்த எதிர்பார்ப்பு பிள்ளையை ஓயவும் விடாது ஓட்டுகின்றது. எமக்கே உரிய தனித்துவமான செயற்பாடுகளுள் ஒன்று அக்கம்பக்கத்தவருடன் ஒப்புநோக்கு வது. அதேபாணியில் பெற்றோரது அணுகு முறையும் அமைகின்றது. மற்றவர்களுடைய பிள்ளைகளுடன் தமது பிள்ளைகளையும் ஒப்புநோக்கத் தலைப்படுகிறார்கள். தனி யாள் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் எதுவும் கணக்கிலெடுக்கப்படுவதில்லை. கருத்து முழுவதும் அடைவை நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவே வெளிவருகின்றது. பலன் – 'படி, படி' என்று ஓதுதல்தான். பரீட்சை முடிவுகள் வரும்போது பெறப்படும் மதிப்பெண்ணில்தான் கண். புள்ளி குறைவானதாய் இருந்துவிட்டால் பிள்ளை படும்பாடு சொல்லத்தேவையில்லை. ஆறுதல் வார்த்தையை விட்டு ஆக்ரோஷ வார்த்தைப் பிரயோகம் தான். வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவதைப்போல, நொந்த உள்ளம் நோகடிக்கப்படுகின்றது. இதற்கான காரணம் என்ன? தான் வாழும் சமூகத்தில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் உயரிய இடத்தை இலக்கு வைப்பதனால் ஏற்படும் அழுத்தம். அது தவறிவிடுமோ என்ற அங்கலாய்ப்பு பிள்ளையின்மேல் அழுத்தமாகிவிடுகின்றது.

ஆசிரியர்களைப் பார்த்தால் சாதிக்க வேண்டுமென்ற அழுத்தம் அவர்களை ஆட்டிப்படைக்கின்றது. தம்மிடத்திலே கற்கும் மாணவர்கள் உயர் மதிப்பெண்களைப் பெற வேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றார்கள். அந்த நோக்கம் சிறந்ததுதான். ஆனால் அதனை எல்லோராலும் அடைய முடியுமா என்ற எண்ணம் அவர்களுக்குத் தோற்றுவதில்லை அந்தக் குறைபாட்டுக்குத் தமது அணுகுமுறைகள் காரணமாயிருக்கக் கூடும் என்று ஆசிரியர்கள் சிந்திப்பதேயில்லை. முழுப்பழிகளும் பாவம் அந்த மாணவர்கள் மீதுதான். விரக்திகளின் விளிம்பில் நிற்கும் ஆசிரியனுடைய வாயிலிருந்து உதிரும்முத்துக்கள் 'மொக்குகள்' 'பானைக்குள்ளிருந்தாற்தானே அகப்பையில்வரும்' 'வெற்றுப்பானை என்று மாணவன் விட்டெறியப்படுகிறான்.

எமது கல்வியில் நாம் காணும் இன்னொரு அழுத்தம் போட்டி. கல்வியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு இடத்திலும் இப்போட்டி மலிந்து கிடக்கின்றது. பாடசாலையில் மாணவரிடையே போட்டி. ஆசிரியர்களிடையே போட்டி. பாடசாலைகளுக்கிடையிலே போட்டி, போதாக்குறைக்குப் பாடசாலைகளுக்குப் போட்டி நிறுவனங்களாக ரியூட்டரிகள், எங்கு பார்த்தாலும் எதை எடுத்தாலும் போட்டி, முன்னேற்றதுக்குப் போட்டி ஒரு தூண்டியாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை யானாலும் அந்தப் போட்டி ஓட்டத்தில் சிக்குண்டு சிதறிப்போகும் பிஞ்சுகளின் கதி கருத்தில் வருவதில்லை.

இவை எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு பயன்தரும் பாதையில் எப்படிப் போவது? அந்தப் பாதையை எப்படி ஆக்குவது? என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டியது அவசியம். சிந்திக்க தவறுவோமேயானால் பின்னர் வேதனைதான் மிஞ்சும். முதலில் மேலே குறிப்பிட்ட அழுத்தங்கள் அனைத்தின் சுமையையும் தாங்கவேண்டியுள்ள, மாணவர்களே கவனத்துக்குள்ளாகின்றார்கள். ஏற்கனவே குறிப்பிட்டபடி இன்றைய மாணவர்களின் நேரத்தில் ஒருநாளைய இருபத்தி நான்கு மணித்தியாலங்களில் துயிலும் நேரந்தவிர மற்ற நேரம் முழுவதும் கற்றலிலே கழிகின்றது. ஓய்வுக்குக்கூட இடையில் நேரமில்லாத படிப்பு அதன் விளைவுகளையும் முன்னர் பார்த்தோம். ஓய்வுக்கென இடையில் நேரமில்லாதபோது அவர்களை அறியாமலே உடலும் உள்ளமும் வகுப்பிலேயே 'ஓய்வு' எடுத்துவிடுவதை நாம் காண்கிறோம். அப்படியான நிலைமைகளைத் தவிர்க்கவேண்டுமாயின் குறிப்பிட்ட அளவு நேரத்தை ஓய்வுக்கென ஒதுக்கும் வாய்ப்பு இருத்தல் வேண்டும். அந்த ஓய்வுநேரம்உண்மையான பயனைக் கொடுப்பதானால் அதில் மாணவர்கள்தம்மிச்சைப் படி ஓடியாடி விளையாடச் சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் விளையாட்டுப்பாடம் உண்டென்று ஏற்பினும் அது வாரத்தில் மிகக் குறைவாகவே வழங்கப்படுகிறது என்பதை எல்லோரும்அறிவர். ஓய்வும், விளையாட்டும் சலித்துப்போகும் உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகத்தையும் உறுதியையும் கொடுப்பன. ஆரோக்கியமான உடலில்தான் ஆரோக்கியமான உள்ளம் இருக்கமுடியும் என்பதை நாம் மறக்கக் கூடாது.

மாணவர்மீது ஏற்றப்படும் கல்விச் சுமையைக் குறைப்பதற்கு வழிவகைகள் காணப்படவேண்டும். பாடசாலை நேரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இடம்பெறும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் மாற்றப்படமுடியாதவை. அவற்றுக்கு மேலாகவரும் சுமையைப்பற்றியே நாம் சிந்திக்கலாம். இதில் ரியூட்டரிகள் பற்றிய கண்ணோட்டம் அவசியமானது. பாடசாலை வேலைகளுக்குப் பலமூட்டுவனவாக ரியூட்டரிகள் அவசியம் தேவை எனப் பேசப்படுவதுண்டு. ஆனால், அத்தேவை ஒவ்வொரு மாணவ / மாணவிக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் அவசியமா எனக் கேட்கவேண்டிய நிலைமை உருவாகின்றது. ரியூட்டரிகள் மாணவர்களுடைய பள்ளிக்கூடக் கற்றலுக்குப் புறம்பான மேலதிக உதவிகளை வழங்குவதற்காகவே தோன்றின என்பதையும், எந்த ஒரு கட்டத்திலும் அவை பள்ளிக்கூடங்களுக்கு மாற்றீடாக வளரமுடியாது என்பதையும் எல்லோரும் உணரவேண்டும். அந்தவகையில் அவற்றின் மூலம் எழும்போட்டி உணர்வில் வரும் அழுத்தம் குறைவதற்கான வழி உருவாக்கப்பட வேண்டும்.

பெற்றோரைப் பொறுத்தவரையில் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக ஆக்கும் நோக்கில் அவர்களுக்கு இருக்கும் அபிலாசைகள் நியாமானவையே. எனினும், அவற்றை நிறைவுசெய்ய முற்படும்போது பிள்ளை சுமக்கமுடியாத சுமையை வற்புறுத்தக்கூடாது. பிள்ளைக்குத் தேவையான, தாம் வழங்கக்கூடிய, உதவிகளைப் பெற்றோர் வழங்கவேண்டும். கற்றல்சார் செயற்பாடுகள், பிறசெயற்பாடுகள் அனைத்திலும் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. ஆறுதல் வார்த்தைகளும் அரவணைப்பும் அழுத்தங்களினால் துவண்டுபோகும் பிஞ்சு உள்ளங்களுக்கு உரத்தை ஊட்டும். கல்வியில் தளர்ந்துநிற்கும் பிள்ளைகளை ஊக்குவிப்பு வார்த்தைகள், செயற்பாடுகளால் தூக்கிவிடலாமேயன்றி கண்டனங்களினாலோ அல்லது சொல் அம்புகளினாலோ அல்ல.

ஆசிரியர்கள் தாம் உள்ளாகும் அழுத்தங்களைவிடத் தாம் உருவாக்கும் அழுத்தங்கள் கனதியானவை என்பதைப் புரிந்துகொள்ளல் அவசியம். மாணவர்கள் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும் என்பதற்கான வழிகள் அனைத்தையும் ஏற்படுத்துவது ஆசிரியனுடைய கடமை, அதில் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கமுடியாது. ஆனால், அதை அடைவதில் பின்பற்றப்படும் அணுகுமுறைகள்தான் தாக்கத்துக்குக் காலாகின்றன. எவ்வளவு முயற்சியெடுத்துக் கற்பித்தாலும் மாணவன் தேர்வில் தாழ் புள்ளிகளைப் பெறும்போது ஆசிரியர் வேதனைக்குள்ளாவது இயற்கைதான். அப்படியானாலும் எந்த மாணவனையும் 'மொக்காக', 'வெற்றுப்பானையாக' கணிப்பது பொருந்தாது. அந்த நிலைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும். ஒவ்வொரு மாணவனையும் அறிந்து அவனுடைய நிறைகள் குறைகள் என்பவற்றை உணர்ந்து அவற்றுக்கேற்பத் தமது கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்துப் புதுமையைப் புகுத்திக் கற்றலில் கவர்ச்சியை வளர்க்கவேண்டும். மாணவரிடத்து ஆர்வத்தையும் ஆவலையும் தூண்டக்கூடிய கற்பித்தல் எந்த ஒரு கட்டத்திலும் பளுவாக அமையாது.

இவ்வகையில் நாம் செயற்படுவோமானால் எமது சமூகத்தின் எதிர்காலக் கல்விப்போக்கு உன்னதமானதாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. 'கரும்பு தின்னக் கூலியா' என்று கேட்பதைப் போன்று கல்விபெற முண்டியடித்து முந்திச்செல்லும் நிலையில் நமது சிறுவர்கள் சிறுமிகள் செயற்படுவர். 'வழிகாட்ட மாட்டீரோ' என்ற கேள்வி எழப்போவதுமில்லை, எழ வேண்டிய தேவையுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளிலிருந்து வாழ்வுக்கு தொலைக்காட்சி தொடர்பான சமூக உளவியற் தரிசனம்

என். சண்முகலிங்கன்
சமூகவியல்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக் கழகம்.

நவீன வாழ்வில் தொலைக்காட்சி ஆழ வேர்விட்டுள்ளது. தனியன்களின் அறிகை, நடத்தை, உளச்சார்பு என்பவற்றில் அது மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துவது! அறிவியல் தரும் அற்புதமாய், தேசங்களின் எல்லைகளைக் கடந்து, உலக கிராமமாக இன்றைய வாழ்வை மாற்றுவதில் பெரும் பங்கு வகிப்பது. எங்கள் தேசத்தின் தொலைக்காட்சி அனுபவம் எப்படி?

அறிவியல் - சமூக மேம்பாட்டுக்கான ஆக்கசக்தியாக விளங்கவேண்டிய தொலைக் காட்சி, வெறும் மின்சாரக் கனவாகக் கலைந்து போகும் துயரம் மிகமிகக் கொடுமையானது. தொலைக்காட்சியோடு கை கோர்த்தபடி வீடியோவும் இன்று நம் வீட்டுக்குள் - அறைக்குள் குடியேறி விட்டது. கண்டறியாதன, கண்டு மறந்தனவெல்லாம் வாய்த்த மகிழ்ச்சியில் கனவுப் பயணங்களாகத் தொடர்கின்றன. எங்கள் இருப்பே கேள்வியான அவலங்கள் மறந்துபோக, வீடியோ தரும் கனவுகளை யதார்த்தமாய்க் கண்டுகளிக்கும் இந்நிலை எங்களை எங்கே கொண்டுபோய் விடும்?

தொலைக்காட்சியைப் பார்ப்பதென்பது இன்று ஒரு சடங்காகப் போய்விட்டது. மிக அத்தியாவசியமான ஒன்றாக, எதைப் பார்ப்பது எதைத் தவிர்ப்பது என்ற கட்டுப்பாடுகள் எதுவுமின்றி, எதையாவது பார்த்துக்கொண்டிருத்தல் என்றாகிவிட்டது.

''ஒரு வருஷத்துக்கு மேலாக இடம் பெயர்ந்து ஒழுங்கான படிப்பில்லை. இப்ப ஒரு மாதிரி ஊருக்கு வந்து பள்ளிக்கூடம் நடக்குதென்று சந்தோஷப்பட்டம். ஆனாற் பிள்ளை சதா T V க்கு முன்னால் தானே இருக்கிறான். T Vயை நிறுத்திப் படியென்றால், சண்டைக்கு வாறான்.''

இது ஒரு பெற்றாரின் அழுகுரல் மட்டுமல்ல.

எத்தனை நாள் படம் பார்த்து: லேற்றஸ் படம்வரை பார்த்துவிட வேண்டும். 40 ரூபாவுடன் 'மின்சாரக் கனவு' கைவசமாகிறது. நிரந்தர மின்சாரம் இல்லாது போனாலும் பரவாயில்லை. ஜெனரேற்றர் வசதியுடன் - வீடியோ வாடகைக்கு விடப்படும்.

'சுவிஸிலிருந்து தம்பி ஒருஜெனரேற்றர் வாங்கச் சொல்லிக் காசு அனுப்பியிருக்கிறான். வாங்கிவிட்டால் பிறகு வாடகைக்கு எடுக்காமல் எங்கட கறன்றிலையே பார்க்கலாம்''

இது இன்னொரு பெற்றோரின் பெருமிதம்.

அயலவரோடு உறவாட, ஏன் குடும்பத்துள் கலந்துபேசவேநேரங்கிடைப்பதில்லை. வீட்டுக்கு வருபவருக்கும் 'ஒரு கதிரையை இழுத்து' விடுவதுடன் உபசரிப்பு முடிந்து விடுகிறது. எல்லோரும் அந்தப்பெட்டிக்குள் தலையை நுழைத்துவிட வேண்டியதுதான். பின்னர் படம் முடிந்தும் கனவுகள் முடிவதில்லை.

> 'தங்கச்சிக்குச் சோதினையல்லே·
> போய்ப்படி. சோதினை முடிந்தபின்
> பார்க்கலாம்.'

இப்படிச் சிறிது விழிப்புணர்வு காட்டும் பெற்றோரும் இருக்கின்றனர். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடு வீட்டில் 'காதல் கோட்டை' உரத்த சத்தத்தில் காட்டப்படுகையில், பிள்ளை எப்படிப்படிக்கப் போகும்,—

'படம் முடியப் படிப்பேன் அம்மா' பிள்ளையின் திறமையை அங்கீகரிக்க வேண்டிய நிலையில் பெற்றோர்.

படம் பிள்ளைக்குத் தரும் கல்வி....? கனவுகள்; கனவுகள்; கனவுகள்.

தமிழ்த்திரைப்படங்களைக் 'கனவுகளின் தொழிற்சாலை' என்று ஒரு எழுத்தாளர் அழகாக வரையறுத்தார். கற்பனைச் சுகம், Fantacy என்பதே மிச்சமாகிறது. குறைந்த பட்சம், இவனுக்கு முடியாததை அந்த ஹீரோ, ஹீரோயின் அடைவதைக் கண்டு களிக்கும் வாழ்வாவது கிட்டுகின்றது. இவ் விரக்தி, அந்தத் திரை நாயகர்களுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதன் வழி, தற்காலிகமாகத் தவிர்க்கப்படும் நிலை —

ஆனாலும் கனவு எத்தனை நாளைக்கு?

கனவுகளின் சிறகுகள் முறிகின்ற போது, உளநோய் அனுபவம் மட்டுமே மிஞ்சுகின்றது.

எனக்குத் தெரிந்த பையன் ஒருவன், தன்னைக் கமலகாஸனாகப் பாவனை செய்து, அவரது பாணியில் நடை, உடை, பாவனை காட்டி, சக மாணவியர்களோடு ஹீரோவாகத் தொடர்பு கொள்ள முற்பட்டு, இறுதியில் மன நோயாளியாக முறிந்து போனகதையை எனது தொடர்பியல் வகுப்புகளிலே அடிக்கடி செல்லுவதுண்டு. மிகஅண்மையில்தன்னை 'பாட்ஷா' ரஜனியாகப் பாவனை செய்துமனநோயாளியான மற்றொரு பையனின் தரிசனம் கிடைக்கும்.

எங்கள் சினிமாக்கள் தரும் சுப்பர் மான் Supper Man கனவை உண்மையென நம்பி, அண்மையிற் தென்கிழக்கு ஆசிய நாடொன்றின் சின்னப் பையன்கள் சிலர் மாடி ஒன்றிலிருந்து சுப்பர் மான் ரீ சேட் சகிதம் பாய்ந்து, மாய்ந்த கதை எதனை உணர்த்துகின்றது?

இந்தச் சம்பவத்தின் பின், அந்த நாடு Supper Man T Shirt க்குத் தடை விதித்து, சினிமா உள்ளடக்கம் பற்றியும் விழிப்புணர்வு கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

எமது நிலை.. ......?

திறந்த பொருளாதாரக் கொள்கையின் வழி, எல்லாமே திறந்து விடப்பட்ட நிலை. இந்த விதச் சமூகச் சீரழிவு அம்சங்களைப் பொறுத்தவரை மட்டும் தாராள மனித உரிமை கிடைக்கிறது. ஒரு விதத்தில் மக்கள் இவ்வாறான மயக்கங்களுக்குட் கிடப்பது பலருக்கும் விருப்பமான சங்கதியாகவும் அமைகின்றது. சர்வதேச ரீதியில் நவகுடியேற்ற வாதத்தின் செயற் பாட்டிற்கு இந்த ஊடகம் பெரிதும் துணை போகிறது. தேசிய மட்டத்தில் மக்கள் விழிப்புணர்வு மழுங்கப்பட இது மயக்க மருந்தாகிறது.

என்ன செய்யலாம்?

மக்கள் விழிப்புணர்வுக்கான வழிகளைக் கண்டாலன்றி உய்வதற்கு வேறுவழியில்லை. வர்த்தக நோக்கம் ஒன்றையே கொண்ட தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தியாளர் தொடக்கம், தொலைக்காட்சி நிலையத்தார் வரை, சினிமா உற்பத்தியாளர் முதல் விநியோகாத்தர் வரை எமக்கு உதவப் போவதில்லை.

தனி மனிதரின் குறையாக இதனைச் சொல்லிச் சொல்லி இந்த நோய்க்குச் சமூக அங்கீகாரம் தரும் எமது அவலமே முதலில் உணரப்படவேண்டியது. ஒரு விழிப்புணர்வுள்ள சமூகத்தில் இந்த மாயச் சரக்குகள் விற்பனையாக முடியுமா?

'உலகில் மிகச் சிறந்த கல்வி வாய்ப்புகளைப் பெற்றவர்கள்' கணித மூளை கொண்டவர்கள், என்றெல்லாம் பெருமைப்படும் எமது சமூகம் அடிப்படையான பண்பாட்டு உணர்வை இழந்து போனமையை உணர்ந்து கொள்வதில் இனியும் காலந் தாழ்த்துதல் முடியாது. இழந்து போன மனித முகங்களை மீட்டெடுப்பதில் விழிப்புணர்வு கொண்ட மக்கள் முதலில் ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிணைந்து கொள்ளவேண்டும், இவர்களின் வழிகாட்டலின் கீழ், இந்த இழிந்த கனவுக் காட்சிகள் தொடர்பான விமர்சனக் கல்விக் கான ஏற்பாடுகளைக் காணவேண்டும்.

கூட்டாக ஒரு திரைப்படத்தை வீடியோவிற் கண்டு – அதன் உள்ளடக்கம் – அது சொல்லும் செய்தி – சொல்லப்பட்ட விதம் என்பவற்றைப்பற்றி, அடிப்படையான வினாக்களை எழுப்பி, மனித மாண்பும் சமூக விழுமியங்களும் அங்கு எவ்வாறு சிதைக்கப்படுகின்றன என்பது உணரப்படல் வேண்டும். இவ்வாறாகக் கூடிக்காணும் விழிப்புணர்வு நாளடைவில் சமூக முழுமையையும் தொற்றிக் கொள்ளும் போது பண்பாட்டு மேன்மை இயல்பாய்க் கை கூடும். காண்பதில் தாமாக நல்லதை எடுக்கட்டுமே எனும் எல்லாம் திறந்த மேம்பாடு என்பது வக்கிரமான சமூக உருவாக்கத்திற்கே வழிவகுக்கும்.

அடுத்தது - நாமாக இந்த ஊடகத்தைப் பயன்படுத்தி, நல்லது இது எனக்காட்டும் முயற்சி. இன்று இந்தக் காட்சிச் சாதனங்கள் மட்டுமன்றி, இந்தக் காட்சிகளை ஆக்கும் சாதனங்களும் கூட எம் வசம் உண்டு. சாமத்தியச் சடங்கிலிருந்து செத்த வீடுவரை காட்சிப் படுத்தல்கள் விமரிசையாக நடக்கின்றன. அங்கும் கூட இந்த இழிந்த சினிமா வக்கிரங்களின் பின்னணியின் ஆதிக்கத்தையே காண முடியும்.

'புல்வெளி புல்வெளி' என்றும் 'பனித்துளி பனித்துளி' என்றும் பாடற் பின்னணியில் பெரியபிள்ளை புல்லுக்குள் இருந்தபடி பாவனை நடக்கும். திருமண வீடியோவிலும் சினிமாக் காட்சிகளின் விரிவே. வாழ்வைச் சினிமா ஆக்கும் அவலமே மிஞ்சும். கணவன், வீடியோவில் தான் பூஜிக்கும் திரை நாயகன் போல இல்லையே என்ற ஏக்கமே திருமண முறிவுக்கு அடிப்படையாகும். இந்த விதமான பாவனையின்றி, வாழ்வின் யதார்த்தங்களை, சமூக மேம்பாட்டிற்கான வழிவகைகளைச் சொல்லும் நல்ல படைப்புகளை உருவாக்குவதில் சமூக விழிப்புணர்வு கொண்ட கலைஞர்கள் ஒன்றுபட்டு ஈடுபடவேண்டும்.

திட்டமிட்ட வகையில் மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்து, தொலைக்காட்சி போன்ற தொடர்புச் சாதனங்களையும் உரியவாறு பயன்படுத்தி மேம்பாடு கண்ட சமூக முன்மாதிரிகள் பலவற்றை நாம் காணமுடியும். அத்தகைய பண்பாட்டுப் புலங்களில் அற்புதமான கலைப்படைப்புகள், காலத்தால் அழியாதனவாய் நிலைபெறுதலும் கண்கூடு. இவையெல்லாம் வழிகாட்ட இனி ஒரு விதி செய்யும் உறுதியைக் கொள்வோம். அதனை என்னாளும் காத்து எங்கள் வாழ்வும் வளமும் மேம்படக் காண்போம்.

---

★ ★ றஞ்சனாஸ் ரெக்ஸ் ★ ★

உள்நாட்டு வெளிநாட்டுத் துணிகள் தைத்த ஆடைகள்

நியாய விலைகளிற் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

**Ranjahana's Tex**

No. 4, Central Market, **Chunnakam.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கற்பித்தல் நுட்பவியல்கள்

கலாநிதி சபா. ஜெயராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கற்பித்தலில் வினைத்திறனை ஏற்படுத்துதல் தொடர்பான ஆய்வுகளின் வழியாக இரண்டு வகையான காட்டுருக்கள் முகிழ்த்தெழுந்துள்ளன. அவை வருமாறு:

(அ) உளவியற் காட்டுருக்கள்

(ஆ) பொறியியற் காட்டுருக்கள்

உளவியற் காட்டுருக்கள் கற்போர், கற்கும் கவிநிலை, ஆக்கவிளைவுகள் (EFECT) முதலியவற்றின் அடியாக உருவாக்கப்பட்டுள்ளன. பொறியியற் காட்டுருக்கள் உள்ளீடு, வெளியீடு, அறிவியம் (MESSAGE) முதலியவற்றின் அடியாக உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய இரண்டு காட்டுருக்களையும் அடிப்படையாகக் கொண்டு புதிய கற்பித்தல் நுட்பவியல்கள் முனைப்புப் பெற்று வருகின்றன.

உளவியற் காட்டுருக்கள் கற்பவரைக் குவியப்படுத்தி அவர்களது நடத்தைகளிலும், சிந்தனைப் போக்குகளிலும். துலங்கலிலும் நேர்முகமான வளர்ச்சிகளை ஏற்படுத்தும் ஆக்கங்கள் மீது கூடுதலான ஈர்ப்பைக் கொண்டுள்ளன. நவீன ஆய்வுகளிலே கற்றல் என்ற எண்ணக்கருவுக்கும், தொடர்பியம் (COMUNICATION) என்ற எண்ணக்கருவுக்குமிடையே பல ஒப்புமைகள் சுட்டிக் காட்டப் பெறுகின்றன. அறிவை ஒழுங்கமைத்தலும் உட் செலுத்துதலும் கற்றலிலும் தொடர்பியத்திலும் இடம் பெறும் பொதுப் பண்புகளாக அமையும்.

கற்றல் என்பது இலக்குடையதாகவும், நன்கு திட்டமிடப்பட்டு வழங்கப்படத் தக்கதாகவும். கற்றல் விளைவுகளை மதிப்பீடு செய்யப்படத்தக்கதாகவும் இருக்கும் நிலையில் அதனை நெறியக்கற்கை (INSTRUCTION) என்றும் ஆய்வாளர் குறிப்பிடுவர். நெறியக்கற்கை என்பது இரு வழித் தொடர்பியத்தைக் கொண்டது. அதாவது ஆசிரியரால் அறிவியங்கள் வழங்கப்படுதலும் மாணவர்கள் அவற்றைத் தமது இயல்புக்கேற்றவாறு உள்வாங்கி சில செயற்பணிகளை ஆற்றுகை செய்தலும் நெறியக் கற்கைச் செயல்முறையில் இடம்பெறுகின்றன. இவற்றில் மூன்று தொடர் நிலைகள் காணப்படும். அவையாவன:

(அ) கற்பதற்கும் பயன்படுத்துவதற்குமுரிய தகவல்கள்

(ஆ) கற்போரின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள்

(இ) திருத்தி நல்லாற்றுப்படுவதற்கான பின்னூட்டல்கள்

கற்பிப்பவருக்கும் கற்பவருக்குமிடையே தொடுகையாக இயங்கி அறிவியத்தை ஊடுகடத்தும் சாதனங்கள் தொடர்புத்தளங்கள் (MEDIA) என்று குறிப்பிடப்படும். (பெரும் தொடர்புத் தளங்களின் கருத்தியல்கள் அவற்றால் வழங்கப் பெறும் அறிவியங்களில் ஊடுருவி நிற்பதனால் தொடர்புத்தளமே அறிவியம் (The MEDIUM Is THE MESSAGE) என்ற கருத்தும் வழங்கப்படலாயிற்று. (MC LUHAN' 1964) நடைமுறையில் அறிவியங்களை எடுத்துச் செல்லும் சாதனங்களாகவே தொடர்புத்தளங்கள் அமையும்.

நெறியக்கற்கைக்குரிய சாதனங்கள் "வன்கலம்" "மென்கலம்" என இரு பிரிவாக அமையும். உதாரணமாக படவழுக்கிப் பொறி வன்கலமாகக் கருதப்படும். அதனுள்ளே செலுத்தப்படும் வழுக்கிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்கலமாகக் கொள்ளப்படும். இவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்படும் கற்பித்தற் செயல்முறையானது "முறையியலாக" அமையும். கற்பித்தல் முறையியலிலும். தொடர்பியத்திலும் சில பொதுப்பண்புகள் காணப்படுகின்றன. அவையாவன :

(அ) தொடர்புக் கோவை (ENCODING)

(ஆ) தொடர்புக் கோவைக் குலைப்பு (DECODiNG)

(இ) அறிவியவிளக்கம் (INTERPRETATION)

எத்தகைய கற்பித்தலிலும் அறிவியத்திலும் இலக்கு, உள்ளடக்கம், தொடர்புக் கோவைப்படுத்தல் ஆகிய முப்பொருளும் இணைந்திருக்கும். இவற்றை மேலும் விளக்கலாம்.

கற்றல் கற்பித்தல் என்பவை முற்றிலும் குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகளாகும். புலன்கள் வழியாகக் குறியீடுகள் மூளைத்திரளினுள்ளே செலுத்தப்படுகின்றன. கற்பிப்பவர் குறியீடுகளைத் தொடர்புக் கோவைப் படுத்திக் கொடுக்க, கற்பவர் தமது அறிகை அமைப்புக்கேற்றவாறு தொடர்புக்கோவை களைக்குலைத்து கருத்தாக்கம் செய்து விளங்கிக் கொள்ளுகின்றார்கள்.

கற்பித்தல் நுட்பவியல்கள் பற்றி ஆராயும் பொழுது, கற்றல் பற்றி றொபேற் காக்னே (ROBERT GAGNE - 1965) குறிப்பிட்ட கற்றல் படிநிலைகளின் நிரலமைப்புப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. கற்றல் நிரலமைப்பை மிகவும் எளிமையான நிலையிலிருந்து மிகவும் சிக்கலான நிலை வரையில் அவர் அமைத்துக் காட்டினார். அந்த நிரலமைப்பு வருமாறு:

1. சமிக்ஞை கற்றல்
2. தூண்டி - துலங்கல் கற்றல்
3. உடலியக்கங்களைச் சங்கிலித் தொடராகக் கற்றல்
4. சொற்களைத் சங்கிலித் தொடராக அமைத்துக் கற்றல்
5. வேறு பிரித்தறிந்து கற்றல்
6. எண்ணக்கருக் கற்றல்
7. விதிகளைக் கற்றல்
8. பிரச்சினை விடுவித்தல்

செயற்றொகுதி அடிப்படையில் கற்பித்தலை எவ்றாறு வடிவமைக்கலாம் என்பதைக் கருத்திலே கொள்ளும் பொழுது. நான்கு நிலைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அவையாவன.

(அ) பகுப்பாய்வு: கற்றல் இலக்குகளைப் பகுத்தாராய்தல். கல்வி வளங்களைப் பகுத்தாராய்தல், முதலியவை இப் பிரிவில் இடம் பெறும்.

(ஆ) வடிவமைத்தல்: முன்னைய வடிவமைப்புக்களை மீளாய்வு செய்தலும் கற்பித்தல் ஒழுங்கமைப்புடன் மட்டும் தான் பயிற்சி தங்கியுள்ளதா என்பதை இனங்காணுதலும்.

(இ) வளர்ச்சிப்படுத்தல்: கிடைக்கப் பெறும் வளங்களைக்கருத்திலே கொண்டு கற்பித்தலைத் திட்டமிடல்.

(ஈ) கற்பித்தலை செயற்படுத்துதலும் மதிப்பீடு செய்தலும்

கற்பித்தலுக்குரிய தொடர்புத் தளங்களைத் தெரிவு செய்தல் பல்வேறு காரணிகளின் தாக்கங்களுக்கு உள்ளாகின்றது. கற்கும் பொருளின் உள்ளடக்கம், கற்பித்தல் முறையியல். கற்றல் பணி, கற்கும் மாணவரின் உளவியல் சார்ந்த இயல்புகள், ஆசிரியரின் உளநிலை, நடைமுறைச் சாத்தியப்பாடுகள் முதலிய பல காரணிகளைத் தெரிவு செய்வதிலே செல்வாக்குச் செலுத்தும். கற்பித்தலுக்கு உதவும் ஒரு சாதனமாகவே தொடர்புத்தளம் அமைய வேண்டும். மாறாக அதற்கு மாணவரோ ஆசிரியரோ அடிமையாகிவிடலாகாது.

மாணவரிடத்துஅறிகை ஆட்சி, எழுச்சி ஆட்சி, உடலியக்க ஆட்சி என்ற முப்பெரும் ஆட்சிகளையும் வினையாற்றலுடன் வளர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொருட்டு அண்மைக்காலமாக கட்புலச் சாதனம், செவிப்புலச் சாதனம், கட்புல - செவிப்புலச் சாதனம். பல்லுணர்வுச் சாதனம் என்ற நால்வகைச் சாதனங்களும் வளமூட்டப்பட்டு வருகின்றன.

உதாரணமாக கரும்பலகையாக இருந்த மரபுவழித் தொடர்புத்தளம் இன்று கரும்பலகை, வெண்பலகை, காந்தப்பலகை, கவர்துணிப்பலகை என்றவாறு வளம்பெறத் தொடங்கியுள்ளது. ஒலித் தட்டுக்களாக அமைந்த மரபுவழித் தொடர்புத்தளம் இன்று வானொலியுடன் இணைந்த ஒலிப் பதிவு முறைமைகளையும், நடப்பியல் ஒலி முறைமைகளையும் கொண்டதாக மலர்ச்சி கொண்டுள்ளது. சாதாரணமாகப் படவழுச்சிப் பொறிகள் தன்னியக்கப்பட வழுக்கிப் பொறிகளாகவும், எறிவு செய்யப்படும் படங்கள் மீது சுட்டும் ஒலிகளைப் பாய்ச்சும் அமைப்புக்களைக் கொண்டதாகவும் அபிவிருத்தி கொண்டுள்ளது. தொலைக்காட்சி வாயிலாகக் கற்கும் முறைமையில் இன்று தொலைக்காட்சி நூல் ( Tele Text ) என்ற முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது தொலைக்காட்சி, கணணிப்பொறி, எண்பவற்றின் இணைப்பின் வழியாக ஏற்கனவே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எந்த நூலின் பக்கத்தையும் பெற்று வகுப்பறையில் உடனடியாகப் பயன்படுத்தமுடியும்.

அண்மைக்காலத்துக் கல்வியியல் ஆய்வுகளில் ''கல்விப்பயன்நுகர்வியல்'' ( Educational Utility ) என்ற கருத்து வெளிவரத் தொடங்கியுள்ளது. புதிய கற்பித்தல் நுட்பவியல்கள் ஒரு சிறப்பார்ந்த சேவையாகவே முன்னர் கருதப்பட்டனவேயன்றி, அனைவருக்கும் உரியதாகக் கொள்ளப்படவில்லை. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வித் தகவல்கள் யாவர்க்கும் கிடைக்கப் பெறல் வேண்டும் என்பதே கல்விப் பயன் நுகர்வியல் வழியாகத் தரப்படும் கருத்தாகும். அதாவது நவீனகல்வி வளங்கள் செல்வந்தர், வறியோர் என்ற வேறுபாடின்றி அனைவர்க்கும் கிடைக்க வேண்டும் என்பது கல்விப்பயன் நுகர்வியல் வழியாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**துணை நூல்கள் ;**


Anderson, J. S. A Exploring Tele Text as a Resource, Koganpage london, 1987.

Gropper, G. L. Amethodology of Instruction, Lawrence Erlbaum, New Jersey, 1983.

Romiszowski, Selection and Use of Instru ctional Media koganpage, 1988.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுக்கும்
## சங்கற்பம் — சில சிந்தனைகள்

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்துக்களது சமய வாழ்வில் எந்த ஒருசமயக்கிரியையும் தொடங்கும் பொழுது முதன்மைக் கடவுளெனச் சிறப்புப் பெறும் விநாயகரை வழிபாடு செய்வது மரபு. எடுத்த காரியம் கைகூடுவதற்கும் அக்காரியத்தின் பயன் தொடர்ந்து கிட்டுவதற்கும் அப்பெருமானது திருவருள் இன்றியமையாதது என்பது இந்துக்களின் நம்பிக்கை. விநாயகரது வழிபாட்டையடுத்து இடம் பெறுவது சங்கற்பம். கிரியையின் தொடக்கமாக அமைவதே சங்கற்பம். சங்கற்பம் என்பது செய்யும் காரியம் நிச்சயிக்கப்படுதலாகும். இந்து ஒருவனது நாளாந்த வாழ்க்கை மங்களகரமாகவும் செம்மைவாய்ந்ததாகவும் விளங்க வேண்டுமென்பதை அவாவிப் பல்வேறு விடயங்கள் இச்சங்கற்பத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இறைவன் திருவருளை வேண்டி நிற்கும் வகையிலும் மன உறுதியை வெளிப்படுத்தும் வகையிலும் அமையும் சங்கற்பம் இந்துக் கிரியை மரபில் முக்கிய இடத்தைப்பெறுகின்றது. இல்லறக் கிரியைகளிலும் ஆலயக் கிரியைகளிலும் சங்கற்பம் இடம் பெறும். மனித வாழ்வில் சகல நிலைகளிலும் எதிர்ப்படும் இடையூறுகள் நீங்கவும் எப்பிறவியிலாவது அறிந்தோ அறியாமலோ செய்த குற்றங்களின் தீர்வுக்காகவும் பிரார்த்திப்பது இக்கிரியையின் முக்கிய நோக்கமாகும்.

மனிதனது வாழ்க்கை சம்சார சாகரம் எனக் குறிப்பிடப்படுகின்றது. வாழ்க்கை என்னும் பெருங்கடலில் சிக்கித் தவிக்காமல் இருக்க முயல்வது மனிதனது சிந்தனையிலும் செயல்களிலுமே தங்கியுள்ளது. வாழ்க்கையில் மனிதன் எத்தனையோ மனப்போராட்டங்களையும் சலனங்களையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலைகளிலிருந்து மனதைத் திருப்பி மன திட்பமும் உறுதியும் கொள்வதற்கு சமயக் கிரியைகள் பெருந்துணை புரிவன. இச்சமயக் கிரியைகளின் முன்னோடியாக விளங்கும் சங்கற்பம் கிரியை செய்பவனது மனஉறுதியை வெளிப்படுத்துகின்றது. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான சகல நலன்களும் ஈடேறு வதற்காக இறைவனை வேண்டும் வகையில் இச் சங்கற்பம் இடம் பெறுகின்றது.

வேதப்பாடல்களிலும் ஒருவன் நீண்டகாலம் வளத்துடன் வாழவேண்டும் என வாழ்த்தும் மந்திரங்கள் உள்ளன. ''நூறு சரத்காலம் வாழ்வாயாக!'' என்பதே அவ் வாழ்த்து. ஆகம மரபிலும் திருக்கோயில் வழிபாட்டில் இடம் பெறும் எக்கிரியைகளுக்கும்தொடக்கமாகஅமைவது விநாயகர் வழிபாடும் அவரது திருவருட் துணை கொண்டு நிகழும் சங்கற்பமுமாகும். எடுத்துக்காட்டாக விநாயக மகோற்சவத்தின் போது ஆலய அறங்காவலர் உற்சவத்தினை நிகழ்த்துவதற்குரிய சிவாச்சாரியரை வரிக்கும் போது இடம் பெறும் சங்கற்பத்தை இங்கு குறிப்பிடலாம்.

ஆலய அறங்காவலர் தருப்பைகளில் அமர்ந்து கையில் தருப்பையினாலமைந்த பவித்திரத்தை அணிந்து தருப்பைகளிற் சிலவற்றை வேறாக எடுத்து மோதிரவிரலில் மடித்து கைக்கு வெளியே இருக்குமாறு வைத்து வலது தொடையின்மீது இடக் கையை விரித்து வைத்து மூடியிருக்கும் வலது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை தருப்பை வெளியே இருக்கும்படி வைத்து, நிகழ்த்த விருக்கும் கிரியை யினைக் குறிப்பிட்டு ''இதனை நிறை வேற்றப் போகின்றேன்'' என விநாயகரை நினைத்து மன உறுதி கொள்ளுதல் இக் கிரியையின் ஆயத்த நிலையாகும்.

விநாயகப் பெருமானுக்குரிய ''வெண்மை வஸ்திரந் தரித்தவரும் எங்கும் நிறைந்தவரும் முழுமதி வண்ணம் உடைய வரும் நான்கு திருப்புயங்களைக் கொண்ட வரும் திருவருள் வாய்ந்த துதிக்கை பொருந்திய முகத்தையுடைய வரும் ஆகிய விநாயகப் பெருமானை, எவ்வித இடையூ றும் நேராமல் எடுத்த கருமம் இனிதே நிறைவேறும் பொருட்டு தியானிக்கின் றேன்'' என்ற பொருளில் வரும் ''சுக்கிலாம் பரதரம்'' எனத் தொடங்கும் மந்திரத்தை சிவாச்சாரியர் உச்சரிக்க, கர்த்தாவானவர் தனது தலையில் மூன்று முறை குட்டி அவரது திருவருளுக்கு பாத்திரராகும் வண்ணம் வழிபடுதல் வேண்டும்.

**செய்யப்படவிருக்கும் காரியத்தை நிச்சயிக்கும் சங்கற்பம் பின்வருமாறு அமையும் :**

"ஓம் மங்களமாக எல்லா நன்மைகளும் பொருந்தக் கூடிய இந்த சுப முகூர்த்தமான வேளையிலே முழுமுதற் கடவுளாகிய விநாயகப் பெருமானது திருவருளாகிய ஆணையினால் நிகழ்வதாய், ஆதியான பிரமாவிலிருந்து தொடங்கி நிகழும் இரண்டாவது பாதியில், சுவேதவராக கற் பத்தில் வைவச்சுவத மன்வந்தரத்தில், இருபத்தெட்டாவது ஆகிய நான்குயுக வட்டத்தில் நான்காவதாகிய கலியுகத்தில், முதலாம் பாதத்தில், நாவலந்தீவில், பாரத வருடத்தில், பரதகண்டத்தில், மகாமேரு மலையின் தென்பாரிசத்தில், சாலிவாகன சகாப்தத்தில், இப்பொழுது நிகழுவதாகச் சொல்லப்படும் பிரபவ முதலாகிய அறு பது வருட மத்தியிலுள்ள வருடத்தில், (இன்ன வருடப் பெயர்) (இன்ன) அயனத் தில் (இன்ன) இருதுவில், (இன்ன) மாதத் தில், (இன்ன) பட்சத்தில், (இன்ன) திதிகூடிய (இன்ன) கிழமையும், (இன்ன) நட்சத்திரமும் பொருந்தப் பெற்றதாயுள்ள தும் சுபயோகமும் சுபகரணமும் இவை முதலாகிய எல்லா நலன்களும் வாய்ந்துள்ள துமாகிய இன்றைய இந்த சுபதிதி பொருந் திய வேளையில்,

(இன்ன) கோத்திரத்தில் (இன்ன) நட்சத்திரத்தில் (இன்ன) இராசியில் பிறந்து, இன்ன பெயரை உடையவனாகிய எஜமானனாம் எனது மனைவி, மக்கள், சுற்றத்தார் எனக்குரியவும் இந்தக்கிராம வாசிகளாகிய முழுப் பெருமக்களுடையவு மான நலம், பலம், தூய்மை, துணிவு, திடசித்தம், வீரம், வெற்றி, நீடித்த ஆயுள், நோயின்மை, செல்வம், முதலாயின மேன் மேலும் பெருகி வளர்ச்சி யடையும் பொருட்டாகவும் எல்லாத் தீமைகளும் அழிந்து அமைதியுண்டாகும் பொருட்டா கவும், எல்லா மங்களங்களையும் அடையும் பொருட்டாகவும் எல்லாத் தகுதியும் வாய்ந்த புதிய தோற்ற வளர்ச்சியின் பொருட்டாகவும், அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய ஆன்ம குறிக்கோளை அடை யும் பொருட்டும் நீண்ட ஆயுளோடு கூடிய நன்மக்கட் பேற்றின் பொருட்டாகவும் சூரியன் முதலாகச் சொல்லப்படும் ஒன்பது கோள்களாலும் வரம் பெறும் நலன்களை அடையும் பொருட்டாகவும், எல்லாவிதச் சித்திகளை எய்தும் பொருட்டாகவும் உள்ளத்து உதிக்கும் உயர்வான எண்ணங் கள் சிந்திக்கும் பொருட்டாகவும் இப்பிற வியிலாவது முற்பிறவியிலாவது அதற்கு முன் கழிந்த எப்பிறவியிலாவது அறிந்தும் அறியாமலும் செய்துகொள்ள நேர்ந்த குற்றங்களின் தீர்வுக்காகவும்

காரண முதல்வராய் (இன்ன) நகரத் தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தேவாதிதேவர் வல்லபாதேவியைத் தம் மிடங் கொண்ட சித்திவிநாயகப் பெரு மானுக்கு வருடப் பெருவிழா எடுக்கு முக மாக முதலில் விழாவைத் தொடக்கி நடத்தி நிறைவேற்றும் பிரதம குருவை வரிக்கும் செயலைத் தமியேன் இப்பொழுது செய்யப் புகுகின்றேன்'' என்று நிச்சயம் செய்வது இச்சங்கற்பத்தின் முக்கிய அம் சமாகும். (விநாயக மகோற்சவ விளக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. வை. ஆத்மநாதசர்மா 1964, பக் 2 - 5) ஒரு காரியத்தை நாம் செய்யப் புகும் போது எண்ணித் துணிதல் வேண்டும் என்பதை வள்ளுவன் வினைத்திட்பம் என்ற அதிகாரத்தில்,

**'' எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணி**
**யார் திண்ணிய ராகப் பெறின் ''**

(குறள் 665)

எனக் குறிப்பிடுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. எண்ணியவர் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையவராக இருக்கப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவார் என்ற பொருளைத் தரும் இக்குறள் இந்துக்கள் தம் சமய காரியங்களுக்கு முன்னோடியாக எடுக்கும் சங்கற்பத்தின் பொருளை மேலும் தெளிவுபடுத்துவதை ஒப்பீட்டடிப்படையில் உணர முடிகின்றது. அனைத்துக் காரியங்களுக்கும் மனஉறுதி இன்றியமையாததை இக்குறள் அழுத்திக் கூறும். எண்ணிய காரியம் கைகூட வேண்டுமெனில்

**'' எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவது என்பது இழுக்கு ''**

(குறள் 467)

எனத் தெரிந்து செயல்வகை அதிகாரத்தில் வள்ளுவன் எமக்கு அறிவுறுத்துகின்றான். இதே உறுதியைப் பாரதி தனது பாடல்களிலும் தெளிவாகக் கூறுகின்றான் 'வேண்டும்' என்ற பாடலில்,

**' மனதி லுறுதி வேண்டும்**
**வாக்கினி லேயினிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் '**

என மன உறுதி பற்றிக் கூறுகின்றான். 'அன்னையை வேண்டுதல்' என்ற பாடலில் பாரதி,

**' எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும் '**

என்ற விருப்பங்களை வெளிப்படுத்துவதும் அவனது திண்ணிய நெஞ்சத்தைக் காட்டுகின்றது.

சங்கற்பத்தில் எமக்கு வேண்டியவற்றை இறைவனிடத்தில் கேட்பது போல பாரதியும் விநாயகர் நான்மணிமாலையில் கணபதியை வேண்டுகின்றான்.

**' எனக்கு வேண்டும் வரங்களை**
**இசைப்பேன் கேளாய் கணபதி !**
**மனத்திற் சலன மில்லாமல்**
**மதியில் இருளே தோன்றாமல்**
**நினைக்கும் பொழுது நின்மவுன**
**நிலைவந் திடநீ செயல் வேண்டும்**
**கனக்குஞ் செல்வம் நூறுவயது**
**இவையும் தரநீ கடவாயே '**

என்ற வரிகள் சமயக் கிரியையில் விநாயகனை நினைந்து நாம்நிறைவேற்றும் சங்கற்பத்தில், கேட்கும் பேறுகளை நினைவூட்டுகின்றன.

சமயக் கிரியைகளில் இடம் பெறும் சங்கற்பம் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

(அ) மனஉறுதி வெளிப்பாடு

(ஆ) இறைவனைக்குறித்து வேண்டும் பேறுகள்

(இ) கால ஒழுங்கு முறை

மனதில் உறுதி செய்து கொண்டு இறைவனை நோக்கி வேண்டும் பேறுகள் பற்றி ஸ்ரீ காஞ்சிப்பெரியார் தெளிவான விளக்கம் தந்துள்ளார். ( தெய்வத்தின் குரல் பகுதி 6, தொகுப்பு- ரா. கணபதி, 1993, பக்- 10-11)

சங்கற்பத்தின் நோக்கங்கள்:

தன் குடும்பம் முழுவதும் ஷேமம், உறுதியான தன்மை, வீர்யம், விஜயம், ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம் ஆகியவற்றில் அபிவிருத்தி ஏற்படுவதற்காக திருவருளை வேண்டுதல் என இதில் ஏழு அம்சங்கள் உள்ளன. இதனையடுத்து அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்கள் கிட்டுவதற்காக இறைவனிடம் விண்ணப்பித்தல். இதில் நான்கு அம்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இதனையடுத்து 'இஷ்ட காம் யார்த்த சித்த்யர்த்தம்' என்பதில் மனதில் நினைக்கும் எண்ணங்கள் வெற்றியளிக்கும் பொருட்டு இறைவனை வேண்டுதல் இதன் முக்கிய அம்சம். அடுத்து அனைத்து மங்கனங்களும் கிடைப்பதற்காகவும் அனைத்துப் பாவங்களும் ஒடுங்கிப் போவதற்காகவும் இறைவனை வேண்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றோடு புத்திர பௌத்திரர்களின் நன்மைக்கும் வளத்திற்கும் திருவருளை வேண்டுவது குறிப்பிடத்தக்கது. இறுதியாக இறைவன் திருவருட் துணையின் மூலம் அனைத்து விருப்பங்களும் நிறைவேற வேண்டுமென வேண்டுவதாகும். ஆக பதினாறு விடயங்களைப் பிரார்த்தித்துச் சங்கற்பத்தை நிறைவு செய்தல் மரபாகும்- ,பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தல்' என்பதில் இப்பதினாறு அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன என்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்துச் சங்கற்பத்தில் இடம்பெறும் காலவைப்பு முறை உய்த்துணரற்பாலது. இந்துக்களின் காலக்கணிப்பின் திறமையை எடுத்துக்காட்டும் உரைகல்லாக விளங்குவது இச் சங்கற்பம் எனில் மிகையில்லை. கற்பம், மணிவந்தரம், யுகம், இடம், சகாப்தம், வருடம், அயனம், இருது, மாதம், பட்சம், திதி, கிழமை, நட்சத்திரம், யோகம், கரணம், இலக்கினம், சுபநேரம்- முதலிய அம்சங்கள் சங்கற்பத்தில் இடம் பெற்று இந்துக்களின் காலக்கணிப்பு முறையை வெளிப்படுத்துகின்றன. இவை பற்றிய விபரங்கள் பஞ்சாங்கத்தில் விரிவாக உள்ளன.

இவ்வாறு சமயக் கிரியைகளில் முன்னோடியாக விளங்கும் சங்கற்பம் எமது வாழ்வில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்விலும் நற்பயனை விளைவிக்க வேண்டும். வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பொன்விழா நடைபெறும் இம்மகிழ்ச்சிகரமான வருடத்தில், கலைவாணி கோயில் கொண்டருளும் இக்கலைக் கோயிலில் மாணவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தும் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மாணவமணிகளுக்கும் பாடசாலையை வழிநடத்திச் செல்லும் நிர்வாகத்தினர் மற்றும் அபிவிருத்திக்கழக அன்பர்களுக்கும் விநாயகப் பெருமானின் வழிபாட்டில் முதன்மைபெறும் சங்கற்பத்தில் இடம் பெறும் பதினாறு பேறுகளும் கிட்ட வேண்டும். அதன் பயனாய் பாடசாலை பெருவளர்ச்சிகண்டு சமூகத்தினை வழிநடத்தக் கூடிய அறிஞர்களை உருவாக்கவேண்டும். பொன்விழா வருடத்தில் மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆசிரிய சமூகமும் மாணவ சமூகமும் அயராத முயற்சிக்கும் உழைப்புக்கும் தம்மை அர்ப்பணித்துத் கொள்ளத் தக்கதாக மன உறுதி நல்கும் சங்கற்பத்தை எடுத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாதது. அதுவே பொன்விழாவின் கருப்பொருளாக அமைவதாகுக.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர்குறைவிலைக்**
**கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை**
**யிருந்ததே.**

— சம்பந்த சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன், மனிதன், ஓவியம்

திரு. செ. வரதராசன்
சேவைக்கால ஆலோசகர், சித்திரம்

கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பத்தை ஊட்டும் ஓவியக்கலை மனிதன்தோன்றிய கையோடு தோன்றிவிட்டது. ராணித் தேனீயைச் சுற்றி தேனீக்கள் இருப்பது போல அழகியற்கலைகளோடு இக்கலையும் இறைவனைச் சுற்றி இருக்கிறது.

உலகம் என்றோ ஒருநாள் தோன்றியது. மனிதன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றினான். சிறு பிள்ளையாயிருக்கும் போதே சித்திரம் வரையத் தொடங்கினான். ஆதிகாலமனிதன் தான் காணும் காட்சிகளையும் அனுபவங்களையும் தனது வசிப்பிடங்களில் அதாவாது குகைகளிலும் மரங்களிலும் சித்திரங்களாக வரைந்து தள்ளினான். காலப்போக்கில் மனிதனால் ஓவியங்கள் கோவில்களிலும் கலைமாடங்களிலும் வரையப்பட்டன — இறைவனின் திருத்தோற்றங்கள் வரையப்பட்டன; சிற்பங்களாகவும் ஆக்கப்பட்டன. ஆதி மனிதனின் எண்ணக்கருக்கள் — உணர்ச்சி வெளிப்பாடுகள் — குகைகளில் ஓவியங்களாக மலர்ந்தன. அவைகள் ஆதிகால மனிதனின் வாழ்வுமுறையை — சரித்திரத்தை நாம்கண்டறிய வழிசமைத்தன. எமது எண்ணங்கள் பல மொழிகளின் உதவியுடன் வெளிவருகின்றன. ஆதிமனிதனின் எண்ணங்கள் ஓவியங்களாகவே வெளிவந்தன. பழைய ஓவியங்களைவைத்து அவனது வாழ்க்கை வரலாறுகளையும் எண்ண ஓட்டங்களையும் அறிய முடிந்தது. ஆதிமனித சரித்திரமும் ஓவியங்கள் மூலமே கண்டறியப்பட்டது,

தற்போது நாம் காணும் தெய்வத்திருவுருவங்கள், பல ஓவியர்களால் வரையப்பட்டன. முதன் முதல் இறைவனின் திருத்தோற்றத்தை ஓவியக்கலைஞர் தமது எண்ணப்படி வரையவில்லை. ஞானிகளும் தபோ முனிவர்களும் யோகிகளும் ஞானக்கண்ணில் கண்ட தோற்றத்தைச் சொல்லக்கேட்டே வரைந்தார்கள். இயற்கைக்காட்சிகளும் இறைவனின் திருத்தோற்றம்தான். சூரிய அஸ்தமனம் — சூரிய உதயத கடல் — மலைத்தொடர் — மலைசார்ந்த இடம் — வயல் சார்ந்த இடம் நீர்நிலைகள் ஆகியன எல்லாம் இறைவனின் திருத்தோற்றங்களே. பஞ்சபூதங்கள் இறைவனில் ஒடுக்கம். ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' என்ற தேவாரத்தை நாம் மறக்கவில்லை.

இறைவனை நேரில் காண்பது மிகக் கடினம். இறைவனின் சொரூபத்தை சித்திரமாகக்காணமுடியும். நிஜத்தின் நிழலை நாம் கண்டு வணங்கி அதற்கு அடங்கி மயங்கி அதனை அடைய விளைகிறோம். அதை அடைய ஆயிரம் தகைமை தேவை, அவற்றில் முக்கியமாக அன்பு, ஒழுக்கம், பக்தி, தொண்டு கடமை ஆகியன நீண்டு கொண்டே போகும். அவ்விதமாக இறை வழிசமையும். இறையடி அமையும்.

இறைவனின் திருத்தோற்றங்களை வரையும் போது இறைவனைத்தியானித்தல் போலவே இருக்கும். ஒரு கலைப் படைப்பை அமைத்து முடிக்கும் வரை கலைஞன் அப்படைப்போடு ஒன்றி விடுகிறான். இறைவனின் திருத்தோற்றங்களை அமைக்கும் போதும் அப்படிததான். தன்னை முழுக்க அர்ப்பணித்தே அங்கு கலை உருவாக்கப்படுகிறது. மெய்யடியார்கள் இறைவனிடம் இரண்டறக்கலப்பது போல கலைஞனும் இங்கு இரண்டறக்கலக்கிறான். கலைஞனும் தன்னை அர்ப்பணித்து உருவாக்கும் கலை இங்கே உயிர் பெறுகிறது. மானிடரின் வணக்கத்திற்கு உரியதாகிறது. கண்ணால் காணமுடியாத தெய்வம் இங்கே கண்முன்னே காட்சி யளிப்பதாகப் பிரமையை ஏற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிஜத்தை நிழலாக அமைத்தவன் இந்த ஓவியக்கலைஞன். ஆகவே மானிடரை நல்வழிக்குத் திருப்பி இறைவழிக்குச் சேர்க்கும் பெருமையில் ஒவியனுக்கும் பங்குண்டு.

சித்திரம் பயிற்சியால் வரும்; பிறப்போடும் வரும். பயிற்சி மனிதனின் முயற்சி. பிறப்போடு கொண்டுவந்தது இறைவனின் கொடை. கொடையாய் வருவது பூர்வ ஜென்ம புண்ணியம். பயிற்சிபண்ணாமலிருப்பது மனிதனின் அறிவீனம். இறைவனின் திருவுருவங்களை வரைவதோடு சித்திரக் கலை நின்று போவதில்லை. உலகில் நாம் காணும் காட்சிகளை வரைவதிலும் கலை பரவிநிற் றது. நாம்காணும் காட்சிகளில் இயற்கைக்காட்சிகளை வரைவதும் இறைவனின் சொரூபங்களை வரைவதற்கு சமனாகத்தான் உள்ளது.

'மரத்தை மறைத்தது மாமதயானை' என்றும் மெய்யடியார் இலக்கியத்தில் சொன்னதுபோல் மண்ணையும் மரத்தையும் மாற்றுப்பொருளையும் கொண்டு அமைக்கப்பட்ட கலைப்படைப்பானது. தனது ஊடகப் பொருளை மறைத்து மனதுக்குள்ளும் மனதுக்கப்பாலும் ஒளிவிடும் மாபெரும் ஜோதியைக் கலை வடிவாகக் காட்டுகிறது. இங்கே கல்லுக்குள்ளும் இறைவன் இருக்கிறான் என்பதனைச் சொல்லாமற் சொல்லிக் காட்டுகிறது. தெய்வதத்துவம் இதயம் உருகிப்பாடிய இசையானது எப்படி இறைவனின் இதயத்தை உருக்கி வேதாரணியக் கதவைத் திறக்கச் செய்ததோ அதுபோல இதயத்தில் ஊற்றெடுத்துக் கைகளில் களிநடம் புரிந்து கலையாய் மாறும் சித்திரங்கள் கண்வழி புகுந்து கருத்தினில் கலந்து காதலாய் மாறி கசிந்துகண்ணீர் மல்கி கரையிலா இன்பக்கடலில் கரைந்திடச் செய்யும். கருத்தின்றி கவனமின்றி கலைப்பணியின்றி உருவாகும் கலையானது நிலையாமல் கலைந்து விடும்.

ஆதிமனிதனிடம் ஆரம்பமாகிக் காலப் போக்கில் பல இடங்களிலும் மிளிர்ந்த சித்திரங்கள் — கல்வி அமைப்பில் புகுத்தப் பட்டுப் பாடசாலைகளில் மாணவர்களிடம் இளையோடுகிறது. இதை மிகுந்து ஆர்வத்தோடு ரசனையோடு மாணவர்கள் தமக்குள் கலக்கவிட்டு சித்திரக்கலையை கல்விச் சிகரத்தில் ஏற்றிவைத்தால் உலகத்தார் கண்களைக் கவர்ந்து மேலும் வரவேற்பைப் பெற்று, கருத்தில் பதிந்து காலத்தால் அழியாத கருவூலங்களை உருவாக்கி உலகமுள்ளவரை உயிர் வாழும்.

---

உயர்ந்த தரத்திற் சிறந்த நகைகளைச் செய்யச்
சிறந்த இடம்

★ ★ ★

**சுபேந்திரன்** நகைத் தொழிலகம்

321, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இலக்கிய வரலாறும் மாணவர்களும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலைப் பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்,

தமிழ்மொழியைக் கற்கின்றவர்கள் உயர் கல்வி நிலையிலேயே இலக்கியக் கல்வியையும் கற்கத் தொடங்குகின்றனர். சிறப்பாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழிலே காலத்துககுக் காலம் தோன்றிய இலக்கியங்களைப் பற்றிக் கற்கின்ற வாய்ப்பைப்பெற்றவர்களாய் உள்ளனர். இலக்கியவரலாற்றுக் காலகட்டங்களில் 'ஈழம்' என்ற சொல் சங்க இலக்கியத்தொகுப்பு நூல்களில் அறிமுகமாகின்றது. 'ஈழத்துப்பூதன் தேவனார்' என்னும் புலவர் பாடிய பாடல்களென அகநானூற்றிலும் ( பாடல் : 88, 231, 307 ) குறுந்தொகையிலும் ( 189, 343, 360 ) நற்றிணையிலும் ( 366 ) சில பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. ஆனால் இப்புலவர் பெயர் ஏறத்துப்பூதன்றேவனார் எனவும் மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் எனவும் குறிப்பிடப்படுவதால் ஈழத்து இலக்கிய வரலாற்றோடு இணைந்திருப்பவர் யார் என்ற கேள்வியும் உண்டு. இது ஆய்வின் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழிலக்கிய வரலாறு என்னும் பாரிய வரலாற்றுப் பரப்பிலே 'ஈழத்திலக்கிய வரலாறு' என்னும் பகுதி பற்றிய முழுமையான தகவல்கள் இன்னமும் தொகுக்கப் படவில்லை. ஈழத்துப்பூதன் தேவனார் காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை, நீண்ட காலப்பகுதி ஆராயப் படவேண்டியுள்ளது 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலே இந்த ஆய்வு முன்னெடுக்கப் பட்ட போதும் இன்னமும் முழுமை பெறவில்லை. எனவே இக்கட்டுரையில் இது பற்றிய சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

## 1 : 1, ஈழத்து இலக்கியவரலாறு எது?

'ஈழம்' என்னும் பெயர் இன்றைய இலங்கைத்தீவின் பழைய பெயராகக்கருதப் பட்டு வந்துள்ளது. ஏனைய இடங்களில் தோன்றிய தமிழ் இலக்கியங்களோடு ஈழத்திலே தோன்றிய இலக்கியங்களையும் இணைத்துத் 'தமிழ் இலக்கிய வரலாறு' எனப் பொதுநிலையிலேயே தகவல்கள் முன்னர் தொகுக்கப்பட்டுள்ளன. பக்தி இலக்கியமான தேவாரங்களைப் பாடிய சம்பந்தரும் சுந்தரரும் தமது பாடல்களில் ஈழத்துத் திருத்தலங்களான திருக்கேதீச்சரம் திருக்கோணேஸ்வரம் பற்றிய பாடல்களையும் அமைத்துள்ளனர். சங்கத் தொகுப்புகளின் பின்னர்இலக்கியத்தரவுகள்என்றநிலையில் இவ்விரு தேவாரப்பதிகங்களும் 'ஒரு சிறுகுறிப்பு' என்ற நிலையிலே தான் உள்ளன. இதனால் 'ஈழத்து இலக்கியவரலாறு' பற்றிய எண்ணமும் ஏற்படவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றுக்காலப் பகுதியிலே தோன்றிய நூல்களும், தெளிவான பதிவுகளாக அமையாமையால் அக்காலகட்டத்திற்கும் தனித்துவம் வழங்கப்படவில்லை. 19 ஆம் நூற்றாண்டிலே மேலைத்தேயக் கல்விமரபும் புதியதொரு சமயமும் தமிழ் இலக்கியங்களின் ஆக்கத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தின. தமிழ் மொழிநடையும் செய்யுளிலிருந்து புதிய உரைநடை வடிவாக மாற்றமடைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் தான் ஈழத்தவருடைய இலக்கிய முயற்சி பற்றிய தகவல் தேட்டமும் தொடங்கியது. எனவே ஈழத்து இலக்கிய வரலாறு ஒன்றை எழுதவேண்டிய தேவையும் ஏற்பட்டது, தமிழிலக்கிய வரலாற்றிலிருந்து ஈழத்து இலக்கியவரலாற்றைத் தனிமைப்படுத்தும் போக்கும் உருவாகியது.

**1 : 2. தமிழிலக்கிய வரலாற்றில் ஈழத்தின் பங்கு :**

ஈழத்திலே நடைபெற்ற இலக்கிய முயற்சிகள் யாவும் இன்னமும் தொகுப்புச் செய்தி நிலையிலே ஒருங்கிணைக்கப்படவில்லை. இங்கு தோன்றிய இலக்கியவடிவங்களின் தனிச்சிறப்பைப் பலரும் அறிய வேண்டும். எனவே அவற்றைப் பற்றிய விரிவான தகவல்களைத் தரும் 'கலைக்களஞ்சியம்', 'நூற்பெயர்', நூலாசிரியர் பெயர் அடைவுகள் ஆக்கப்படவேண்டியுள்ளன. இவற்றின் மூலமே ஈழத்தின் பங்களிப்பைக் கணிப்பீடு செய்ய முடியும். ஈழத்திலே தோன்றிய இலக்கியங்களைவிட இலக்கணமுயற்சிகளும் நடைபெற்றுள்ளன. இவற்றைவிட உரைகளும் பழைய தமிழிலக்கிய இலக்கண நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இவை பற்றிய தகவல்களும் உதிரியாகவே கிடைக்கின்றன. இனிமேல் இவற்றைத் தொகுத்து முழுமையான இலக்கிய முயற்சிகளைப் பதிவு செய்து வைக்கவேண்டும். பதிவுகளின் அமைப்பு 'ஈழத்து இலக்கிய வரலாறு' என்ற பாரிய தொகுப்பு, நூல் வடிவில் அமையும். இந்நூலிலே அமையவேண்டிய செய்திகளைச் சுருக்க நிலையிலே வருமாறு அமைக்கலாம்.

**ஈழத்து இலக்கிய வரலாற்றுத் தொடர் :**

01. ஈழம்பற்றிய வரலாற்றுத் தகவல்களும் பெயர் விளக்கமும்
02. இலக்கியங்களின் (செய்யுள், உரைநடை ) தோற்றத்துக்கான காரணிகளும் சூழலும்
03. இலக்கிய வடிவங்களின் வகைப்பாடும் விளக்கமும்
04. இலக்கண முயற்சிகள் - ஒப்பீட்டாய்வு
05. நூற்பதிப்புமுயற்சிகள் - ஒப்பீட்டாய்வு
06. புதுமையான போக்குகள்
07. உரைநடை நூல்களும் இலக்கிய மதிப்பீடும்
08. அகராதி, கலைச்சொல், ஆக்கமுயற்சிகள்
09. அறிவியல் நூல்களின் தோற்றமும் போக்கும்
10. ஏட்டுச்சுவடிக் காப்பும் சாசனங்களும்
11. பிறமொழி இலக்கியங்கள் - கணிப்பீடு

இத்தகைய செய்தித் தொகுப்பு நூல் வெளியீட்டுக்குத் தனிப்பட்ட நிறுவனம் ஒன்று இன்றியமையாதது. தனியார் வீடுகளில் 'தலைமுறைப் பெருமை' தேடும் நிலையிலே பயன்படுத்தப்படாமல் தூசுபடிந்து கிடக்கும் நூல்களை பலரும் பயன்கொள்ளும் வகையில் இந்நிறுவனத்திலே ஒழுங்காகச் சேர்த்துவைக்க வேண்டும். இந்நிறுவனம் ஈழத்து இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் தகவல்களை வழங்கும் தகவற்களஞ்சியமாக இயங்க வேண்டுவது இன்றியமையாதது. நவீன செய்தித் தொடர்புச் சாதனங்களால் இணைக்கப்பட்டு ஏனைய தமிழ் மொழி ஆய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டதாகவும் இந்நிறுவனம் திகழ வேண்டும்.

**2 : 1 இலக்கிய வரலாறும் மாணவ நிலைகளும் :**

தமிழ்மொழி, இலக்கிய வரலாற்றைக் கற்கின்ற மாணவர்கள் என்னும் போது மூன்று தரப்பட்ட மாணவர்களைக் காணலாம்.

1. கல்விப் பொதுத்தராதர உயர் வகுப்பு மாணவர்கள்
2. பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள்
3. பட்டப்பின்படிப்பு, ஆய்வுப்பட்ட நிலை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று தரத்தினரும் ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கற்கும் போது மூவகையின ரிடையேயும் உள்ள வேறுபாடு தெளிவு படுத்தப்பட வேண்டும் முதலாவது தரத் தினர் ஆசிரிய வழிகாட்டுதல் இன்றி இலக் கிய வரலாற்றைப் படிக்க எண்ணுவது மிகத் தவறாகும். பரீட்சை என்ற இலக் கையே முன்வைத்து இம்மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. எனவே அவர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றின் இன்றிய மையாமையை நன்கு உணர்ந்து கொள்ளும் வண்ணம் கற்பித்தல் நடைபெற வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட ஈழத்து இலக்கிய வரலாற்றுத் தொடரிலே அமையவேண்டிய தகவல்களைப் பற்றி மேலோட்டமாக அறிய வேண்டும். ஏதாவது குறிப்பிட்ட ஈழத்திலே தோன்றிய இலக்கியத்தின் பண் பைப் பாடநூல் நிலையிலே கற்பித்தல் சிறந்தது.

இரண்டாவது தரத்தினர் பட்டம் பெற்றுச் செல்லும் இலக்கினையுடையவர் கள். இன்னும் வருங்கால மாணவர்க்கும் சமூகத்திற்கும் ஈழத்துஇலக்கிய வரலாற்றை அறிமுகம் செய்ய வேண்டியவர்கள். எனவே இவர்களுடைய கற்கை நெறியும், கற்பித் தலும், கற்றலும் ஒழுங்காயமையவேண்டும் கற்கும் கால அளவுக்கேற்ற வகையில் முழு மையான ஈழத்து இலக்கிய வரலாற்றையும் படிக்கவேண்டும். ஆசிரியர் வழிகாட்டலில் மேலதிக தகவல் தேட்டத்திற்கான வழி வகைகள் கற்பிக்கப்பட வேண்டும். தாமாக நூல்களைத் தேடியெடுத்துத் தகவல்களைத் திரட்டும் ஆற்றல் பெறவேண்டும். தமிழி லக்கிய வரலாற்றிலே ஈழத்து இலக்கிய வரலாறு ஒன்றியும் வேறுபட்டும் அமைவ தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது தரத்தினர் சிறப்பு நிலை யாக ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆழ, அகலக் கற்பவர்கள். ஒப்பீட்டு நிலையிலும் கணிப்பீட்டு நிலையிலும் புதிய அணுகு முறைகளை இவர்கள் அறிமுகம் செய்ய வேண்டியவர்கள். ஈழத்து இலக்கிய வரலாற் றுச் செய்திகளை ஈழத்துக்கு வெளியே கொண்டு செல்பவர்களும் இவர்களே. இன்று ஈழத்து வரலாறு தெளிவாக எழுதப் படுவதற்குத் தேவையான உண்மைத் தக வல்களை இவர்களே தரவல்லவர்களாவர். பிறர் செய்ய விரும்பும் பல ஆய்வுகளுக் குரிய சான்றுகளையும் இதனால் வெளிக் கொணர முடியும். ஈழத்து இலக்கிய வர லாற்றையும் படிக்க வேண்டும் என்ற கட் டாயத்தை இத்தரத்தினருடைய ஆய்வுகள் ஏற்படுத்த வேண்டும். இதுவரையிலும் அறி யப்படாமலும் தெளிவுபடுத்தப்படாமலும் இருப்பவற்றையும் வெளிக்கொணரும் பணி யும் இவர்களுடையதேயாகும்.

### 2 : 2 கற்பித்தல் தொடர்பான சிக்கல்களும் தீர்வுகளும் :

'ஈழத்து இலக்கிய வரலாறு' புதிய பாடநெறியாக மாணவராலும் ஆசிரியர்க ளாலும்கருதப்படுகின்றது. முற்காலங்களிலே தமிழிலக்கிய வரலாற்றுக் கற்கை நெறியிலே ஒரு சிறு பகுதியாகவே இருந்தது. தற்போது தனியான பாடநெறியாகிவிட்டது. போதிய நூல்கள், குறிப்புகள் தொகுக்கப்படாமை யால் அவற்றைத் தேடுகின்ற பணியும் ஆசிரியர்களுக்குப் பெருஞ்சுமையாக உள் ளது. பல தகவல்கள் அழிந்துவிட்டன. இதனால் ஆசிரியர்கள் இக்கற்கை நெறி யைப் புறக்கணிக்கவும் முற்படுகின்றனர். மாணவ நிலையிலே மாணவர்கள் எளிதான கற்கையையே விரும்புகின்றனர். அதனா லும் ஆசிரியர்கள் அல்லற்படுகின்றனர். நூலகங்களிலும் ஈழத்து இலக்கியங்களின் பிரதிகள் வெகு குறைவாகவே உள்ளன. ஈழத்துக்கு வெளியேயும் ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வுகள்மிகவும் அருகியே காணப்படுகின்றன. தனிப்பட்டோர் கைக ளிலே முடங்கிக் கிடக்கும் செய்திகளையும் ஆசிரியர்கள் பெற வாய்ப்பற்றுள்ளனர். இச்சிக்கல்களை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.

ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய செய்திகளைத் தொகுக்கும் முயற்சியில் உடனடியாக மாணவரும் ஆசிரியர்மாரும் ஈடுபட வேண்டும். மூலைக்கு மூலை சென்று எறையான்களுக்கு இலக்காகிக் கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நூல்களையும் பழைய ஏட்டுச்சுவடிகளையும் மீட்டெடுக்க வேண்டும். அவற்றை ஒழுங்கு படுத்தி ஒரிடத்திலே தொகுத்து வைக்கவேண்டும். "ஈழத்து இலக்கிய ஆய்வு நிறுவனம்" என ஒரு ஆய்வு நிறுவனம் நிறுவப்பட வேண்டும். மாணவர் தேவைகளையும் இந்நிறுவன மூலமே நிறைவு செய்ய முடியும்.

இன்றைய மாணவர்கள் இலக்கியக் கல்வியை இருபத்தோராம் நூற்றாண்டின் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் ஆற்றலோடு கற்பராயின் அதன்மேல் விருப்பம் கொள்வர். கணிப்பொறியிலே தமக்குத் தேவையான தகவல்களைத் தாமே பெற்றுக் கொள்வர். ஏட்டுப் பிரதியின் எழுத்துப் பற்றிய ஆய்வுகள் இன்று கணணியிலே நடைபெறுகின்றன. செவ்வி நிலையிலும் சேகரிப்புக்கள் நடைபெறவேண்டும். தமிழ் மொழியின் தனிச்சிறப்பியல்புகள் ஈழத்து இலக்கியங்களுள்ளே புதைந்து கிடப்பதை வெளியுலகமும் அறிய வைப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

இலக்கியக்கல்வி மாணவருக்கு இன்றியமையாதது. இலக்கியம் காட்டும் சமூக அமைப்பை எமது தலைமுறையினரும் அறிய வழி செய்ய வேண்டும். இப்பணியிலே மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து அவரவர் நிலையுணர்ந்து ஏற்ற பணிகளைச் செய்து எமது தமிழ் மொழியை வளம் பெறச் செய்ய வேண்டும்.

---

பொன் விழாக் காணும்
**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**

வாழ்க! வளர்க!

புதிய டிசைன்களில்
ஆபரணங்களைச் செய்யச்
சிறந்த இடம்




**லக்சுமி**

**நகைமாடம்**

312 (224) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# பொன்விழாப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள்

## I கீழ்ப்பிரிவு

| போட்டி | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 01. பேச்சு | ம. மயூரி | சி. ஞானப்பிரியா | சி. சிவறமணி |
| 02. பொது அறிவு | இ. சதானந்தன் | ச. பிரகாஸ் | பு. யசோதரன் |
| 03. பண்ணிசை | ம. சுதர்சன் | க. ஜதீசன் | பா. பிரசாந் |
| 04. மாலைகட்டுதல் | சி. கிவரஞ்சினி | நா. விஜிதா | மு.ஜெகதாரணி |
| 05. சிற்பம் | க.கிருஷ்மேனன் | சி. சகுந்தகுமார் | ஜெ. யாழினி |
| 06. கட்டுரை | இ. நிரூபன் | கு. ஜீவிதா | ப. சதீஸ் |
| 07. திருக்குறள் மனனம் | சி. ஞானப்பிரியா | இ. பவித்திரா | ச. பிரகாஸ் |
| 08. மாக்கோலம் | கோ.கஜேந்திரன் | மு ஜெகதாரணி | பா. பிரசாந் |
| 09. தேங்காய்ப்பூக் கோலம் | ச. சர்மினி | நா. டனிஸ்ரா | ந. மேரிஜீன் |
| 10. அலங்காரக் கோலம் | ப. ஜெயபாரதி | ச. பிரகாஸ் | ச. ஞானவதனா |
| 11. கண்காட்சி — பொது அறிவு | தி. கவீபன்<br>வ. சிறீகாந் | | சி. சிவதீபன் |

## II மத்திய பிரிவு

| போட்டி | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 01. பேச்சு | நா. மகாதிலக லட்சுமி | தி. சுபாகினி | ச. சிவதர்சினி |
| 02. பொது அறிவு | தி. பற்றிக்குறூஸ்<br>த. நெடுமாறன் | | க. கார்த்தி கேயன் |
| 03. பண்ணிசை | க. றெஜிதா | | தி. றஜிதா |
| 4. மாலைகட்டுதல் | கா. ஜெயபாரதி | க. சாந்தசக்தி | இ. தர்மினி |
| 05. சிற்பம் | ப. விஸ்ணுதரன் | த. பிரசன்னா | அ. பிரதீபன் |
| 06. கட்டுரை | சி. கவீபன் | பா. சோபா | பா. ஹென்ஸ் குகன் |
| 07. திருக்குறள் மனனம் | நா. மகாதிலக லட்சுமி | சி. கவீபன் | பா. சாந்தினி |
| 08. மாக்கோலம் | க. சாந்தசக்தி | க. தாட்சாயினி | இ. தர்மினி |
| 09. தேங்காய்ப்பூக் கோலம் | த. தசரதன் | ச. சிவதர்சன் | தி. சுமித்திரா |
| 10. அலங்காரக் கோலம் | அ. சுமன் | ச. சுமிந்தன் | தி. றஜிதா |
| 11. கண்காட்சிப் பொது அறிவு | த.விஜயறமணன் | த. சுகதாசன் | க. மாலினி |

## மேற்பிரிவு

| போட்டி | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 01. பேச்சு | ஜெ.ராஜமல்லிகை | க. மாலினி | ம. மைதிலி |
| 02. பொது அறிவு | ம. மயூரன் | ஜெ. ராஜ மல்லிகை | வ றதீஸ்காந்<br>கு. தர்சினி |
| 03. பண்ணிசை | க. தர்மயோகினி | க. ராதிகா | க. சித்திரா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | மாலைகட்டுதல் | ப. கிரிதரன் | க. தர்மயோகினி | சோ. சோபா |
| 05. | சிற்பம் | க. நந்தாமிர்தேஸ் | அ. பகீரதன் | செ. பன்னீர்ச் செல்வன் |
| 06. | கட்டுரை | ஜெ. ராஜமல்லிகை | ம. சுபாஸ்கரன் | ம. மயூரன் |
| 07. | திருக்குறள் மனனம் | மு. யௌவனரூபி | | |
| 08. | மாக்கோலம் | ம. தாரகா | சோ. சோபா | க. நந்தாமிர் தேஸ் |
| 09. | தேங்காய்ப்பூக் கோலம் | ச. கலாவதி | பு. கஜேந்தினி | சி. சிவதர்சன் |
| 10. | அலங்காரக் கோலம் | நே. டொறின் நிசாமினி | சு. தமிழினி | அ. மீரா |
| 11. | கண்காட்சிப் பொது அறிவு | மு. சதீஸ்குமார் | பா. செந்தூரன் சு. சர்மிலா | |

## அதிமேற் பிரிவு

| | போட்டி | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 01. | பேச்சு | சி. தயாபரன் | ச. ஜெயலட்சுமி | ச. தர்சினி |
| 02. | பொது அறிவு | சி. தயாபரன் | பொ. துஸ்யந்தி | ச. சுகந்தினி |
| 03. | பண்ணிசை | ஆ. றஜீனா | த. சுதர்சினி | ச. சுகந்தினி |
| 04. | சிற்பம் | சி. சர்வதாஸ் | ஜோ. பற்றிக்யூட்ஸ் | பா. சுதர்சன் |
| 05. | கட்டுரை | சி. தயாபரன் | இ. கார்த்திகா | பொ. துஸ்யந்தி |
| 06. | திருக்குறள் மனனம் | சி. தயாபரன் | ஜெ. லட்சுமணன் | பொ. துஸ்யந்தி |
| 07. | மாக்கோலம் | ச. சுகந்தினி | கோ. கௌரீஸ்வரி | மு. சதீஸ் குமார் |
| 08. | தேங்காய்ப்பூக் கோலம் | த. சுதர்சினி | த. சுகந்தி | சு. சுகன்யா |
| 09. | அலங்காரக் கோலம் | சொ. லோகிதா | ம. சகிதா | பு. தயாளினி |

# திறந்த போட்டிகள்

| போட்டி | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| நடனம் | சி. சிவரஞ்சினி | சி. சிவதர்சினி | க. தர்மினி |
| குழுநடனம் | ஜோதி இல்லம் | கீர்த்தி | சக்தி |
| தனிநடிப்பு | ச. சர்வதாஸ் | சி. சிவரஞ்சினி | மு. சதீஸ்குமார் |
| முதலுதவி | வ. சாருமதி | டெனிஸ்கமல்ராஜ் | பு. தயாளினி சு. சுயாதா |

## பூப்பந்து

| | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 17 வயதின்மேல் ஆண்கள் | ஜோ. பற்றிக்யூட்ஸ் | ஜெ. லக்ஸ்மணன் | செ. சசீதரன் |
| 17 வயதின்கீழ் ஆண்கள் | கு. டெனிஸ் கமல்ராஜ் | த. சுகதாசன் | கு. பகீரதன் |
| பெண்கள் | ம. தாரகா | அ. மீரா | பா. ரூபா |

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Golden Jubilee English Day Competitions

## Speech

| | 1st Place | 2nd Place | 3rd Place |
|---|---|---|---|
| Year 6 | S. Gnanapriya | M. Myuri | C. Sivaraman |
| Year 7 | R. Pavithra | S Pragash | A. Marydean |
| Year 8 | B. Soba | | S. Thulasi |
| | M. Thivahri | | |
| Year 9 | S. Rajanimala | S. Sridevi | N Nishandansan |
| Year 10 | R. Rajamallikai | K. Chitra | T. Rasitha |
| Year 11 | R. Rathika | K. Malini | L. Sathees |
| A/L 99 | B. Yasotha | S. Suganthini | T. Tharsini |
| A/L 98 | S. Suganya | T. Tharmaranjini | |

## Poem

| | 1st Place | 2nd Place | 3rd Place |
|---|---|---|---|
| Year 6 | S. Gnanapriya | T. Tharsha | S. Sarmini |
| Year 7 | N. Maryjean | S. Pragash | R. Pevithra |
| Year 8 | S. Thulasi | B. Shanthini | M. Thivahari |
| Year 9 | S. Rajanimala | S. Niranjani | T. Subajini |
| Year 10 | J. Jeren | K. Chitra | M. Javanaruby |
| Year 11 | S Banureka | K. Siamini | |
| A/L 99 | S. Suganthini | T. Tharsini | B. Yasotha |
| A/L 98 | S. Thayaparan | S. Sarvathas | M. Thushyadevi |

## Spelling

| | 1st Place | 2nd Place | 3rd Place |
|---|---|---|---|
| Year 6 | R. Menaka | V. Ramya | B. Sujutha |
| Year 7 | R. Pavithira | N. Maryjean | P. Sutharneya |
| Year 8 | T. Rajanikanth | S. Sasikaran | B. Shoba |
| Year 9 | J. Srithevi | N. Nisandansan | T. Sushama |
| Year 10 | J Rajamallikai | M. Javanaruby | K. Chitra |
| Year 11 | K. Siaminy | R. Valarmathi | J. Jeranmeldan |
| A/L 99 | S. Suganteini | N. Sivamathy | V. Sarumathy |
| A/L 98 | S Thayaparan | T. Tharmaranjini | K. Yokasakthy |
| A/L 97 | P. Teushyanthi | S. Jeyalukkumy | |

## Hand Writing

| | 1st Place | 2nd Place | 3rd Place |
|---|---|---|---|
| Year 6 | S. Anitha | S. Pulorendipa | R. Menaka |
| Year 7 | R. Jeyagowri | S. Ragulan | P. Jasotharan |
| Year 8 | K Santhasakthy | M Kirupalini | S. Priya |
| Year 9 | R. Haren | K. Sushama | N. Rubajancy |
| Year 10 | P. Jegatheepan | T. Piragas | N Vijinthan |
| Year 11 | R Rathika | A. Meera | R. Kularanjini |
| A/L 99 | S. Suganthini | R. Subajini | M. Jegananthiny |
| A/L 98 | S. Sarvathas | A. Sinthuja | M. Satheeskumar |
| A/L 97 | T. Pratheep | M. Sebatheepan | S. Sutharsini |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் போட்டி
## சாம்பியன் வீரர்கள்

| | | இல்லம் |
|---|---|---|
| 13 வயதின்கீழ் ஆண் | அ. சிறினிவாஸ் | சாந்தி |
| பெண் | ஜெ. ஞானவதனா | சக்தி |
| 15 வயதின்கீழ் ஆண் | அ. சுமன் | சக்தி |
| பெண் | நா. மகாதிலகலட்சுமி | ஜோதி |
| 17 வயதின்கீழ் ஆண் | கு. டெனிஸ்கமல்ராஜ்<br>த. சுகதாசன் | கீர்த்தி |
| பெண் | இ. ரசிந்திலா | ஜோதி |
| 19 வயதின்கீழ் ஆண் | ச. சர்வதாஸ் | சக்தி |
| பெண் | ந. சிவமதி | கீர்த்தி |
| 19 வயதின்மேல் ஆண் | வ. பாலமுரளி | சாந்தி |
| பெண் | ம. யூக்கலிஸ்ரா | கீர்த்தி |

## மாலைகட்டற் போட்டி

| | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| அதிமேற் பிரிவு | ச. சசிகலா | க. சதீஸ்குமார் | மு. குமாரினி |

**கரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 17 வயதின் கீழ் | ஆண் | ம. மயூரபாலன் | க. சதீஸ் | |
| | பெண் | ம. தாரகா | சி. சிவதர்சினி | இ. மைதிலி |
| 17 வயதின்மேல் | ஆண் | சி. ஐங்கரன் | க. சுரேன் | க. கஜரூபன் |
| | | ச. நிரோஜன் | சி. ராஜ்குமார் | அ. கஜனராஜ் |
| | பெண் | த. ஜெயந்தினி | ச. சுகந்தினி | சு. சர்மிளா |

## தமிழ்த்தினப் போட்டி

| | |
|---|---|
| 4ஆம் பிரிவு பேச்சு : | ஜெ. இராசமல்லிகை<br>முதலாம் இடம் வலயமட்டம்<br>மூன்றாம் இடம் மாகாணமட்டம் |
| 2ஆம் பிரிவு தனிநடனம்: | செல்வி சி. சிவரஞ்சினி<br>முதலாம் இடம் வலயமட்டம் |

## சதுரங்கப் போட்டி

| பிரிவு | முதலாம் இபம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| 17 வயதின் கீழ் ஆண் | ப. அஞ்சலோபெகின் | ப. ஜெகதீபன் | ஐ. ஜெரேன் |
| 17 வயதின் கீழ் பெண் | ஜெ. ராஜமல்லிகை | ம. தாரகா | சி. சிவதர்சினி |
| 17 வயதின் மேல் ஆண் | பு. பிரதீபன் | து. பிரதீப் | ஞா. கஜந்தன் |
| 17 வயதின் மேல் பெண் | ச. சுகந்தினி | க. பகீரதி | |

## கிளித்தட்டுப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 13 வயதின் கீழ் ஆண் | சாந்தி இல்லம் | சக்தி இல்லம் | கீர்த்தி இல்லம் |
| 13 வயதின் கீழ் பெண் | சக்தி இல்லம் | ஜோதி இல்லம் | கீர்த்தி இல்லம் |
| 15 வயதின் கீழ் ஆண் | ஜோதி இல்லம் | சக்தி இல்லம் | கீர்த்தி இல்லம் |
| 15 வயதின் கீழ் பெண் | சாந்தி இல்லம் | கீர்த்தி இல்லம் | ஜோதி இல்லம் |
| 17 வயதின் கீழ் ஆண் | ஜோதி இல்லம் | கீர்த்தி இல்லம் | சக்தி இல்லம் |
| 17 வயதின் கீழ் பெண் | ஜோதி இல்லம் | சக்தி இல்லம் | கீர்த்தி இல்லம் |
| 17 வயதின் மேல் ஆண் | சக்தி இல்லம் | சாந்தி இல்லம் | கீர்த்தி இல்லம் |
| 17 வயதின் மேல் பெண் | ஜோதி இல்லம் | கீர்த்தி இல்லம் | சாந்தி இல்லம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் இறைக்கும் யந்திரங்கள் சம்பந்தமான

சகல தேவைகளுக்கும்

நாடவேண்டிய இடம்

**AGRO INDUSTRIAL Engineering Works**

Courts Road, **Mallakam**.

* * *

தவம் யத்திரத் தொழிலகம்

*Branch:* Thavam Engineering Works

Pallaly Road, **Kondavil**



வாழ்க! வளர்க!

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

**RAVE MOTORS**

* * *

ரவி மோட்டோஸ்

Dealers in Motor Cycles Spares

*245*, Stanly Road, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது இடப் பெயர்வுக்கு ஒரே மேடையில்
3 1/2 லட்சம் ரூபா திரட்டிய



"மேலும் கீழும்" தாளலய நாடகத்தில்




அதிபரும் ஆசிரியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சகலவிதமான பலசரக்குப் பொருள்கள்
* தானியங்கள், பால்மா, இனிப்பு வகைகள்
* பாடசாலை உபகரணங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
நிதான விலையில் வாங்கிக் கொள்ள
இன்றே நாடுங்கள்

↓

**நாதன் சகோதரர்**

K. K. S. வீதி, இணுவில்.



* பலசரக்குப் பொருட்கள்
* சைக்கிள் உபகரணங்கள்
* பாடசாலை மாணவரின் உபகரணங்கள்
* கோழித்தீன் வகைகள்

என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளச்
*சிறந்த ஸ்தாபனம்*

↓

**ராஜா களஞ்சியம்**

*உப்புமடம் சந்தி,*
கோண்டாவில் மேற்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுங்கள் ★ விரையுங்கள் ★

வடமாகாணத்தில் உடைதயாரிக்கும் நிலையத்தை
உன்னத முறையில் நடாத்தி
குறைந்த செலவில் சிறந்த தயாரிப்புக்களை
மக்கள் கவரும் முறையில் தயாரித்து வழங்கும்
ஒரேயொரு கூட்டுறவு நிறுவனம்

**பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**

பண்டத்தரிப்பு
*தரம், குணம், மணம் என்பவற்றில்*
உடலுக்கும் உணவிற்கும் உகந்தது
**"பண் கோப் நல்லெண்ணை"**
உற்பத்தியாளர்கள்

**பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**

யா / வயாவிளான் வித்தியாலய
*பொன் விழா மலர் சிறப்புற எமது*
**நல் வாழ்த்துக்கள்**

★ ★ ★

# வினோ நகைப் பூங்கா

தங்க, வைர
நகை வியாபாரம்

**நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்**





*உரிமையாளர் :*
சடாட்சரம்
புவிச்சந்திரன்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

22, கரட் தங்க நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூபா

தரமான உள்ளூர் உற்பத்தியான இனிப்பு வகைகளை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய இடம்

## ⁕ றூபா பல்பொருள் அங்காடி ⁕

றூபா பல்பொருள்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

றூபா இனிப்புத் தொழிலகம்
சின்னக்கோயில் தெரு,
இருபாலை,
கோப்பாய்.

Phone: 23506

பிரபா படப்பிடிப்பு கலையகம

## PERAPA PHOTO

தரமான கறுப்பு வெள்ளைப்

புகைப்படங்களுக்கு

சிறந்த இடம் பிரபா உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்

உரிமையாளர்
பொ. பாலசிங்கம்
மாசிவன்,
நீர்வேலி வடக்கு.

108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தரமானதும், மலிவானதுமான நுகர்ச்சிப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

★ குறைந்த செலவில் விரைவாகப் பொருட்களை ஏற்றி இறக்க வேண்டிய லொறிச் சேவைக்கு நாடுங்கள்

★ உங்கள் பணச் சேமிப்புக்களைப் பாதுகாப்பாகவும், கூடிய வட்டியையும் பெறுவதற்கு எமது கிராமிய வங்கியை நாடுங்கள்

# அளவெட்டி மல்லாகம்

# ★——ப. நோ. கூ. சங்கம்

*தற்போதைய முகவரி :*

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்
*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில்.*

---

⁕ தரமான, மலிவான உணவு வகைகளுக்கு இன்றே நாடுங்கள்

**எமது உணவகம்** பிரதான வீதி, சங்கானை.

★ ★ ★

⁕ தரமான பாண், கேக், பிஸ்கற் வகைகளுக்கு

**எமது வெதுப்பகம்** அராலி வீதி, வட்டுக்கோட்டை

★ ★ ★

⁕ தரமான பப்பட வகைகளுக்கு இன்றே நாடுங்கள்

**எமது பப்படவகைகள்** மொத்த விற்பனை நிலையம், சங்கானை.

★ ★ ★

# சங்கானை ப. நோ. கூ. சங்கம்

## சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் விழாக் கண்டு பொலிவுற்றோங்கும்

வயாவிளான் ம. ம. வி.

வாழ்க! வாழ்க! பல்லாண்டுவாழ்க.

✳ ✳ ✳

வலிவடக்கின் துயர்துடைக்க

வாருங்கள்

சேர்ந்துழைப்போம்

"கூட்டுறவே நாட்டுயர்வு"

தெல்லிப்பழை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பொன் விழாக் காணும்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

வாழ்க! வளர்க!

★ ★ ★

வளர்ந்த

வளர்கின்ற

வளரும்

நாடுகளின் உயிர் நாடியாக

விளங்குவது

கூட்டுறவு

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி-கிழக்கு (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.

★ பாண். பணிஸ், கேக் போன்றவற்றிற்கு
— கூட்டுறவு வெதுப்பகம், கோப்பாய்

★ வங்கிச் சேவைகளுக்கு
— கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி கிராமிய வங்கிகள்

★ பால், தேனீர், குளிர்பானம், சிற்றுண்டிகளுக்கு
— கூட்டுறவு சுவையகம், நீர்வேலி

★ விவசாய உபகரணங்கள், கனரக பொருட்களுக்கு
— இரும்பு விற்பனை நிலையம், நீர்வேலி.

★ வீட்டு வைபவங்களுக்கு வேண்டிய வாடகைக் கதிரைகளுக்கு
— இரும்பு விற்பனை நிலையம், நீர்வேலி.

★ சிறுவர், ஆடவர், பெண்களின் துணிவகைகள் பாடசாலை உபகரணங்கள், அலங்காரப் பொருட்களுக்கு
— மாதிரி விற்பனை நிலையம், நீர்வேலி.

★ சகல விதமான நுகர்வுத் தேவைக்கும் மொத்த, சில்லறை விற்பனை நிலையங்கள்
— அச்செழு, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், ஊரெழு.

★ வாகன சேவை
— நீர்வேலி மொத்த நிலையம்

★ எரிபொருள் தேவைக்கு
— கோப்பாய் எரிபொருள் விற்பனை நிலையம்

★ கட்டிடப் பொருட்களுக்கு
— இரும்பு விற்பனை நிலையம், நீர்வேலி.

★ மக்கள் சேவையே வலி-கிழக்கு
(தெ. ப.) ப. நோ. கூ. சங்கச் சேவை

★ கூட்டுறவே நாட்டுயர்வு ஆதரவாளர்க்கு

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**



UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

ARCHIVES

250137

University of Jaffna
250137
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப்

பொன் விழா

சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

## சுன்னாகம் ப. தெ. வள அ கூ. சங்கம்

பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்கள்.

---

வயாவிளான் ம. ம. வித்தியாலயம்

பல்லாண்டு வாழ்க.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 FEB 2001
PERIODICALS DIVISION

" கூட்டுறவே நாட்டுயர்வு "

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஆடியபாதம் வீதி,

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குவிர்ந்து வளர்க கூட்டுறவு"

பொன் விழாக் காணும்

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

மேன் மேலும் வளர்ந்து கல்வியிற் சிறப்படைய

## வாழ்த்துகின்றோம்

- ★ யாழ் மாவட்ட அங்கத்துவ சங்கங்களூடாக
- ★ விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள்
- ★ உள்ளூர் உற்பத்திகள்
- ★ சந்தைப்படுத்தல்
- ★ நுகர்ச்சிப் பொருட்கள், புடைவை வகைகள்,
- ★ கூட்டுறவு விவசாய சேவைகள்
- ★ சந்தைப்படுத்தல் சேவைகள்
- ★ சமாசம்

## யாழ். மாவட்ட விவசாய உற்பத்திச் சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இல. 111, பிரதான வீதி — யாழ்ப்பாணம்

அட்டைப் பதிப்பு : ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org